பக்கங்கள்: இருபத்தெட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 25 புதன் கிழமை (10.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 257



14 இனியாவது வாய்த்திறக்கட்டும் அரசு



21 கோத்தபாயவை கண்டிக்க வேண்டும்



25 சாதித்தது சிம்பாப்வே



## அரசு அரங்கேற்றும் திட்டமிட்ட இனஒழிப்பு போர்க்குற்றங்களை விடப் பயங்கரமானது

### நாடாளுமன்றத்தில் மாவை எம்.பி. நேற்று ஆவேசம்

கோட்டே, ஒக. 10

தமிழ் மக்களின் தாயக பூமியில் இருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும். எமது மக்கள் தங்கள் சொந்த மண்ணில் சொந்த வீடுகளில் வாழவேண்டும். அரசு மேற்கொள்ளும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்பதை எமது மக்கள் மீண்டும் வலியுறுத்தி உள்ளனர். தமிழ் மக்களின் உணர்வுகள் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் மூலம் தீர்ப்பு அளித்துள்ளன. இதனை இந்த அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று நாடாளுமன்றத்தில் அரசுக்கு அறை கூவல் விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தின்போது உரையாற்றிய வேளையிலேயே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

அவசரகாலச் சட்டத்தை கைகளில் வைத்துக்கொண்டு, இராணுவ பலத்துடன் இன ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரமாக்கி உள்ளது.

இதற்கு உதவியாக ஜனாதிபதியின் கட்டளையை பிரதமர் இந்தச் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

யுத்தம் முடிந்துவிட்டது; பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று கூறுகின்றீர்கள். அப்படியானால், எதற்கு அவசரகாலச் சட்டம்?

பக். 27

## அவசரகாலச் சட்ட நீக்கம் விரைவில்

### நாடாளுமன்றில் பிரதமர் உறுதியளிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 10

**"அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்குவது தொடர்பாக அரசு தற்சமயம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி மிக விரைவில் இதற்கான பிரேரணை நாடாளுமன்றில் கொண்டுவரப்படும். தற்போது அவசரகாலச் சட்டத்திலிருந்த 35 சரத்துகள் நீக்கப்பட்டுள்ளன. 12 சரத்துக்கள் திருத்தப்பட்டும், ஒரு சரத்து மாற்றியமைக்கப்பட்டும் உள்ளன. சட்டத்தை முற்றாக நீக்குவதற்காக பாதுகாப்புச் சபையின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது" என்று பிரதமர் டி.எம். ஜயரத்ன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.**

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணையை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-


வடக்கில் ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துமாறு கோரி 30 வருடங்களுக்குப் பின்னர் வடக்கு மாகாண மக்கள் கடந்த 23ஆம் திகதி நடந்த தேர்தலில் வாக்களித்தனர். தீவிரவாதத்தால் ஏற்பட்ட இழப்புக்களை அந்த மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி வரை சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டோரில் 8 ஆயிரத்து 491 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இதில், 2 ஆயிரத்து 122 பெண்களும், 594 சிறுவர்களும் அடங்குவர். அத்துடன், 3 ஆயிரத்து 173 பேர் தற்சமயம் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் மிக விரைவில் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது செயற்படாதபோதிலும், அந்த இயக்கத்தை இயங்க வைப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை அரசை பிரச்சினைகளுக்குள் வீழ்த்துவதற்கு சர்வ

பக். 27

எரியும் மா நகரம்



தெற்கு லண்டனின் குரொய்டன் என்ற இடத்தில் உள்ள மூலைக் கட்டடம் ஒன்று கலவரக்காரர்களால் தீ மூட்டப்பட்டது. முழாசி எரியும் தீயைக் கட்டுப்படுத்த வழி தெரியாது திணறுகின்றனர் பொலிஸார்.

## தமிழரை லண்டனிலும் துரத்தும் இடம்பெயர்வு

### வன்முறை அச்சத்தை அடுத்து இந்த நிலை

லண்டன், ஒக. 10

பிரிட்டனின் பல நகரங்களில் கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ந்த வன்முறைகள் நேற்று மேலும் பல இடங்களுக்குப் பரவின. இதனால் லண்டன், பேர்மிங்ஹாம், லிவர்பூல், மான்செஸ்டர், பிரிஸ்டல் ஆகியவை உள்ளிட்ட பல முக்கிய நகரங்கள் பதற்றத்தில் மூழ்கி உள்ளன. இந்த நகரங்களில் உள்ள தமிழர்கள் அச்சம் காரணமாகத் தமது உடைமைகளுடன் இடம்பெயர்கின்றனர்.

''இங்கே நிலைமை மோசமாக இருக்கிறது. கண்ட இடங்களில் எல்லாம் கட்டடங்களும் கார்களும் எரிகின்றன. பதற்றமான சூழல்தான் எல்லா இடங்களிலும் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் போர்க் காலத்தை ஞாபகப்படுத்துவதாக இருக்கின்றது'' என்று லண்டனில் பணியாற்றும் யாழ்ப்பாணத்து

பக். 27

### கல்விச்சுடர்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படி முறைப் பரீட்சை இல.13 இன் வினாத்தாள்-I இன்றைய உதயனின் 16, 17 ஆம் பக்கங்களில் வெளியாகி உள்ளது.

## சுடர் ஒளி பத்திரிகை ஸ்தாபக உறுப்பினர் ரவிதரன் காலமானார்



யாழ்ப்பாணம், ஒக. 10

*உதயன்* பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையாக கொழும்பில் இருந்து வெளிவரும் *சுடர் ஒளி* பத்திரிகையின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும் மற்றும் விநியோகம், அச்சகப்பகுதி முகாமையாளராகக் கடமையாற்றியவருமான நடேசபிள்ளை ரவிதரன் காலமாகிவிட்டார்.

அன்னார் *உதயன், சுடர் ஒளி* பத்திரிகைகளின் நிர்வாக முகாமையாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.

பக். 27

## போர்க் குற்றம் நிகழ்ந்தமை கோத்தபாயவுக்கும் தெரியும்

### சுட்டிக்காட்டுகிறது அமெரிக்கா; அனைத்துலக விசாரணைக்கும் ஆதரவு

வோஷிங்டன், ஒக. 10

வன்னிப் போரின் போது போர்க் குற்றங்கள் நிகழ்ந்தன என்பது இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குத் தெரியும் என்ற சாரப்படக் கருத்துத் தெரிவித்துள்ளது அமெரிக்கா.

''போரின் போது இடம்பெற்றதாக எழுப்பப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரசுகூட விசாரணை நடத்தி வருகின்றது என்பது அவருக்கும் (கோத்தபாய) தெரியும். எனினும் அனைத்துலக விசாரணை ஒன்று தேவை என்றே நம்பப்படுகிறது. அதுதான் எல்லோருடைய விருப்பமும்கூட'' என்று தெரிவித்தார் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள பிரதிப் பேச்சாளர் மார்க் ரோனர்.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்றன அனைத்துலக விசாரணை கோருவது நியாயமற்ற செயல் என்று இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவித்த கருத்துக் குறித்துக் கேட்டபோதே அமெரிக்கப் பேச்சாளர் இதனைக் கூறினார்.

''இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக்கூறும் செயல் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்று நாம் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றோம். விசாரணைகளுக்கும் பொறுப்புக்

பக். 27

## கருணாநிதி கண்டனம்

சென்னை, ஒக. 10

தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அரசியல் இலாபத்திற்காகவே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவளிக்கின்றனர் என இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளமை முற்றிலும் தவறு என்று திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

''தி.மு.க. அரசியல் இலாபத்திற்காகத்தான் அதைச் செய்கிறது என கோத்தபாய கருதினால், அது முற்றிலும் தவறானது. ஏனெனில் ஈழத் தமிழர்களுக்காகத் திமுக நீண்டகாலமாகப் போராடுகிறது. தி.மு.க.,

பக். 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியா அல்ல அமெரிக்கா தீர்வுடன் வந்தாலும் முஸ்லிம்கள் உள்வாக்கப்படாவிடில் விடமாட்டோம்

இலங்கைக்கு எதிராக சர்வ தேச மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் தவறான பிரசாரங் களை முறியடித்து நாட்டின் மீது சுமத்தப்பட்டுவரும் அவப் பெயரை நீக்குவதற்கு பொது நலவாய நாடுகளின் நாடாளு மன்ற சங்கங்களின் தலைமைப் பதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது நாட்டுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பையும் சந்தர்ப்பத்தை யும் உரிய வழியில் பயன்படுத் திக் கொள்ள வேண்டும் என்று கூறினார் பிரதமர் டி.எம்.ஜயரத்ன.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் 57 ஆவது கூட்டத் தொடரில் சபா நாயகர் இம்முறை தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு இந்தச் சங்கத்தின் வருடாந்த மாநாடு இலங்கையிலேயே நடைபெற வுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத் தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ வுக்கு நாடாளுமன்றத்தில் வர வேற்பளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாடா ளுமன்றத்தில் அங்கம் வகிக் கும் அரசியல் கட்சிகளின் தலை வர்களும் சபாநாயகருக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ தலைமையில் ஆரம்ப மாகியது.

இந்தவேளையில் சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா, எமது சபாநாய கர் சமல் ராஜபக்ஷ பொதுநல வாய நாடுகளின் கூட்டத்தில் இந்த சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது எமது நாட்டுக்குக் கிடைத்த பெரிய கௌரவமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் சார்பில் வாழ்த்துத் தெரி வித்தார்.

### ஒரே குடும்பத்தில் ஒன்பது அரசியல் பிரபலங்கள்

நாடாளுமன்றில் சபாநாயக ரைப் பற்றிக் குறிப்பிட்ட பிரத மர் டி.எம்.ஜயரத்ன இலங்கை யின் வரலாற்றில் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் அரசியல் பிரபலங்களாகத் தோன் றிய ஒரே குடும்பம் ராஜபக்ஷ குடும்பம் என்ற பெருமையைக் கொண்டுள்ளது. இந்த வரிசை யில் நமது சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இன்று பொதுநல வாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது நமது நாட் டுக்குக் கிடைத்த பெருமை.

நமது நாடாளுமன்றக் குழு வின் பொதுநலவாய நாடுக ளின் மாநாட்டில் கலந்து கொள் ளச் சென்றபோது சில கசப்பான விடயங்களும் இடம்பெற்றன தான். எனினும் இவற்றை எல் லாம் மிஞ்சும் வகையில் அந்தச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த உயர்ந்த பதவியின் மூலம், இதுவரை நமது நாட்டுக்கு எதிராக மேற்கொண்டிருந்த பிரசாரங்களையும் சவால்களை யும் முறியடித்து நாட்டுக்கு நற் பெயரை ஏற்படுத்தக் கிடைத்த ஒரு நல்ல சந்தரப்பமாகக் கொள்ள வேண்டும் என்றார் பிரதமர்.

### எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும்

பொதுநலவாய நாடுகள் நமது சபாநாயகரைக் கௌர வித்துள்ளதை எதிர்க்கட்சிக ளாகிய நாங்களும் வரவேற்றுப் பாராட்டுகின்றோம். அடுத்து வரும் பொதுநலவாய நாடுக ளின் நாடாளுமன்ற சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இலங்கை யில் நடைபெற இருப்பது நமது நாட்டுக்குக் கிடைத்த பெருமை. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசும் எதிர்க்கட்சிகளின் நாடா ளுமன்ற உறுப்பினர்களையும் மதிப்பளித்து அவர்களின் பங் களிப்பையும் பெறவேண்டும். பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள் சகல ஒத் துழைப்பையும் வழங்கத் தயா ராக இருக்கின்றோம். இதனை அரசு செயற்படுத்தும்போது அது உலகநாடுகளுக்கு ஒரு முன் உதாரணமாக அமையும் என் றார் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க.

### கணக்காய்வாளர் நாயகம் இல்லாத ஒரே நாடு

இலங்கையின் அரசிய லமைப்பின்படி நாடாளுமன்றக் கணக்காய்வாளர் நாயகம் என் பது அதி முக்கியமான ஒரு பதவி. ஆனால் இந்த நாடாளு மன்றத்தில் ஒரு கணக்காய் வாளர் நாயகம் ஒரு வருடமாக இல்லாதது வேடிக்கை யான விடயம். இதனால் ஊழல், மோசடிகள் இடம் பெறவும் வாய்ப்புகள் உண்டு.

இது தொடர்பாகப் பதில் அளித்த பிரதமர், கூடிய விரைவில் கணக் காய்வாளர் நாயகம் ஒருவரை நிய மிக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்றார். ஆனால் இதுவரை ஏன் நியமிக்கப்படவில்லை என்று கூறத் தவறிவிட்டார்.

### சுவாரஸ்யம் இல்லாத கேள்வி நேரம்

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் 15 கேள்விகள் கேட் கப்பட்டிருந்தன. ஆனால் விரல் விட்டு எண்ணக்கூடிய கேள்வி களுக்கு மட்டுமே பதில் அளிக் கப்பட்டது. வழமையான, சூடான வாதப் பிரதிவாதம் ஏதும் இல்லை. இதனால் கேள்வி நேரம் சுவாரஸ்யமாக இருக்க வில்லை.

### அவசரகாலச் சட்டம் நீக்கப்படுமாம்!

நேற்று வழமைபோல் அவ சரகாலச் சட்டத்தை நீடிப்பதற் கான பிரேரணையை சபையில் முன்வைத்தார் பிரதமர்

இந்தமுறை புதிதாகப் பிர தமர் ஒரு நல்ல செய்தியை வெளிப்படுத்தினார். இதுவரை அவசரகாலச் சட்டத்தில் பெரும் பாலான சரத்துகள் நீக்கப்பட் டுள்ளன, பல திருத்தப்பட்டுள் ளன என்று கூறியதுடன் அவசர காலச் சட்டத்தை முற்றாக நீக் குவதற்குப் பாதுகாப்பு சபை ஆலோசனை வழங்கியுள்ளது. கூடிய விரைவில் இது தொடர் பான பிரேரணை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார். ஆனால் எப்போது என்று மட்டும் கூறவில்லை.

### குகநாதன் மீதான தாக்குதலால் சபையில் சூடு

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டு மிராண்டித்தனமான தாக்குதல் சம்பவம் சபையில் பிரதிபலித் தது. எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பலரும் தமது கண்டனங்க ளைத் தெரிவித்தனர்.

குகநாதன் மீது மேற்கொள் ளப்பட்டது திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதலே. அரசினதும் இராணு வத்தினதும் அனுசரணையுட னேயே இது இடம்பெற்றுள்ளது.

அவசர காலச் சட்டத்தையும் இராணுவத்தினரையும் கையில் வைத்துக் கொண்டு மாற்றுக் கருத்துகளை வெளியிடுவோர் பழிவாங்கப்படுகின்றனர் என் றார் ஜே.வி.பி. உறுப்பினரான அநுர குமார திஸ்ஸநாயக்க.

உதயன் பத்திரிகை ஆரம் பம் முதலே பல்வேறு சோதனை களுக்கு முகம்கொடுத்து வந் துள்ளது. பல ஊடகவியலாளர் கள் கொல்லப்பட்டுள்ளனர். அலுவலகம் தாக்கப்பட்டது. இப்பொழுது செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டுள்ளார்.

ஊரடங்கு வேளையிலோ அல்லது நள்ளிரவு வேளை யிலோ தாக்குதல் நடக்க வில்லை. வெகுவான சனநட மாட்டம் உள்ள நேரத்திலேயே தாக்கப்பட்டார். அருகில் இரா



## சபையில் கேட்டவை

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி



ணுவ சோதனைச் சாவடியும் உண்டு. ஆனால் தாக்கியவர் கள் தப்பிவிட்டனர். இங்கே தான் அரசின் மீது விரல் நீட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட் டுள்ளது. சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார் ஐ.தே.க. உறுப்பின ரான தயாசிறி ஜயசேகர.

### சிறையில் அடைக்கப்பட்டுள்ள கே.பி. முல்லைத்தீவுக்குச் சென்றது எப்படி?

சிறையில் அடைக்கப்பட்டி ருக்கும் கே.பி. அண்மையில் முல்லைத்தீவுக்குச் சென்று வந் துள்ளார். இது எப்படி முடியும்?. இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐ.தே.க. உறுப்பினரான தயா சிறி ஜயசேகர. இந்தச் சபையில் கே.பி. தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டபோது புலிகளின் சர்வதேச அமைப்பாளரும், ஆயுத விநியோகத்தருமான கே.பி. கைது செய்யப்பட்டு தடுப்புக்காவ லில் வைக்கப்பட்டுள்ளார், அவர் தொடர்ந்து விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருகிறார் என்று பிரதமர் இந்தச் சபையில் உத்தி யோகபூர்வமாக அறிவித்தார்.

ஆனால் சிறையில் அடைக் கப்பட்டுள்ள கே.பி. முல் லைத் தீவுக்குப் போகிறார். மக்களைச் சந்திக்கிறார். விழாக்களில் கலந்துகொள்கிறார்.

அதேவேளை, பயங்கர வாதத்தை ஒழித்த சரத் பொன் சேகா வசதிகளற்ற சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சரத் பொன்சேகாவையும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ள இந்த அரசு அனுமதிக்குமா என்று ஒரு போடு போட்டார் தயாசிறி.

### ரிஷாத் பதியுதீன் கொதிப்பு

இந்த நாட்டில் தமிழர்க ளுக்கு மட்டும்தான் பிரச்சினை உண்டு என்று கூறுவதை ஏற்க மாட்டேன். எமது முஸ்லிம் மக் களும் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உடுத்த உடையுடன் முஸ்லிம் மக்களைப் புலிகள் விரட்டிய டித்தனர். பள்ளிவாசல்களிலும் பொது இடங்களிலும் முஸ்லிம் கள் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம்களிடம் எந்தவித மான ஆயுதங்களும் இல்லை. நிராயுதபாணிகளாக இருக்கின் றோம். தாக்குதல் சம்பவங்களு டன் தொடர்பு கொண்டவர்க ளும் அல்லர்.

வவுனியாவில் முஸ்லிம் மையவாடிக்குச் சொந்தமான காணியில் சிறு காளியம்மன் கோயில் கட்டுவதாகக் கூறி முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணி அபகரிக்கப்பட்டது. சிறு கோயில் என்று கூறியவர்கள் பெரும் ஆலயத்தையும், மடங் களையும் கட்டியதோடு சமய பாடசாலையையும் கட்டிக் கொண்டனர். கடைத் தொகுதி களும் அமைக்கப்பட்டன.

இப்போது இந்த பிரதேசத் தில் முஸ்லிம்கள் ஒரு கலாசார மண்டபத்தைக் கட்ட முயன் றால் அதனைத் திட்டமிட் டுத் தடுக்கின்றனர்.

இந்தக் காணிக்கான சட்ட பூர்வமான காணி உறுதியும் இருக்கின்றது. வக்பு சபையில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. இவை அத்தனையும் இருந் தும் வவுனியா நகர சபையில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிராகத் தீர் மாணம் நிறைவேற்றப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. வவுனியா நகர சபை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் கீழ் இருக்கின்றது.

முஸ்லிம்களுக்கே சொந்த மான ஒரு சிறு துண்டுக் காணி யைப் பாதுகாத்துக் கொடுக்காத கூட்டமைப்பினர் காணி, பொலிஸ் அதிகாரத்தைக் கேட்கின்றனர். இவர்களை நாம் எப்படி நம்ப முடி யும். கடைசிவரை நம்பமாட்டோம்.

இந்தியா தமிழர்களுக்காகக் குரல் எழுப்புகின்றது. அமெரிக்கா குரல் எழுப்புகின்றது. ஆனால் அருகில் இருக்கும் இந்தியா இங்கே முஸ்லிம்கள் பாதிக்கப் படுவதைக் கண்டுகொள்வ தில்லை. இந்தியாவுக்குக் கூடக் கண் தெரியவில்லையா?

கூட்டமைப்பிடம் மட்டும் பேசி தீர்வு காண முடியாது. முஸ்லிம் களும் உள்ளடக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் உள்வாங்கப்படா மல் இந்தியா அல்ல அமெரிக்கா வந்து தீர்வினை ஏற்படுத்தினா லும் அதனை நடைமுறைப்படுத்த இடம்கொடுக்க மாட்டோம். கடைசிவரை அதனை எதிர்ப் போம் என்று ஆத்திரம் தொனித்த குரலில் உணர்ச்சி வசப்பட்ட நிலை யில் தனது உள்ளக் கொதிப்பை வெளிப்படுத்தினார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன். ✱

---

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மேகமூட்டத்துடன் வானம் காணப்படும் சாத்தியம்.

## முழுநிலா நாள் கலை விழா

வடமாகாண கல்வித் திணைக் களத்தின் அனுசரணையுடன் தீவகக் கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா- 2011 எதிர்வரும் 13ஆம் திகதி சனிக் கிழமை மு.ப. 10மணிக்குவேலணை மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமை யில் நடைறெும் இந்த விழாவில் வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங் கோவன் முதன்மை விருந்தினரா கக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ)

---

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 09, 2011

பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,750.19↓
மிலங்கா(MPI) 6,107.82↓

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,470.63Mn
பங்குகளின் அளவு(No.) 117.15Mn
வியாபாரம்(No.) 27,007

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஈஸ்ட் வெஸ்ட் 34.90
நேசன் லங்கா 17.60
ஷோவலஸ் 330.00
கெல்சி 22.70
நெஸ்லே 951.10

குறைவு(Top 5 losers) - விலை Rs.
சி.டி.பி(R) 1.60
சி.டி.பி(R1) 1.70
கொமஷல்(R1) 24.00
கொமஷல்(R) 43.70
மேக்கன்ரைல் சிப்பிங் 285.00

மேலதிக தகவல்கள்- www.csc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவுக் குழுவுக்கான பிரேரணை கையளிப்பு

கோட்டே, ஓக 10

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கான பிரேரணையை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விடம் அரசத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று செவ்வாய்க் கிழமை கையளித்தனர். (10)

## நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் அமளி இடைநடுவில் வெளியேறினார் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் குழப்ப நிலை உருவானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தலைமைப் பதவிக்கு கரு ஜயசூரிய நியமிக்கப்பட வேண்டுமென இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த யோசனையை முன்வைத்ததாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சரஞ் சித் மத்துமபண்டார அதனை வழிமொழிந்ததாகவும் அதைத் தொடர்ந்து கூட்டத்தில் குழப்ப நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிய வந்தது.

இந்தப் பரபரப்பான சூழ் நிலையில் கட்சித் லைவர் ரணல் விக்கிரமசிங்க இடைநடுவில் வெளியேறிச் சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் மூன்று வாரங்களுக்குள் வழங்கப்படும்

ஏப்ரல், மே மாதங்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரணம் அடுத்த மூன்று வாரங்களுக்குள் வழங்கப்படும் என்று யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் மார்ச் மாதத்துக்குப் பின்னர் இதுவரை வழங்கப்படவில்லை.

இதுதொடர்பாக யாழ்.அரச அதிபரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்:

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கானது வழங்கப்பட்டுவிட்டது. ஏப்ரல், மே மாதங்களுக்கான நிதி கிடைத்துள்ளது. விரைவில் அவற்றுக்கான கேள்விகோரல் இடம்பெறவுள்ளது. அடுத்த 20 நாள்களுக்குள் இந்த இரு மாதங்களுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

இடம்பெயர்ந்தோர் நிவாரணங்கள் வழங்கப்படாமையால் பல குடும்பங்கள் தமது உணவுத் தேவையை நிறைவு செய்வதில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## சமுர்த்தி உதவி ஆணையாளராக சிவசிறி நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.10

உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்த எஸ்.சிவசிறி கடந்த வெள்ளிக்கிழமை முதல் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தால் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணை யளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் நீண்ட காலம் உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்த இவரின் பதவி உயர்வுான உத்தியோகபூர்வ நியமனக் கடிதத்தை யாழ்.மாவட்ட அரச அதிபரின் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கியுள்ளார். (த-319)

## குகநாதன் மீதான தாக்குதலை சபையில் கண்டித்தார் சந்திரகுமார்

கொழும்பு, ஓக.10

உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சனத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டித்தார் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார். இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவசர காலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தின் போதே இதனைத் தெரிவித்தார்.

உதயன் பத்திரிகை ஆரம்பம் முதலே பல தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளது. இதற்காக நான் வேதனைப்படுகின்றேன்.

குகநாதன் உதயன் நிறுவனத்துக்கு அப்பால் என்னுடன் நல்ல ஆரோக்கியமான தொடர்பையும் நட்பையும் கொண்டவர்.

இது தனிப்பட்ட முறையில் குகநாதன் மீதோ அல்லது உதயன் மீதோ மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல. முழு ஊடகத்துறைக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் எதிரான தாக்குதல் என்றும் கண்டித்தார் சந்திரகுமார்.

இன்று தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் உயிர் இழப்புகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம். இன்று தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்று ஒப்பாரி வைக்கின்றனர். கிளிநொச்சி வரை யுத்தம் வந்துவிட்ட போதும் பேசுவோம் வாருங்கள் என்று அரசு அழைப்பு விடுத்தபோது எந்த விதமான பதிலையும கூறாது வெளிநாட்டுக்கு ஓடிவிட்ட நீங்கள் இப்போது தமிழ் மக்கள் என்று பேசுகிறீர்கள். தமிழ் மக்கள் தொடர்பாகப் பேசும் அருகதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடையாது என்றார் சந்திரகுமார். (ஓ-2)

## கிளிநொச்சியில் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்டப் போக்குவரத்துத் திணைக்களம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் செய்முறைப் பரீட்சைக்கு அனுமதி பெற்றவர்கள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை உரிய நேர ஒழுங்கின்படி கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்கள் அனுமதி அட்டைகளுடன் பரீட்சைக்கு சமூகம் தருமாறும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (த-313)

# மரண அறிவித்தல்



## நடேசபிள்ளை ரவிதரன்

**'சுடர் ஒளி' பத்திரிகையின் விநியோக முகாமையாளர் நடேசபிள்ளை ரவிதரன் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.**

அன்னார் திருகோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை - பத்மாவதி தம்பதியினரின் மகனும் ஸ்ரீதரன் - செல்வகுமாரி தம்பதியினரது மருமகனும், உமாவின் (ஆசிரியர், 'த இன்ரநஷனல் ஸ்கூல்' - பெங்களூர்) அன்புக் கணவரும். சிவானி, ஜெயந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் சுபதரன் (கனடா), வித்தியாதரன், யசோதை சரவணபவன், சசிதரன் (டென்மார்க்), துளசிதரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் செல்வகலா ஸ்ரீதரன், அமிழ்தினி சுபதரன், இரட்ணகலா வித்தியாதரன், சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர், இயக்குநர் - 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள்), உருத்திராங்கனி சசிதரன், தாரிணி துளசிதரன், சதீஸ், ராஜேஸ் ஆகியோரின் மைத்துனரும் சிவை, சிவகாமி, சிவப்பிரியா, சிவராம், விஜயசாயி, வித்தியசாயி, அபிராமி, வைஷ்ணவி ஆகியோரின் சிறிய தந்தையும் லக்ஷ்மி, சோபிதா, ஹீமாவந்த் ஆகியோரின் மாமனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிமுதல் இல. 70, டேவிட்சன் வீதி, கொழும்பு-04, இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் நாளை (11.08.2011) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் மாலை 4 மணிக்கு பொரளை கனத்தை மயானத் துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*70, டேவிட்சன் வீதி, கொழும்பு-04.*
தொடர்புகளுக்கு: 0714-115002

தகவல்:
சகோதரர், மைத்துனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் விமான ஓடு பாதைகள் வர்த்தக விமான போக்குவரத்துக்கு

கொழும்பு,ஒக.10

விடுதலைப் புலிகளால் நிர்மானிக்கப்பட்ட விமான ஓடு பாதைகள் புனரமைக்கப்பட்டு வர்த்தக விமான போக்குவரத்து பாதைகள் மேற்கொள்ளப்படுவதாக இலங்கை விமானப் படையின் பேச்சாளர் அன்ரூ விஜய ஜெயசூரிய தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு.

விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட முல்லைத்தீவு, இரணைமடு விமான ஓடு பாதைகள் புனரமைக்கப்பட்டு வர்த்தகவிமானப் போக்கு வரத்துக்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட கிளிநொச்சி ஓடு பாதைகள் புனரமைக்கப்பட்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரணைமடு, முல்லைத்தீவு விமான ஓடு பாதைகளும் விரைவில் புனரமைக்கப்படும் என்றார் அவர்.

இலங்கை விமானப் படையினால் ஏற்கனவே பெல்-212, பெல்-412 ஹெலிகள், லை-12 விமானம் அகியவற்றின் மூலம் வர்த்தக விமான சேவைகள் காங்கேசன்துறை, அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், பலாலி உள்ளிட்ட இடங்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றமையையும் அவர் குறிப்பிட்டார். (த-15)

# சைக்கிளில் சமாந்தரப் பயணம் மாணவர் மூவர் நீதிமன்றத்தில்

வலி.வடக்கு, ஒக.10

பொது மக்கள் மற்றும் வாகனங்களுக்கிடைஞ்சல் ஏற்படும் வகையில் சைக்கிளில் சமாந்தரமாக பயணித்த மாணவர்கள் மூவர் நீதிமன்றினால் எச்சரித்து ஆலோசனை கூறி விடுவிக்கப்பட்டனர்

மல்லாகம் மாவட்டம் நீதிமன்றில் தெல்லிப்பளை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்போது இந்த மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். மல்லாகம் மகாவித்தியாலயத்தை சேர்ந்த இரு மாணவர்களும் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலய மாணவர் ஒருவருமே இவ்வாறு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் ஆவார்.

குடாநாட்டில் தற்போது வாகனப் போக்குவரத்து அதிகரித்த நிலையில் பாடசாலை செல்லும் போது கல்வி நிலையங்களுக்குச் செல்லும் போதும் சமாந்தரமாக பயணிப்பதனால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-86)



பேராசிரியர் மா.கருணாநிதிக்கு கௌரவிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் விழாநாயகனுக்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (319)

## குளத்தில் நீராடச் சென்றவர் தாமரைக்கொடியில் சிக்கி மரணமானார்

குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் தாமரைக் கொடியில் சிக்கி பலியானார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பளை தர்மக் கேணியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலசிங்கம் என்னும் குடும்பஸ்தரே மரணமானவர் ஆவார்.

குளத்திலிருந்து சடலத்தை வெளியே எடுக்க முப்படையினர் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்த போதிலும் அப்பகுதியைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் கடற்போராளி சடலத்தை மீட்டு வெளியே கொண்டு வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-207)

## வாழ்த்தி வணங்குகின்றோம்

எமது தமிழ் விரிவுரையாளரும் தென்மராட்சியின் புகழ்பூத்த மூத்த தமிழாசிரியருமான யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளருமான



திருவாளர்
க.தர்மராஜா

அவர்கள் இன்று (10.08.2011) அகவை அறுபது கண்டு அகமகிழ்கின்றார். நீண்டகால அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் மதிப்புக்குரிய எமது விரிவுரையாளரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.
New Degree College (வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிலையம்- தென்மராட்சி)
சங்கத்தானை, சாவகச்சேரி.

(1987)

# நல்லூருக்குப் படையெடுக்கும் தெற்கு சுற்றுலாப் பயணிகள்

வலி-வடக்கு, ஒக 10

நல்லூர் ஆலயத்துக்கு இப்போது தினமும் 200 க்கும் அதிகமான தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் படையெடுத்து வருகின்றனர்.

தற்போது பாடசாலைகளின் விடுமுறையாக உள்ளமையால் பெரும் எண்ணிக்கையில் குடாநாட்டுக்கு வருகை தரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் தினமும் நல்லூர் ஆலய முன்றலில் குவிகின்றனர். இதனால் அப்பகுதி எந்நேரமும் மக்கள் கூட்டத்தால் நிரம்பியுள்ளது.

ஆலயத்துக்கு வரும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் மிகவும் பயபக்தியுடன் வெள்ளை உடை அணிந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. சிலர் தமது பெயர்களில் அர்ச்சனைகள் செய்வதிலும் ஈடுபடுகின்றனர். (த-86)

# யாழ்ப்பாணம்- முத்தையன் கட்டு பஸ் சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக 10

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து முத்தையன் கட்டு நோக்கிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்சேவை எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காலை 6.40 மணிக்கு சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 797/1 இலக்க பஸ் சேவை இதுவரை காலமும் காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சேவையில் ஈடுபட்டு வந்தது.

எனினும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களின் கடமை நேரத்தைக் கருத்தில் கொண்டு அது நேரமாற்றம் செய்யப்பட்டு யாழ். பஸ்நிலையத்திலிருந்து காலை 6.40 மணிக்குப் புறப்பட்டு கிளிநொச்சி பஸ் நிலையம் ஊடாக முத்தையன் கட்டு வரை சேவையில் ஈடுபடவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-313)

## மணிவிழா வாழ்த்து

உயர்திரு.A.K.தர்மராஜா SLTES III
(Sp.Trd.Tamil,B.A.,P.G.D.E,M.ED,.M.A)
ஆசிரிய கல்வியியலாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



மணிவிழா நாயகனே;
கனிவாய் பேசும் ஆசானே
தர்மத்தின் தாயகமே
தமிழின் உறைவிடமே
தென்மராட்சியின் தேவனே
உம் சேவையின் தேவை அறிந்து
தேடிநின்றோம் உம்மை
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆசானாய்
மொட்டாய் அரும்பினீர் உம் சேவையில்
பலாலி ஆசிரியர் கலாசாலையில்
விரிவுரையாளராய் மலராகி விரிந்தீர்
யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராய்
புன்னகைத்தீர் புத்தம் புதிய மலராய்
நாம் வாழ்த்தி நிற்கின்றோம்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்
உயர் கலைக்கல்லூரி

## VACANCIES

எமது வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, தண்ணீரூற்று, முருங்கன் மற்றும் செட்டிகுளம் கிளைகளில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

**Course Counselors (Female)**
19 வயதுக்கு மேல் A/L, MS Office or DTP தகைமை

**Branch Managers Male / Female**
24 வயதுக்கு மேல் A/L கணினி அறிவுடன் மொழித்தேர்ச்சியும் முன்னனுபவமும் இருத்தல் வேண்டும்.

**Computer Instructor (Full Time)**
19 வயதுக்கு மேற்பட்ட A/L தமைமையுடையவராக இருப்பதுடன் பின்வருவனவற்றில் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

1. Microsoft Office
2. Graphic Designing
3. Programming
4. Web designing
5. Multimedia
6. Accounting.

**Auto CAD, Maya, 3D Studio Max** மற்றும் **Computer Hardware** கற்பிக்கக் கூடிய தகுதியும் முன்னனுபவமும் உடையவர்கள். **(Part Time or Full Time)**

விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **விண்ணப்பிக்கும் பதவி, பணியாற்ற விரும்பும் இடம்** என்பவற்றைத் தவறாமல் குறிப்பிடவும்.

**Apply before 21.08.2011**

TECHNO WORLD
Studies (Pvt) Ltd

அனுப்ப வேண்டிய முகவரி

The Human Resource Manager
**TECHNO WORLD Studies (pvt) Ltd.**
No.05, Station Road, Karappankadu, Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வட பகுதி மீனவரின் அந்தரிப்பு

வடமாகாண மீனவர்கள் தமது தொழிலைச் செய்து சீவனோபாயத்தை நடத்த முடியாத நிலை இடைவிடாது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மழை விட்டும் தூவானம் ஓயாத போக்கே காணப்படுகிறது.

கடல்வலயத் தடைச் சட்டம், பாஸ் நடைமுறை, ஊரடங்குச் சட்டம் உட்பட பல உத்தியோகபூர்வமான தடைகளாலும், கடற்படை மற்றும் இராணுவத் தரப்புகளால் விதிக்கப்பட்ட இடையூறுகளாலும்-

போர்ச்சூழலில் உண்டான இடப்பெயர்வுகள் மற்றும் பலவகையான நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களாலும் - அவர்களின் தொழில் அடிமட்டத்துக்குச் சென்றிருந்தது.

சமாதானம் வந்துவிட்டது; இயல்பு நிலை உருவாகி இரண்டு வருடங்கள் கழிந்துள்ள போதிலும் வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் தரையில் விழுந்த முந்திய நிலையிலிருந்து இன்னமும் தலையை உயர்த்திப் பார்க்க முடியாத அவல நிலைக்குள்ளேயே சிக்கிக் கிடக்கிறார்கள். தாமுண்டு, தமது தொழில் உண்டு என்று சுதந்திரமாகச் சீவிக்க இயலாத நிலை இப்போதும் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது.

வடபகுதிக் கடற்பிரதேசத்தின் வளங்களைப் பிறர் சூறையாடுவதால் முன்னர் பெருவளம் கண்ட எமது மீனவர்கள், இப்பிரதேசத்தின் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு அன்று பெரும் பக்கத் துணையாக விளங்கினார்கள். ஆனால் வடபகுதி உட்பட நாடு முழுவதிலும் இயல்புநிலை தோன்றிய பின்னரும், பொருளாதார நிலைமை உயர்ச்சி கண்டு வருவதாக அரசு பீற்றிக்கொள்ளும் நிலையிலும், அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது அல்லாடுகிறார்கள் வடக்கின் கடற்றொழிலாளர்கள்.

அதற்குப் பிரதான காரணங்கள் எனப் பின்வருவனவற்றை வரிசைப் படுத்திக் கூறலாம்.

★ இந்திய மீனவர்களின் 'ட்றோலர்' படகுகள் வடக்கின் கடல் வளத்தை ஒருபுறம் அள்ளிச் செல்கின்றன. அதனைத் தடுக்க இலங்கை அரசு எந்தவொரு காத்திரமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

★ அதுபோதாதென்று தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் தலையெடுத்துள்ளன. அதனைச் சற்றுவிரிவாகப் பார்த்தால் யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காகத் தென் இலங்கை மீனவர்கள் குடியேறி வருகின்றார்கள்.

குறிப்பாக வடமராட்சி கிழக்குப் பகுதியான தாளையடிப் பிரதேசத்தில் கடந்த இரண்டு மாதங்களாகப் புத்தளத்தில் இருந்து வந்து மீனவர்கள் தங்கியுள்ளனர் -

அவர்கள் அந்தப்பகுதிக் கடலில் நண்டு, இறால், கடலட்டை ஆகியவற்றைப் பிடிப்பதில் அதிதீவிர வேகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் கடலுணவு வகைகள் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், பெரும் வருமானம் ஈட்டுகிறார்கள். ருசிகண்ட பூனை போன்று திரும்பிச் செல்வதற்கு மனமின்றி இங்கேயே தங்கிவிட்டனர் என்பது தகவல்.

அதேபோன்று மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடல் வளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அரச ஆசீர்வாதத்துடன் அபகரிக்கப்படுகின்றன.

★ தெற்கு மீனவர்கள் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன் படுத்துவதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

★ தென்னிலங்கை மீனவர் வடபகுதிக் கடற்பிரதேசங்களில் மீன்பிடியில் ஈடுபடுவதுடன் குடாநாட்டு மீனவர்களின் வலைகளையும் அறுத்துச் சேதப்படுத்துகின்றனர். இதனால் குடாநாட்டு மீனவர்களுக்கு தொழிலும் கெட்டு ஆயிரக்கணக்கான ரூபா நட்டமும் உண்டாகிறது.

★ இவ்வாறான பிரச்சினைகளால் எமது மீனவர் மனதளவிலும் தொழில் ரீதியிலும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். தொழில் செய்வதற்கு மனமின்றி அதேவேளை வருமானத்துக்கான மாற்று ஏற்பாடு எதுவும் அற்றவர்களாக வாடுகிறார்கள்.

உரலுக்கு ஒரு பக்கத்தால் அடி என்றால் மேளத்துக்கு இரண்டு பக்கத்தாலும் அடி என்பது போல, தென்னிலங்கை மீனவர்களாலும், இந்திய மீனவர்களாலும் வடபகுதிக் கடற்றொழிலாளரின் வாழ்வாதாரம் சீரழிக்கப்பட்டு வருகிறது.

வடபகுதி மீனவர்களின் இப்போதைய நிலையை நிதானித்துச் சொல்வதானால், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் சற்றுக்குறைந்து உள்ள போதிலும், தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்போ, கட்டுக் கடங்காமல், எம்மைத் தட்டிக்கேட்க எவருமில்லை என்ற அகங்காரப் போக்கில் ஊதிப்பெருத்து வருகிறது. மொத்தத்தில் வடபகுதி- வடமாகாண-மீனவர்கள் தமது வாழ்வுக்கு, சீவியத்துக்கு ஆதாரமான தொழிலில் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தனைக்கும் நாட்டின் கடல்வளங்களை அழிக்கும் வகையில் கடற்றொழிலில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும் என்று கடந்த மாத இறுதியில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு அறிவித்திருந்தது.

ஆனால் அந்த உத்தரவை மீறும் விதத்தில், தென்னிலங்கை மீனவர்கள் வடக்கின் கடல் வளங்களை, தடுப்பார் இன்றி, தட்டிக்கேட்பார் இன்றி, அழித்து வருகிறார்கள். மறுவளமாக நோக்கினால், இது எமது நாடு, அதன் எந்தப் பிரதேசத்திலும் மிகக்குறிப்பாகத் தமிழர் வாழ்விடங்களில் எதனையும் செய்வோம்; அவர்கள் தட்டிக்கேட்க முடியாதென்ற மேலோங்கித் தனத்துடன் செயற்பட, நூற்றுக்கு நூறு வாய்ப்பும் வசதியும், ஏன், மறைமுக ஆசீர்வாதமும் உண்டு எனச் சொல்லலாம்; இல்லை, இல்லை கொள்ளலாம்!

போர் நடைபெற்றுச் சற்றுத் தணிந்த ஆரம்பகாலத்தில், உயர்மட்டங்களின் ஆசீர்வாதத்துடனும், பங்களிப்புடனும் வடக்கின் கடல்வளம் நிறைந்த பிரதேசங்களில், குத்தகைக்குப் பெற்றுத் தொழில் செய்வது போன்று, குறிப்பாக காங்கேசன்துறை முதல் வடமராட்சி முனை வரை தென்னிலங்கை மீனவர்கள் கடல்வளத்தை அள்ளிச் சென்றார்கள். இதனை உதயன் அம்பலப்படுத்தியமை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து குய்யோ முறையோ என்று குரல் கொடுக்கும் கொழும்பு அரசு, அதனைப் பெரும் விவகாரமாக்கிச் ''சண்டித்தனம்'' பேசும் அரசு-

வடபகுதிக் கடற்றொழிலாளர்களைப் பாதிக்கும், அவர்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலை கண்டும் காணாதது போன்று அரசு மௌனம் சாதிப்பதன் இரகசியம் தமிழ் மக்களுக்குப் புரியாத ஒன்றல்ல.

உனக்கில்லையடி கண்ணே, ஊருக்குத்தான் உபதேசம் என்ற நாட்டார் வாசகத்தின் நிலைப்பாட்டை எமது நாட்டு அரசு அட்சரம் தவறாது கடைப் பிடிக்கிறது என்பதை விட மேலதிகமான வார்த்தைகள் தேவை அற்றவை.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற இன்றைய அரசின் தாரக மந்திரம், வடபகுதிக் கடற்றொழிலாளரின் விவகாரத்தில் சக்கைபோடு போடுகிறது! தட்டிக் கேட்பது யாரோ...?

# 23 பெரிய நீர்த் தாங்கிகளின் உதவியுடன் இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகம்

## தாங்கிகளுக்கான காணிகளைப் பெற நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.10

20 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இரணைமடுக் குள நீர் விநியோகத் திட்டத்துக்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சியில் இருந்து அனலைதீவு வரை 23 பெரிய தண்ணீர் தாங்கிகளும் நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப் படவுள்ளன.

இதற்கான காணிகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு, உரிய காலத்தில் பெற்றுக்கொடுக்க உதவி அரச அதிபர்களும், பிரதேச செயலர்களும் முன்வரவேண்டும்.

இவ்வாறு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ் - கிளிநொச்சி குடிதண்ணீர் வழங்கல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்:

இன்று வடக்கு மாகாணம் முழுவதும் குடிதண்ணீரப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. இந்தப் பெரிய பிரச்சினைக்கு உடன் தீர்வு காணமுடியாதுள்ளது. கிளிநொச்சி இரணைமடுக் குளத்து நீர் கிளிநொச்சி விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் பளை - பூநகரி ஊடாக அனலைதீவு வரை 23 பெரிய நீர்த் தாங்கிகள் ஊடாக 4,5 ஆண்டுகளில் யாழ்ப் பாணம் கொண்டுவரப்படும். மக்களுக்குப் பெரிய நிதிச் சுமையை ஏற்படுத்தாத வகையில் சிறிய நிதிச்செலவுடன் சகல மக்களும் பயன்பெறக் கூடியதாக குடிதண்ணீர் வழங்கப்படவேண்டும்.

இந்தத் திட்டத்தை முன்னகர்த்த யாழ். மாவட்ட பிரதேச செயலர்களும், உள்ளூராட்சிச் சபைச் செயலாளர்களும் கருத்தொருமித்து உதவுவதுடன், காணிகளையும் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ் - கிளிநொச்சி குடிதண்ணீர் வழங்கல் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தற்போதுள்ள நிலைமைகள் குறித்து விளக்கினார். கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் எந்திரி பி.பிறேம்குமார் கூறுகையில்:

இரணைமடுக் குளத்தின் உட்கட்டுமான வேலைகளை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுவருவதாகக் கூறினார்.

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர்களும் காணி வழங்குவது பற்றிய தமது விளக்கங்களைத் தெரிவித்தனர். இதில் 40 அதிகாரிகள் கலந்து கொண்டனர்

(த)

# பெண்களுக்குத் தனி பஸ்சேவை இன்று கோட்டையில் ஆரம்பம்

## போக்குவரத்து அமைச்சர் வெல்கம கலந்துகொள்வார்

கொழும்பு, ஒக.10

பெண்களுக்கான தனியான பஸ் சேவை இலங்கையில் முதல் முதலாகக் கொழும்பில் இன்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதனை போக்கு வரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

வேலை செய்யும் பெண்கள் பெரும்பாலும் போக்குவரத்து சபை பஸ்களையே பயன்படுத்துகின்றனர். பஸ்களில் பயணம் செய்யும் பெண்கள் பல்வேறு விதமான தொந்தரவுகளை எதிர்நோக்குவதாகவும், குறிப்பாக ஆண்களால் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாவதாகவும் பல்வேறுபட்ட முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்தே போக்குவரத்து அமைச்சு மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

பரீட்சார்த்தமாக முதலில் கொழும்பில் பஸ் வழி இலக்கம் 138 இல் இந்தச் சேவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கொழும்பு கோட்டையில் இருந்து புறக்கோட்டை வரை காலையிலும் மாலையிலும் இந்தப் பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

முதலாவது பஸ் சேவையைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம இன்று புதன்கிழமை காலை 7 மணிக்குச் கோட்டையில் கொடியசைத்து ஆரம்பித்து வைப்பார்.

(த-5)

# முகாமைத்துவ உதவியாளர்களாக புதிதாகத் தெரிவானோருக்கு அழைப்பு

பருத்தித்துறை, ஒக.10

முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதன் பின் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அமைவாகத் தெரிவு செய்யப் பட்டவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு சமுகமளித்து கடமைக்கு அறிக்கையிடுமாறு வடமாகாணப் பொது நிர்வாக செயலகம் கேட்டுள்ளது. கடமைக்கு அறிக்கையிட்ட பின்னரே முறையான நியமனக் கடிதம் வழங்கப்படும் எனவும், கடமைக்கு அறிக்கையிடும் திகதியே இந்தப் பதவிக்கு உரித்தான முதல் நியமனத் திகதியாகக் கருதப் படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு தனித்தனியே கடிதங்கள் வட மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வட மாகாண பொதுச் சேவையின் கனிஷ்ட ஊழியர்களே நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய முகாமைத்துவ உதவியாளர் சேவை, வகுப்பு III பதவிக்கு தரமுயர்த்தப் படவுள்ளனர்.

(த-190)

# விரைவில் சிறுத்தைகள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஒக.10

இலங்கையின் காடுகளிலுள்ள யானைகள் தற்போது கணக்கெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் சிறுத்தைகளும் கணக்கெடுக்கப்படவுள்ளதாக வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.டீ. ரத்நாயக்க தெரிவித்தார்.

யானைகள் கணக்கெடுக்கப்பட்டதன் பின்னர் சிறுத்தைகள் தொடர்பான கணக்கெடுப்பொன்றும் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ள பணிப்பாளர் நாயகம் சிறுத்தைகள் தொடர்பான முறையான கணக்கெடுப்பு இலங்கையில் இதுவரையில் இடம்பெறவில்லையெனவும் கூறினார்.

இதன் பின்னர், எதிர்காலத்தில் காடுகளில் வாழும் ஏனைய மிருக இனங்கள் தொடர்பாகவும் கணக்கெடுப்புகளை நடத்தும் எதிர்பார்ப்பு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு - யாழ்ப்பாணம் தபால் சேவையை உடனுக்குடன் மேற்கொள்ள முடியாத நிலை

## தபால் ரயில் நேரமாற்றத்தால் வந்தது சிக்கல்

யாழ்ப்பாணம் ஒக.10

கொழும்பு- யாழ்ப்பாணம் இடையிலான வெளியூர் தபால் சேவையை உடனுக்குடன் மேற்கொள்ள முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பில் இருந்து புறப்படும் தபால் ரயில் தற்போது அதிகாலை 5.30 மணிக்கே வவுனியாவை வந்தடைகிறது. இந்தத் தபால் ரயிலின் நேர மாற்றத்தால் யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளியூர் தபால்களை உடனடியாகத் தரம் பிரித்து விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு அதிகாலை வந்தடையும் தபால் பொதிகள் யாழ்ப்பாணத்துக்கு முற்பகல் 11 மணிக்கே வந்து சேர்கின்றன. பின்னர் அவைகளைத் தரம் பிரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இதனால் மறுநாளே அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது- என்றார் அந்த அதிகாரி.

நேரமாற்றம் செய்யப்படட முன்னர் கொழும்பில் இருந்து புறப்பட்ட தபால் ரயில் அதிகாலை 3.30 மணிக்கு வவுனியாவுக்கு வந்துவிடும். இதனால் யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் வவுனியாவில் இருந்து உடன் எடுத்து வரப்பட்டுக் காலையில் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் அன்றைய தினமே விநியோகம் செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

தபால் ரயிலின் நேர மாற்றம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-26)

# விதை நெல்லைத் துப்புரவு செய்ய விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி, ஒக.10

யாழ். மாவட்ட விவசாயிகளின் காலபோக விதைநெல்லை இலவசமாகத் துப்புரவு செய்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட விவசாயத் திணைக்களம் செய்துள்ளது.

விவசாயிகள் துப்புரவு செய்த விதை நெல்லைப் பயன்படுத்துவதன் மூலம் நெல்லின் முளை திறனையும் விளைச்சலையும் அதிகரிக்கச் செய்யலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் விதை நெல்லை கழிவுகள் மற்றும் பதர் அகற்றித் துப்புரவு செய்து நூறு வீதம் முளைதிறன் கொண்டதாக விதைப்பதற்கு உரியதாகச் சிபார்சு செய்து வழங்குவதற்கு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

நெல்லைத் துப்புரவு செய்து கழிவுகளை அகற்றும் சாதனம் திருநெல்வேலி விவசாயத் திணைக்கள விதை உற்பத்தி நிலையத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

''விதை நெல்லைத் துப்புரவு செய்து விதைப்பதன் மூலம் நூறுவீதம் முளைதிறன் கொண்டதாகவும்; 20 வீதம் விளைச்சலையும் அதிகரிக்கச் செய்ய முடியும்''. விதை நெல்லை துப்புரவு செய்ய விரும்பும் விவசாயிகள் எம்முடன் தொடர்பு கொண்டு விதை நெல்லை துப்புரவு செய்து கொள்ளலாம் என விவசாயத் திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி ஆர்.சௌந்தரராஜன் அறிவித்துள்ளார். (த-11)

## எதிலும் வெற்றி...



**சாதனையாளர்கள்:** அண்மையில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான தேசிய மட்டத் தமிழ்த் தினப்போட்டிகளில் பாவோதல் பிரிவு நான்கு, தனி நடனம் பிரிவு நான்கு, தனி இசை பிரிவு இரண்டு, குழு இசை பிரிவு ஒன்று ஆகிய போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவிகள், அதிபர் திருமதி க.பொன்னம்பலம், பிரதி அதிபர், நெறிப்படுத்திய ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (த)

# வீதியை அகலிப்புச் செய்யாவிட்டால் அதற்கான நிதி வேறுதிட்டத்துக்கு

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

நவாலி, ஒக10

நெல்சிப் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட வீதிகளை உடன் அகலிப்புச் செய்யாதுவிடில் உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதி வேறு வீதிகளுக்கு மாற்றப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பு.சிவலிங்கம் நவாலி பொதுநோக்கு மண்டபத்தில் நவாலி சின்னப்பா வீதி அகலிப்புச் சம்பந்தமாக அந்தப் பகுதி மக்களுடன் நடந்த கலந்துரையாடலில் எடுத்துரைத்தார்.

அவர் மேலும் கூறுகையில், தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் வேலைகள் 90 நாள்களுக்குள் பூர்த்தியாக வேண்டும். இந்த நிலையில் பல வீதிகளின் வேலைகள் முடிவுறும் தறுவாயிலுள்ளன. ஆனால் இந்த வீதி மக்கள் மட்டும் வீதி அகலிப்புச் செய்து தருவதில் பின்னிற்கின்றார்கள்.

எனவே எதிர்கால சந்ததியினரின் சந்தோசத்துக்காவது உடனடியாக இந்த வீதியை அகலிப்புச் செய்து தருமாறும் இதற்கென 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் மேலும் கூறினார். (த-100)

# யாழ்.மாணவியர் மூவர் வெற்றி

நாவற்குழி, ஒக. 10

இலங்கை இந்திய சங்கத்தால் நடத்தப்பட்ட இந்திராகாந்தி ஞாபகார்த்த கட்டுரைப்போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 பாடசாலை மாணவியர் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

முதலாமிடத்தை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்த சொரூபியா சிறிஜீவா பெற்றுள்ளார். வேம்படி பெண்கள் உயர் கல்லூரியின் மாதங்கி நவகுமாரன், ரெஷனி அன்ரன் ராஜ்குமார் ஆகியோர் ஆறுதல் பரிசுகளைப் பெற்றுள்ளனர். (த-121)

# பாடசாலை விடுமுறை காரணமாக விவசாயக் கண்காட்சி ஒத்திவைப்பு

## செப்.5 ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஒக 10

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 18 ஆம் திகதி திருநெல்வேலியில் ஆரம்பமாகவிருந்த விவசாயக் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கும் திகதியான செப்ரெம்பர் 5 ஆம் திகதி கண்காட்சியும் ஆரம்பமாகும் என அவர் அறிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறவுள்ளது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் விவசாய ஆராய்ச்சி நிலையம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம், வானிலை அவதான நிலையம் ஆகியனவற்றின் வளாகங்களில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

எதிர்காலத்தில் விவசாயத்துறை எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பயிர்ச்செய்கை முறைகள், ஆராய்ச்சித் தகவல்கள், விலங்குவேளாண்மை, விவசாய இயந்திரமயமாக்கல் சார்பான தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாக இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுகிறது.

அத்துடன் மத்திய விவசாயத் திணைக்களத்தின் பல பிரிவுகளும் பங்குபற்றிப் புதிய தொழில் நுட்பங்களை காட்சிப்படுத்தவுள்ளன என விவசாயப் பணிப்பாளர் மேலும் கூறினார். (த-14)

# சமுர்த்தி நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக10

ஜூலை, ஒகஸ்ட் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணத்துக்கான பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஜூலை மாதத்துக்கான 194 'ஏ' 67 'ஏ' முத்திரை புள்ளிக்கும் ஒகஸ்ட் மாதத்துக்கான 195 'ஏ' 68 'ஏ' ஆகிய புள்ளிக்கும் இந்த நிவாரணப் பொருள்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி முத்திரைக்குரிய பொருள்களைப் பெற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை விநியோகத்தை ஆரம்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்படும் பொருள்கள் மிகவும் தரமாக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

# இணுவிலில் நகை அபகரிப்பு முயற்சி மற்றொரு நபரும் பொலிஸாரால் கைது

## இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக.10

இணுவிலில் கடந்த வாரம் இடம்பெற்ற நகை அபகரிப்பு முயற்சி சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிர்வரும் 22 ஆம் திகதி வரை குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திலீபன் என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவார்.

கடந்தவாரம் இணுவிலில் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நிலையமொன்றில் வீடொன்றினுள் புகுந்த ஒருவன் பெண்களின் நகைகளை அபகரிக்க முயற்சி செய்தவேளை அங்கிருந்தவர்கள் மடக்கிப்பிடிக்க முற்பட்டனர். அந்தவேளை குறித்த ஆசாமி ஒருவரை வெட்டிக் காயப்படுத்தி விட்டு ஓடமுயன்றான். ஆனால் அவன் மடக்கப்பட்டான். தகுந்த உபசாரமும் நடந்தது.

சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட அந் நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்த நிலையில் விசாரணையில் ஈடுபட்டு வந்த பொலிஸார் சந்தேகநபருடன் தொடர்புடைய திலீபன் என்பவரை கைது செய்துள்ளனர். மற்றொரு நபர் தேடப்பட்டு வருகிறார்.

சந்தேக நபரிடம் பெற்ற தகவலைக் கொண்டு கோப்பாய் மற்றும் மருதனார்மடம் ஆகிய இடங்களில் இரு மோட்டார் சைக்கிள்களை மீட்டுள்ளனர். அவை தற்போது யாழ்.பொலிஸ் நிலையத்தில் உள்ளன. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேற்றுவரை 8 பேருக்கு டெங்கு குடாநாட்டு மக்களுக்கு எச்சரிக்கை

## சுகாதாரத்தைப் பேணுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.10

இந்த மாதத்தில் நேற்று வரை 8 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களது பிரதேசங்களில் சுற்றுச் சுகாதார நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படாமையே முக்கிய காரணம் எனவும், பிற மாவட்டங்களில் தற்போது டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அந்தப்பகுதிகளுக்குச் சென்றுவந்தவர்களும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் வைத்திய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த 8 பேரும் யாழ்ப்பாணம், நல்லூர், சுன்னாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சிறுவன் ஒருவன் உட்பட 3 ஆண்களும் இரண்டு சிறுமிகள் உட்பட 5 பெண்களும் அடங்குகின்றனர். ஏனைய பிரதேசங்களில் இவ்வாறு டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் எதுவும் பதிவாகவில்லை என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

டெங்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சுகாதார பரிசோதனைகளை முன்னெடுக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் தமது பிரதேசங்களில் பற்றைகளை வெட்டிக் காணிகளைத் துப்பரவாக வைத்திருக்கும்படியும், எந்த இடங்களாயினும் சரி நீண்ட நாள்களுக்கு தண்ணீர் தேங்கி நிற்காதவாறு பார்த்துக் கொள்ளுமாறும், உரிய முறையில் சுகாதார வசதிகளைப் பேணுமாறும் வைத்தியர்கள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

கம்பஹா போன்ற பிற மாவட்டங்களில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே பிறமாவட்டங்களுக்குச் சென்று வரும் பொதுமக்கள் இவற்றைக் கவனத்தில்கொண்டு செயற்படுமாறும் வைத்திய வட்டாரங்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

எனினும் யாழ்ப்பாணத்தில் இவ்வருட ஆரம்பத்தில் டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை விட தற்போது அதன் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## மின்சாரம் வழங்கும் நடவடிக்கை

பருத்தித்துறை, ஓக.10

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கில் இந்த வருடம் பத்துக் கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இந்தக் கிராமங்கள் முன்னர் மின்சார வசதிகளற்ற பகுதிகளாகவே இருந்து வந்துள்ளன.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதையடுத்து அந்தப் பகுதிகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக மருதங்கேணி, தாளையடி, வத்தியராயன், உடுத்துறை, ஆழியவளைக் கிராமங்களில் இலங்கை மின்சார சபை மின்கம்பங்களை நடும் வேலையைப் பூர்த்தி செய்துள்ளது. (ஓ-190)

## சேவை புரிய...




புதிய ஆரம்பம்: சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராகப் பிரபல தொழிலதிபர் எஸ்.பி.நடராஜா கடந்த ஞாயிற்றுக்கிழமை லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் எஸ். தங்கராசா முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார். (த)

# பிரதேச செயலகத்துக்கு ஒரு வீடு இளைஞர் சேவை மன்றம் அமைக்கும்

## வறுமையில் வாழும் மக்களுக்காக

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட ஒவ்வொரு குடும்பம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வீட்டுத் திட்டத்துக்கென ஒரு லட்சம் ரூபா பணம் பகுதி பகுதியாக வழங்கப்படுகிறது.

இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இந்தக் கொடுப்பனவு யாழ்.மாவட்டத்தில் 15 பேருக்கு வழங்கப்பட்டு வீடமைப்புப் பணிகள் நடைபெறுவதாக இளைஞர் சேவைகள் மன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அவற்றில் வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரிவுகளில் வீடமைப்புப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளமையால் அவற்றைப் பார்வையிடுவதற்காக இலங்கைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சபைப் பணிப்பாளர் அன்ரோ டினேஸ், வேலைத்திட்ட உதவிப் பணிப்பாளர் டபிள்யு.ஏ.ஜீ.வெலிகண்ண ஆகியோர் இங்கு வந்துள்ளனர்.

இளைஞர் சேவை மன்றத்தினால் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கே இந்த உதவித் திட்டம் வழங்கப்படுகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மன்றத்தின் கிளை நிலைகளூடாக அந்தந்த மாவட்டங்களில் வீட்டுத் திட்டப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு லட்சம் ரூபா பெறுபவர்கள் எமது பங்களிப்புடன் மேலதிக நிதியைச் சேர்த்து வீடுகளை அமைக்க வேண்டும்.- எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4-23)

# அம்பன் வெள்ளப் பாதுகாப்பு அணை புனரமைப்புக்கு 6.5 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஓக 10

வடமராட்சி கிழக்கு அம்பன் வெள்ளப் பாதுகாப்பு அணை புனரமைப்புச்செய்யப்படவுள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிக்காக 6.5 மில்லியன் ரூபா மதிப்பீட்டு தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலேயே அம்பன் வெள்ளப் பாதுகாப்பு அணை புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதன் புனரமைப்பு வேலைக்கான கேள்வி தற்போது கோரப்பட்டுள்ளது. மூன்று மாதங்களில் இந்தப் புனரமைப்பு வேலைகளை மூன்று மாதங்களில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (த-14)

## அம்மன் சிலை திருட்டு

நாவற்குழி, ஓக. 10

நாயன்மார்கட்டு இராமநாதன் வீதியில் உள்ள துர்க்கை அம்மன் கோயிலின் சிலை கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு களவாடப்பட்டுள்ளது.

அத்துடன் கோயிலில் உள்ள பாத்திரங்களும் களவாடப்பட்டுள்ளன.

கோயிலின் நிர்வாக சபையினர் இது தொடர்பான முறைப்பாட்டை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர். (த-121)

# முதியோர் செயலகப் பணிப்பாளர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

நாவற்குழி, ஓக 10

கொழும்பில் உள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் திருமதி கிருஷ்ண மூர்த்தி நாளை வியாழக்கிழமை யாழ்.வருகை தருகின்றார்.

இவர் இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்ல பிரார்த்தனைமண்டபத்தில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் க.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்கின்றார்.

இதில் சமூக சேவைகள் அதிகாரிகள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரைச் சந்தித்து முதியோர் செயலகத்தின் பணிகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார். (த-121)

# யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஒக்.6 இல்

யாழ்ப்பாணம், ஓக 10

யாழ். பல்கலைக் கழக பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கலாநிதி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை வழங்குவதற்கான பொதுப்பட்டமளிப்பு இதுவாகும்.

இந்தத் தேர்வுகளில் 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் சித்தியடைந்து பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் இந்த வருடம் செப்ரெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அறிவுறுத்தல்களுக்கு அமைய சமர்ப்பிக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

கலாநிதி, முதுதத்துவமாணி, பண்பாட்டியல் முதுகலைமாணி, பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா (வவுனியா), வைத்தியமாணி, சத்திர சிகிச்சை மாணி, சித்தவைத்திய சத்திர சிகிச்சை மாணி, தொழில் நிர்வாக மாணி, வணிகமாணி, விஞ்ஞானமாணி(பொது/சிறப்பு), கலைமாணி (பொது/சிறப்பு), நுண்கலைமாணி (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்), விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணித்தலும் -வவுனியா வளாகம்), விஞ்ஞான மாணி (சுற்றாடல் விஞ்ஞானம், வவுனியா வளாகம்), வியாபார முகாமைத்துவமாணி (பொது/சிறப்பு-முகாமைக் கற்கைகள் வவுனியா வளாகம்) தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் (பொது-வவுனியா வளாகம்), தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் விஞ்ஞான மாணி (விசேட) வவுனியா வளாகம், விஞ்ஞான டிப்ளோமா தேர்வு, உடற்கல்வி டிப்ளோமா தேர்வு ஆகிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளது.

விவசாய விஞ்ஞானமாணி, தாதியியல் விஞ்ஞானமாணி, மருந்தகவியல்மாணி, மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞான மாணி, பிரதேச திட்டமிடல் முதுகலைமாணி, குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி, அபிவிருத்தியியல் முதுகலைமாணி ஆகிய தேர்வுகளுக்குத் தோற்றியவர்கள் தேர்வு முடிவுகளை உறுதிப்படுத்திய பின்பு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளருடன் (அனுமதிகள்) தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளை மலேசியாவிடம் கையளிக்கும் ஆஸியின் திட்டம் நீதிமன்றால் இடைநிறுத்தம்

அரசியம் தஞ்சம் கோரி ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற அகதிகளை மலேசியாவிடம் கையளிக்கப்படுகின்றமைக்கு கன்வேரா மேல் நீதிமன்றம் தற்காலிகத் தடை விதித்துள்ளது. கிறி ஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அகதிகளில் 16 ஆண்கள் நேற்று விமானம் மூலம் மலேசியாவுக்குக் கொண்டு செல்லப்பட இருந்தனர்.

ஆனால் அகதிகளை மலேசியாவிடம் கையளிக்கின்றமைக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி இரு மனுக்கள் மெல்பேர்னைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட ஆலோசனை நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றில் ஒரு மனு உடனடியாக விசாரிக்கப்பட்டது. இதனால் மறு உத்தரவு வெளியாகும் வரை அகதிகளை மலேசியாவுக்கு அனுப்ப வேண்டாம் என்று மேற்படி நீதிமன்றம் தடை விதித்துள்ளதாகத் தெரியவருகிறது.



யு.என்.டி.பி அமைப்பின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கிராம சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நடத்திய கண்காட்சியில் காவேரி கலாமன்றத்தினரின் யாழ்ப்பாணச் சூழலைப் பிரதிபலிக்கும் நாட்டியம் இடம்பெறுகிறது. (100)

## சென்னையில் தங்கியிருக்கும் சிங்கள யாத்திரிகர்களுக்குப் பாதுகாப்பு

### இலங்கையின் பிரதித் தூதுவர்

சென்னையில் தங்கியிருக்கும் இலங்கையைச் சேர்ந்த சிங்கள யாத்திரிகர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் பிரதித் துதுவர் வடிவேல் கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து மகா போதி தரிசனத்துக்காக அண்மையில் சென்ற 85 யாத்திரிகர்கள் அடங்கிய குழு தாக்குதலுக்கு உள்ளானது. இதில் இலங்கையின் யாத்திரிகர்கள் 3 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் மிகுந்த கவலையளிப்பதாக தமிழக அரசுக்குத் தான் தகவல் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

இந்தநிலையில் தமது தங்குமிட விடுதிகளில் தங்கும் இலங்கையர்கள் தொடர்பில் தகவல் தருமாறு விடுதி நிர்வாகிகளிடம் சென்னை பொலிஸார் கோரியுள்ளனர். அவ்வாறு தகவல் தரும்போது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்று சென்னை பொலிஸார் எமக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது சென்னையிலுள்ள விடுதிகளில் சுமார் 1,000 இலங்கை யாத்திரிகர்கள் தங்கியுள்ளனர் என்றும், மகாபோதியில் சுமார் 300 பேர் தங்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஓக.10

கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடிக் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதணையிட்டு மேற்படி கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் மாணவர்கள்அல்லது அவர்களது பெற் றோர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி கிளை முகாமையாளர் கேட்டுள்ளார்.

## வடக்கில் அழிந்த தொழிற்சாலைகளை மீளக்கட்டியெழுப்ப அரசு உதவவேண்டும்

### வணிகர் சங்கத் தலைவர் அழைப்பு

வடபகுதியில் அழிந்துபோன வர்த்தக சங்கங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசு உதவ வேண்டும் என்று வணிகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.வணிகர் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

வடபகுதியில் யுத்தத்தால் அதிகளவில் தொழிற்சாலைகள் அழிந்துபோய்விட்டன. வளங்களும் அழிக்கப்பட்டு விட்டன.

அவற்றை மீண்டும் கட்டியெழுப்பி தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது அவசியமானதொன்றாகும். தொழிற்சங்க கட்டடங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு வங்கிகள் மூலம் இலகு கடன் வசதிகள், நட்டஈடுகள் என்பவற்றை வழங்க வேண்டும். தற்போது இங்கு வங்கிகளின் வருகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறைவாகவே உள்ளது. மக்களின் மீள்கட்டுமானத்துக்குத் தேவையானவற்றை வங்கிகள் வழங்க வேண்டும்.

தென்னிலங்கைக்கும் எமது பிரதேசத்துக்கும் அதிகமாக வேறுபாடுகள் உண்டு. தென்னிலங்கை போன்று வட பகுதிகளிலும் வங்கிக் கடன் திட்டங்களை அரசு அறிமுகம் செய்யவேண்டும்.

புதியதொழில் வாய்ப்புக்கள், சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். 5 வருடத்துக்கு வரிக்கழிப்பை வழங்க வேண்டும். இவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பொருளாதார வர்த்தக ரீதியில் எமது பிரதேசம் முன்னேற்றமடையும். அத்துடன் வேலையில்லாப் பிரச்சினையும் நீங்கும். என்றார் அவர். (வ-311)


## கதிர்காமத்திலிருந்து வந்த வேல் பிரதிஷ்டை

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடிக்கு அருகிலுள்ள இராசகோபால் இல்லத்தில் தானாகவே வந்த வேல் பிரதிஷ்டை செய்து தினமும் சீலன் என்பவரால் பூசை வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தினமும் நடைபெறும் பூசை வழிபாட்டில் பலர் கலந்து அருள்வாக்குப் பெற்றுச் செல்கின்றனர். இந்த வேல் கதிர்காமத்திலிருந்து வந்த வரலாறு யாவற்றையும் இ.சீலன் யாவருக்கும் கூறிக் கொள்கின்றார். இதன் மகிமையை நேர்முகமாக வந்து அறிந்து கொள்ளலாம்.

இ.சீலன் பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.


## குவைத்தில் உள்ள இலங்கைத் தொழிலாளர்கள் விரைவில் நாட்டுக்கு

கொழும்பு,ஓக.10

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பராமரிக்கப்பட்டுவருகின்ற இலங்கைத் தொழிலாளர்கள் 250 பேர் அடுத்து வரும்திணங்களில் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்தத் தொழிலாளர்கள் அனைவரும்பணி புரிந்த வீட்டு எஜமானர்களால் துஷ்பிரயோகங்கள் செய்யப்பட்ட நிலையில் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தவர்களே ஆவர்.

இதேவேளை தொழிலாளர்களிடம் பணம் எதுவும் அறவிடுவதில்லையென குவைத் அரசு மனிதாபிமானம் காட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

முதல் கட்டமாகஅங்கு தூதரகத்தில் பராமரிப்பிலுள்ள 80தொழிலாளர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)


உ
ஐயனார் துணை



அனலைதீவு நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு
## ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்
### வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா - 2011

ஐயனார் அடியார்களே!

அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனாருக்கு நிகழும் கர வருஷம் ஆடி மாதம் 19 ஆம் நாள் (04.08.2011) வியாழக்கிழமை துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவ பெருவிழா நடைபெற்று வருகின்றது. இந்த விழாக்காலத்தில் அடியார்கள் ஆசார சீலராக வருகை தந்து திருத்தொண்டுகள் பல புரிந்து ஐயனார் அருள் பெறுவீர்களாக!

#### தொடரும் பெருவிழா நிகழ்வுகள்

11.08.2011 பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம்
மாலை சப்பைரத உற்சவம் (சப்பரத் திருவிழா)
12.08.2011 முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழா (இரத ஆரோகணம்)
13.08.2011 முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழா, தொடர்ந்து யாக கும்ப அபிஷேகம் மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்)
14.08.2011 இரவு திருக்கல்யாண உற்சவம்

மஹோற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
அனைவரும் வருக ஐயனார் அருள் பெறுக.

பரிபாலன சபை
ஐயனார் திருக்கோயில்.

அனலைதீவு - 5 (6683)



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 774 திகதி 08-08-2011

வெற்றி எண்கள்
08 11 13 43 X (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 11,563,500/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 11,563,500/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | 750,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 342 | 1,000/= | 342,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 636 | 1,000/= | 636,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15767 | 60/= | 946,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8184 | 40/= | 327,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 207044 | 20/= | 4,140,880/= |
| ஆங்கில எழுத்து | 30087 | 20/= | 601,740/= |
| | | மொத்தம் ரூ. 8,144,000/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 600494283-1-11 |
| மட்டக்களப்பு | 600497718-5-25 |
| புத்தளம் | 600484644-6-46 |
| கொழும்பு | 600498178-7-47 |
| நுவரேலியா | 600484953-6-46 |
| மாத்தறை | 600480159-5-15 |
| களுத்துறை | 600489102-4-04 |
| கொழும்பு | 600490441-1-31 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,544,000/=
இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 11,968,340/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஒகஸ்ட் 11 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## ஏழையும் மனநிறைவுடன் தரிசனம் செய்ய வாசல் திறக்கும் நல்லூர் ஆலயம்

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு கலாசார முகங்கள் உண்டு. ஒன்று கந்தபுராணக் கலாசாரம் மற்றையது கிடுகுவேலிக் கலாசாரம். கந்த புராணம் நிலவிய உயர் கலாசாரத் தளமாக யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் சித்திரிக்கப்பட்டது. இந்தக் கலாசார உருவாக்கலில் ஆறுமுக நாவலர், நல்லைக் குருமணி ஆகியோர் முக்கியமானவர்கள். கோவில்களில் கந்தபுராண படனம் இடம்பெறுவது நீண்ட கால வழக்கமாகும். அதிலும் கதிர்காமம், மாவிட்டபுரம் கந்தசாமியார், நல்லூர், செல்வச் சந்நிதி என அடுத்தடுத்து திருவிழாக்கள் இடம்பெறுவதும், யாழ்ப்பாணத்தவர்களில் பலர் கந்தபுராண விரதமிருப்பதும் இதற்கான அடிப்படையாகும்.

நல்லூர்த் திருவிழா என்பது யாழ்ப்பாணத்தின் கலாசாரத் திருவிழா என்றே வர்ணிக்கப்படுவது வழக்கம். யாழ்ப்பாணத்தவர்கள் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் இருக்கும் மக்கள் நல்லூர்த் திருவிழாவில் ஒன்று கூடுவது வழமை. அண்மைய வருடங்களில் புலம்பெயர்ந்த மக்கள் இதில் அதிகளவில் இணைந்து கொண்டுள்ளனர். வியாபாரிகள் அதிகளவில் கடை விரிப்பதும் இத் திருவிழாவில்தான். கர்நாடக இசைக் கச்சேரிகளும், சைவப் பிரசங்கங்களும், சிறுவர்களை மகிழ்விக்கும் களியாட்டங்களும் என நல்லூர் ஆலயச் சூழல் உயிர்ப்புடன் காணப்படும். நல்லூர் திருவிழாக்களில் கார்த்திகைத் திருவிழாவில் இடம்பெறும் இசையர்ச்சனை ஏனைய இடங்களில் காண முடியாத முக்கிய நிகழ்வாகும்.

முன்னர் மாவிட்டபுரம் மற்றும் நல்லூர்த் திருவிழாவில் வாணவேடிக்கைகளும் இடம்பெற்றதாகப் பெரியவர்கள் கூறுவார்கள். நல்லூரை அண்டிய பண்டாரக் குளப் பகுதியில் வாண வேடிக்கைகள் இடம்பெறுவது வழக்கமாகும். மாவிட்டபுரத்தில் 1918 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாண வேடிக்கையின் போது இடம்பெற்ற விபத்தில் பலர் இறந்து போனதாகவும், இதனையடுத்து அங்கும் நல்லூரிலும் வாண வேடிக்கை நிறுத்தப்பட்டதாகவும் எனது தாயார் கூறுவார். இது பற்றி ஒரு பாடலும் உள்ளது:

செட்டிகள் இருவர் பட்டார்; சேனாதிராசன் பட்டார்
மட்டுவில் சுப்பன் பட்டார்; மாப்பிள்ளைக் குருக்கள் பட்டார்
நட்டுவர் இருவர் பட்டார்; நாட்டியப் பெண்கள் பட்டார்
விட்டதோர் வாணத்தாலே; வெகுசனம் வீழ்ந்ததையா!

என்பது அப்பாடல்.

நல்லூர் சித்தர்கள் வாழ்ந்த பூமி. ஈழத்துச் சித்தர் பரம்பரையின் தோற்றுவாய் நல்லூரேயாகும். கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் முதலியோர் நல்லூரை முதன்மை இடமாகக் கொண்ட ஞான பரம்பரையினராவர். நல்லூர் திருவிழாவுக்கு வந்து திருவிழா முடியும் வரை ஆலயமே தஞ்சமென வாழும் நூற்றுக்கணக்கான பக்தர்களை இன்றும் காணலாம். தென்மராட்சியிலிருந்தும், தீவுப்பகுதியிலிருந்தும் கால்நடையாக காவடி மற்றும் பஜனை அணிகள் வருவதும் இன்று வரை தொடர்கின்றது.

நல்லூரில் ஏனைய கோவில்களை விடப் பல சிறப்புக்கள் உள்ளன. பல எலி சேர்ந்தால் புற்றெடுக்காது என்று கூறுவார்கள். கோவில்களின் பரிபாலன சபைகள் சோர்ட் ஏறும் அவலம் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் அரங்கேறியுள்ளது. நல்லூருக்கு எசமான் எனப்படும் ஒருவரே நிர்வாகி. எனவே அங்கு பிரச்சினைகள் எழ மாட்டாது. ஒரே தொடரொழுங்கான தீர்மானங்களே ஆலயத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கோவில்கள் பணம் பிடுங்கும் நிலையங்களாக மாறி வருவதாகப் பலரும் குற்றஞ் சாட்டுகின்றனர். அர்ச்சனைச் சீட்டு, விசேட நூல், அதற்கு மேலதிகமான பல்வேறு செலவுகளை ஏற்படுத்துவனவாக ஆலயங்கள் உள்ளன. யார் அதிகம் உபசரணை செய்கின்றனரோ அவர்கள் பக்கமே அந்தணர்கள் திரும்புகின்றனர் என்பதும் பரவலான அங்கலாய்ப்பு; இல்லைக் குற்றச்சாட்டும் கூட. ஆனால் நல்லூரில், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கப்படுகிறது. எவருக்கும் ஒரு ரூபாவுக்குத் தான் அர்ச்சனைச் சீட்டு வழங்கப்படும். அதனால் இங்கு எந்த ஏழையும் மன நிறைவுடன் தரிசனம் செய்யலாம். அது மட்டுமன்றி ஜனாதிபதி உட்பட ஆண்கள் எவர் வந்தாலும் மேலாடையைக் கழற்றியே உள்ளே செல்ல முடியும். எந்தப் பாகுபாடும் கிடையாது. எந்த முன்னுரிமையும் கிடையாது. பல பிரசித்தி பெற்ற ஆலயங்களில் இன்று இந்த நிலை இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

அன்பளிப்புக்கள் விடயத்திலும் பொதுவான நடைமுறையே உள்ளது. நான் இத்தனை லட்சத்துக்குச் செய்தேன். எனக்குத் தான் தலைப்பாகை கட்ட வேண்டும் என உள்ளூர் ஆலயங்களில் அடம்பிடிக்கும் தன(தன்)வந்தர்கள். நல்லூரில் இத்தகைய தன் முனைப்புக்களைக் காட்ட முடியாது. ஒரு வாகனத்தை அன்பளிப்புச் செய்வதானால் கூட அதற்கான பராமரிப்புச் செலவையும் சேர்த்தே வழங்க வேண்டும். அது மட்டுமன்றி அது கோவிலின் உடமையாகி விடும். எனவே, என்னுடையது என யாரும் மார் தட்டி இறுமாப்படையவும் முடியாது.

நல்லூர் தன்னிலையிலிருந்து இறங்காமல், தனக்கான வழியில் பயணிப்பதால்தான் அது முதன்மையான ஆலயமாக மிளிர்கின்றது. யாழ்ப்பாண அரசின் அடையாளச் சின்னமல்லவா அது!

விழிச்சான் குஞ்சு.

# ஐ.நா. மனித உரிமைச் சபையில் சவாலை எதிர்கொள்ள இலங்கை தயார்

## மஹிந்த சமரசிங்க கூறுகிறார்

ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 18 ஆவது கூட்டத் தொடரை எதிர்கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக பெருந்தோட்டக்கைத் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் விளக்குதல் மற்றும் யுத்தத்தின் பின்னரான இலங்கையில் சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தொடர்பில் சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளில் அரச தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 18 ஆவது கூட்டத் தொடரில் எமது நாட்டின் தூதுக்குழு கலந்து கொள்ளும். இந்தக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எவ்விதமான நகர்வுகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என்பது எமது நம்பிக்கையாகும்.

யுத்தத்தின் பின்னர் நாட்டின் சகலதுறை அபிவிருத்தி தொடர்பில் அரசு முன்னேற்றத்தைக் காட்டிவருகின்றது.

மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். எனவே கூட்டத் தொடரில் எவ்வாறான நிலைமையையும் சமாளிக்கும் வகையில் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (ச)



சீனாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை பீஜிங் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போது சீன துணை வெளிவிவகார அமைச்சின் ஷாங் ஜி யுன் அவரை வரவேற்றார். இவருடன் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திசாநாயக்க் உட்பட பலர் சென்றுள்ளனர்.

# பதவி உயர்வு வழங்கப்படாததால் 7,000 பொலிஸார் விரக்தியில்

கொழும்பு, ஓக. 10

உரியதகுதிகளைப் பெற்றிருந்த போதிலும் பொலிஸ்துறையின் அடிமட்டத்தில் உள்ள சுமார் 70 ஆயிரம் பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படாததால் அவர்கள் விரக்தியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதவி உயர்வுகள் சம்பந்தமாக கிரமமான வழிகளைப் பின்பற்றாமையே இந்த இழுபறிக்குக் காரணம் எனப் பாதிக்கப்பட்ட பொலிஸார் கூறுகின்றனர். பொலிஸ்துறையில் கீழ்மட்டத்தில் சுமார் 70 ஆயிரம் பேர் இவ்வாறு விரக்தியடைந்துள்ளனர்.அவர்கள் மனப்பூர்வமாக பணிகளில் ஈடுபடுவதில்லை என்றும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸ் கான்ஸ்டபிள் தரம் முதல் பிரதம பொலிஸ் பரீட்சகர் வரை தமக்குரிய பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள் என பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புதிய பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோன் மீது தமக்கு நம்பிக்கை இருக்கின்றது. இந்த இழுபறி நிலையை நீக்கித் தங்களுக்கு நியாயபூர்வமான தீர்வுகளை அவர் வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம் எனவும் பாதிக்கப்பட்ட பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# டெங்கு ஒழிப்புபைக் கண்காணிக்க அதிகாரம் வழங்கல்

கொழும்பு, ஓக.10

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை கண்காணித்து துரிதப்படுத்துவதற்கான அதிகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜேவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ளபிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜேவர்தன, பொலிஸ் திணைக்களத்தின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் சமூக பொலிஸ் பிரிவுகளை ஒருங்கிணைத்து டெங்கு ஒழிப்புத் திட்டங்களைதுரிதப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்.

# மாகாண சபைகளில் அதிக வெற்றிடங்கள்; நிதி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு, ஓக. 10

நாடெங்குமுள்ள மாகாண சபைகளில் 29 ஆயிரத்து 84 வெற்றிடங்கள் நிலவுகின்றன என நிதி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மாகாணசபைகளுக்கு மொத்தமாக 3 லட்சத்து27ஆயிரத்து 248 பணியாளர்கள் தேவையெனவும், தற்சமயம் 2லட்சத்து 98 ஆயிரத்து 164 பேர் மட்டுமே உள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் நிலவும் வெற்றிடங்கள் வருமாறு:-

வடமேல் மாகாணம் 5ஆயிரத்து 884, மேல் மாகாணம் 4 ஆயிரத்து 782, மத்திய மாகாணம் 655, தென்மாகாணம் 2 ஆயிரத்து 169, வடமாகாணம் 4 ஆயிரத்து116, வடமத்திய மாகாணம் 4 ஆயிரத்து120, ஊவாமாகாணம் 2 ஆயிரத்து246, சப்ரகமுவ மாகாணம் 3 ஆயிரத்து411, கிழக்கு மாகாணம் ஆயிரத்து 701.

மாகாணசபைகளுக்கான வருடாந்த நிதியை நிதி ஆணைக்குழுவே பரிந்துரை செய்கிறது. இது தொடர்பாக மாகாண முதலமைச்சர்களிடம் வினவிய போது, நிதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை விட அதிகமான வெற்றிடங்கள் நிலவுகின்றன என அவர்களில் பெரும்பாலானோர் தெரிவித்தனர்.

இலங்கை நிர்வாக சேவை, கல்வி நிர்வாகசேவை, கணக்காளர் சேவை உட்பட பல்வேறு துறைகளில் வெற்றிடங்கள் நிலவுவதால் மாகாணசபைகளின் சேவைகளை சரியாக நடத்த முடியவில்லை. இது சம்பந்தமாக அரச உயர் பீடத்துக்கு ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் கிளிநொச்சி காஞ்சிபுரம் மக்கள்

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி காஞ்சிபுரம் கிராமத்தில் வாழும் சுமார் அறுபது குடும்பங்கள் தாம் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளன.

பரந்தன் சந்தியில் இருந்து சுமார் ஆறு கிலோமீற்றர் தொலைவில் மேற்படி காஞ்சிபுரம் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அறுபது குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 245 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி கிராமத்தில் 20 குடும்பங்களுக்கு மாத்திரம் கடந்த 2006 ஆம் ஆண்டு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அந்த வீடுகள் அமைக்கப்பட்டு வரும்போது இடப்பெயர்வுகள் ஏற்பட்டன.

இதனால் மக்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. தற்போது இவை புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவர்கள் மீள்குடியமர்ந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில் பெரும் சிரமங்களின் மத்தியில் வீடுகளின்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி கிராமத்தில் இருந்து 145 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தினமும் காலையில் ஆறு கிலோமீற்றர் தூரம் கால்நடையாக நடந்து சென்று பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

அத்துடன் பரந்தன் குமரபுரம் கிராம அலுவலர் பிரிவில் இந்தக் கிராமம் அடங்குவதால் கிராம மட்ட அமைப்புக்களான கமக்காரர் அமைப்பு, மாதர் சங்க அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன பரந்தன் குமரபுரம் பகுதியை மையமாக வைத்தே தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இதனால் தமது கிராமம் புறக்கணிக்கப்படுவதுடன் உரிய முறையில் உதவிகள் கிடைப்பதில்லையெனவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வீதிப்புனரமைப்புக்களோ, கிராம மட்ட அபிவிருத்திகளோ, போக்குவரத்து வசதிகளோ அற்றுக் காணப்படுகின்ற இந்தக் கிராமத்தின் பக்கம் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்திப் பாதிக்கப்பட்ட தங்களின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும் எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# நல்லதொரு சமுகத்தை கட்டியெழுப்புவோம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தளுவத்த வேண்டுகோள்

கிளிநொச்சி, ஓக.10

நல்லதொரு வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி.தளுவத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுவர்களைப் பாதுகாக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் ஜனக குணதிலக தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி.தளுவத்த கலந்து கொண்டு உரையாற்றும் போது:

போருக்குப் பின்னரான தற்போதைய சூழலில் மக்களின் வாழ்க்கை மற்றும் பிள்ளைகளினதும், மாணவர்களினதும் மன நிலையை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்கும் அவர்கள் அச்சம் சந்தேகமின்றி தமது கல்வியைத் தொடர்வதற்கும் ஏற்ற வகையில் இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் கலாசாரத்தின்படி இங்கு வாழுகின்ற சகல சமூகத்தினரும் சகல மதத்தவர்களும் சுமுகமான மற்றும் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்குத் தேவையான மனநிலையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் விபத்துக்களில் இருந்தும் மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# வாகன இலக்கத் தகடுகள்

கிளிநொச்சி, ஓக.10

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதியினருக்கு வாகன இலக்கத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இவற்றின் உரிமையாளர்கள் வாகனப்பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் புகைப்பட பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத்தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றுடன் நேரில் சமுகமளித்து இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

GX-8852,GT-9669,GU-5606,QE-3337,HG-8062,QC-0970,QD-0343,LB-4047,GX-8089,HB-5904,LA-3273,GP-4691,QE-3087,QI-3177,LC-4552,QB-9526,HB-7853,LB-5931,JH-4978,LE-4515,LB-8364,QS-2636,QA-7262,QH-9154,GE-6399,QA-9352,HJ-5476,HK-2361,QJ-1221,QD-7730,HQ-6033,QA-3673,LF-8673,GU-9839,NC-2168,LC-2292,QH-5770,PE-6466,LB-3834,JV-6233,JJ-3939,GV-1086,LA-5928,GG-4813,JD-4212,LD-9966,LA-4079,HA-6810,LF-8015,JR-4033,GE-0039,GF-9852,QB-0875,JM-7243,GJ-4455,LC-5077,JI-4848,KA-2504,HO-8780,LD-7979,HE-3718,LC-0261,HL-1598,GO-6663,LD-0591,JF-4619,HR-4641,GP-5587,HL-6720,NA-1412,QJ-2268,HS-6802-HX-1964,GY-0278,KH-0576,JE-8703,GX-5486,QD-0262,KE-0512,HV-3016. (க)

## நல்ல ஒருங்கமைப்பு...



முக்கியமான உரை: முல்லைத்தீவு பனிக்கன்குளம் அ.த.க. பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியின் போது ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கையற்செல்வன் உரையாற்றுகின்றார். அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (410)

# சிறார்களுக்கு உதவிகள்

யுத்தம் மற்றும் வேறு பாதிப்புக்களால் தாய், தந்தையரை இழந்த மன்னாரைச் சேர்ந்த இளவயதுச் சிறார்களுக்கு நலன் சார் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இத்தகைய பாதிக்கப்பட்ட சிறார்கள் 90 பேருக்கு புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

அத்துடன் பண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணத்தொகைகள் சிறுவர்களைப் பேணிக்காத்துவரும் அவர்களின் உதவியாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் மாதாந்தம் அவர்களுக்குப் பண உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் அனோமா திஸநாயக்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (க-22)

# பயன்படுத்த முடியாத நிலையில் கணினித் தொகுதி

கிளிநொச்சி, ஓக்.10

முல்லைத்தீவு மாவட்டம் வன்னிவிளாங்குளம் பாடசாலைக்கு வழங்கப்பட்ட கணினித் தொகுதிகள் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைகளுக்கு ஐந்து கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனுடன் மின்பிறப்பாக்கியொன்றும் வழங்கப்பட்டது.

ஆனல் இந்த மின்பிறப்பாக்கியின் மூலம் இரண்டு கணினிகளை மட்டுமே இயக்க முடிகிறது. மீதி மூன்றும் இயக்க முடியாத நிலையிலுள்ளன.

தற்போது இங்கு 150 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 15 ஆசிரியர்கள் கற்பித்தல் நவடிக்கையில் ஈடுபடுகின்றனர். ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள் இல்லாததால் ஆசிரியர்கள் தங்கிநின்று மாணவர்களுக்குக் கற்பிக்க முடியாதுள்ளது.

மேலும் வகுப்பறை நெருக்கடியும் தொடர்கின்றது. பாடசாலைக்கு முன்னால் செல்லும் மின்சாரத்தை இந்தப் பாடசாலைக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்தால் பேருதவியாக அமையுமெனப் பாடசாலையின் உப அதிபரான சி.தேவகி தெரிவித்தார். (க-410)

# ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருக்குச் சிறப்பான முறையில் பிரிவுபசாரம்

கிளிநொச்சி, ஓக.10

ஓய்வுபெற்றுச் சென்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தம்பிராசா குருகுலராஜாவுக்குச் சிறப்பான பிரிவுபசார நிகழ்வொன்று கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு நலன்புரிச் சங்கத் தலைவர் க. இரத்தினகுமார் தலைமை தாங்கினார்.



நிகழ்வுக்கு முன்னதாக விழா நாயகரும் அவரது பாரியார் திருமதி சித்திரா குருகுலராஜாவும் கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலய முன்றலில் இருந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு மங்களவாத்திய இசையைத் தொடர்ந்து கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலயம் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய மாணவர்களின் இன்னிசை ஆகியவற்றுடன் வலயக்கல்வி அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா வைத்தியசாலை அத்தியட்சகர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் பெறுமதியான பரிசொன்றும் வழங்கப்பட்டது.

1976 இல் கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகத் தமது பணியை ஆரம்பித்த குருகுலரான கொத்தணி அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எனப்பல்வேறு பதவிகளிலும் தமது ஆளுமையை நிலை நாட்டி இறுதியாக 2005 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெறும் வரை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

நேர்மையும், துணிவும் பண்பும் நிறைந்த இவர் கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். யுத்தத்தால் அழிவடைந்து கிடந்த பாடசாலைகளின் மீள் இயக்கத்துக்கு அரும்பணியாற்றியுள்ளார். இவரது ஓய்வானது கிளிநொச்சியின் கல்வித்துறை வரலாற்றில் நிரப்பமுடியாததொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கல்விச் சமூகத்தினர் கவலையுடன் கூறுகின்றனர்.

அது எவ்வாறிருப்பினும் ஓய்வுபெற்றுச் செல்லும் த.குருகுலராஜாவின் கல்விப் பணிகள் அவரது ஓய்வு காலத்திலும் கிளிநொச்சிக்குக் கிடைக்கவேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சமூகப் பராமரிப்பு நிலையங்கள்

கிளிநொச்சி, ஓக.10

சமூகப்பராமரிப்பு நிலையங்கள் கரைச்சி, பூநகரி, பளை, மாந்தைமேற்கு, மாந்தை கிழக்கு, மன்னார் நகரம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் கிளிநொச்சியிலுள்ள கரைச்சி, பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளுக்கான நிதியை யுனிசெவ் நிறுவனம் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக வழங்கியுள்ளது.

ஏனைய பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்படும் நிலையங்களுக்கான நிதியை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மாகாண விசேட அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு ஒரே இடத்தில் சேவைகளை வழங்கும் நோக்கிலான சமூக பராமரிப்பு நிலையங்கள் சென்ற ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டன.

தற்போது வன்னிப் பிரதேசத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. சில பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிலையங்களின் நிர்மாணப் பணிகள் முழுமையடைந்து அவை ஏற்கனவே இயங்கி வருகின்றன.

சமூக சேவைகள் அமைச்சின் சமூக பராமரிப்பு நிலையம் என்ற செயற்றிட்டம் நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களிலும் ஏற்கனவே முழுமையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது தான் வடமாகாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையங்களில் சமூக சேவை அதிகாரி, சமூகசேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், சிறுவர் நன்னடத்தை அதிகாரி, உளவளத்துணை உதவியாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர், முன்பிள்ளைப் பராய அபிவிருத்தி உதவியாளர் ஆகியோர் ஒருங்கிணைந்து கடமையாற்றுகின்றனர். மிக வறிய மக்களுக்கான சேவைகளை இவர்கள் வழங்குகின்றனர்.

இந்த அதிகாரிகள் தேவை நாடிவரும் ஒருவருக்குக் குழுநிலைக் கலந்துரையாடல் மூலமாகத் தேவைகளை இனங்காண்கின்றனர்.

பின்பு தம்மால் வழங்கக்கூடிய சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் வழங்குகின்றனர். ஒரே நேரத்தில் ஒருவர் பல தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வசதிகளும் கிடைக்கின்றன.

ஒரே நபர் ஒரே தேவையைப் பல அதிகாரிகளிடம் சென்று பூர்த்தி செய்யும் நிலையும் தவிர்க்கப்படுகின்றது.

மிக வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் இந்தச் சமூக பராமரிப்பு நிலையச் செயற்றிட்டத்தை சமூக உளவியலாளர்களும் பெரிதும் வரவேற்றுள்ளனர். (க-121)

## தபாலகங்கள் மீள் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக.10

இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு, உடையார் கட்டுத் தபாலகங்கள் கடந்த மூன்றாம் திகதி புதன்கிழமையிலிருந்து மீள இயங்கத் தொடங்கியுள்ளதாக வவுனியாப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே. புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புத் தபாலகம் கோம்பாவிலிலும், உடையார் கட்டுத் தபாலகம் பரந்தன்- முல்லைத்தீவு வீதியிலும் இயங்குகின்றன.

இந்தப் பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் இந்தத் தபாலகங்கள் மீள இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஆடிப் பூர திருவிழா

பூநகரி, ஓக.10

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செல்லையாதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், எழியாநாரை தான்தோன்றி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், சோலை ஸ்ரீ நாகபூரணி அம்மன் ஆலயம் ஆகிய மூன்று அம்மன் ஆலயங்களிலும் ஆடிப்பூரத் திருவிழா மிகவும் சிறப்பாக நடந்து முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மூன்று ஆலயங்களிலும் அம்மன் மீது ஊஞ்சல் பாட்டுப் பாடப்பட்டதோடு அம்பாள் வீதியுலா வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் இந்த மூன்று ஆலயங்களிலும் குழுமி நின்று அம்பாளின் அருளைப் பெற்றுச் சென்றனர். (க-406)

# வவுனியா கொலை அச்சுறுத்தல்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம்

வவுனியா நகர சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் ஆகியோருக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தலை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோர் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: மன்னார் நகர சபைத் தலைவர், உபதலைவர் மற்றும் சில உறுப்பினர்களுக்கு எதிராகவும் நகரசபை நிர்வாகத்துக்கு எதிராகவும் அண்மைய நாள்களில் மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவது ஜனநாயகச் சூழலை கேள்விக்குள்ளாக்குகின்ற திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் பிளவை உருவாக்கிச் சுய அரசியல் நகர்வுக்கு வலுச்சேர்க்கத் தமிழ், முஸ்லிம் சமுகங்களில் இருந்து சிலர் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். அரசியல் பிழைப்பு நடத்த அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ள ஆளும் தரப்பு அரசியல்வாதிகளின் இச் செயலுக்கு எந்தச் சமூகமும் பலியாகக் கூடாது எனக் கேட்டுக் கொள்ளுகிறோம். நகர சபை உறுப்பினர்களின் அடையாள உண்ணாவிரதத்தில்எமது கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆதரவு கொடுக்க வேண்டும்.

சமூக வேறுபாடுகளைக் களைந்து விட்டுப் பொது மக்களும், அமைப்புக்களும் இந்த அடக்கு முறைகளுக்கும் கொலை மிரட்டல்களுக்கும் எதிராக அணி திரள வேண்டும் எனக் கேட்டுகொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-601)

## சோதனை மேல் சோதனை...



அவலத்தின் மறு பக்கம்: புதுக்குடியிருப்பை அண்டிய பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்களின் பொருள்களைச் செட்டிகுளத்திலிருந்து ஏற்றி வந்த லொறியொன்று மூங்கிலாறுக் குளத்தில் குடைசாய்ந்த நிலையில் காணப்படுகின்றது. (555)

## விசேட பொதுக் கூட்டம்

வடமாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட கூட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள மாவட்டக் கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறும்.

சமாசத்தின் தலைவரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான வீ.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார்.

கூட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள 47 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்களைத் தவறாது சமுகமளிக்குமாறும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (க-26)

# பூநகரி செல்விபுரம் கிராமத்தில் இறைச்சிக்காக வெட்டப்பட்டது உழவுமாடு

## அச்சத்தில் உறைந்து போயுள்ள கிராமவாசிகள்

பூநகரி, ஒக.10

பூநகரி கொல்லக்குறிச்சி கமக்கார அமைப்புக்குட்பட்ட செல்விபுரம் கிராமத்தில் விவசாயி ஒருவரின் உழவு மாடொன்று களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்ட கொடிய சம்பவம் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்விபுரம் கிராமத்தைச் சேர்ந்த வல்லிபுரம் தெய்வேந்திரம் என்பவர் ஓர் ஏழை விவசாயி. இவர் உழவு மாடுகளை வைத்துக் கூலிக்கு உழவு வேலைகளைமேற்கொண்டு வருகின்றார்.

கடந்த 29 ஆம் திகதி இரவு இவரது 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உழவு மாடொன்றை அவிழ்த்துச் சென்ற சிலர் தம்பிராய் கிராமத்தில் உள்ள மருதடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் வைத்துக் கொன்றபின் இறைச்சிக்காக உரித்துள்ளனர். சம்பவ இடத்தில் அதன் தோல் மற்றும் கழிவுப்பாகங்களை விட்டுச் சென்றமை அடுத்த நாள் காலை தெரியவந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பாக உழவு மாட்டின் உரிமையாளரால் பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸாரும் வழமை போல சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். மேலும் மாட்டின் எச்சங்களையும் படம் பிடித்துச் சென்றனர்.

இது போன்ற சம்பவம் ஒன்று செல்விபுரத்தில் ஏற்கனவே நிகழ்ந்துள்ளது.

ஆனால் அதில் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்களால் கறவைப் பசுக்களையும், உழவு மாடுகளையும் வளர்ப்போரும், ஆடு, மாடுகளைப் பட்டியிலிட்டு வளர்ப்போரும் பெரும் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் விரைந்து செயல்படுவதோடு இத்தகைய சம்பவங்கள் மேலும் நடைபெறாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனக் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. (க-406)

# பேருந்திலிருந்து வீழ்ந்து காயமடைந்த பயணி இடைநடுவில் இறக்கி விடப்பட்டார்

கிளிநொச்சி, ஒக.10

பேருந்திலிருந்து பயணியொருவர் தவறி வீழ்ந்தபோதும் அதனைக் கவனிக்காது சாரதி பேருந்தைச் செலுத்திய சம்பவம் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் நிகழ்ந்துள்ளது.

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் ஊடாக வவுனியா செல்லும் தனியார் பேருந்து முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்துக்கு முன்பாக நின்ற ஆசிரியர்களையும் மற்றும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டது.

ஏற்கனவே பேருந்தினுள் சனக் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இதனால் தவறிவீழ்ந்த பயணி வேறு சிலருடன் மிதி பலகையில் நின்றவாறு பயணித்தார்.

பேருந்து சிறிது தூரம் சென்றதும் பயணி ஒருவர் கீழே வீழ்ந்ததை அவதானித்த சக பயணிகள் பலத்த சத்தம் போட்ட போதிலும் பேருந்து நிறுத்தப்படாது சென்று கொண்டிருந்தது.

இதனை அவதானித்த பயணிகள் ஆத்திரமுற்று பேருந்தின் பக்கவாட்டில் அடித்து ஒலி எழுப்பிப் பேருந்தை நிறுத்துமாறு கூக்குரலிட்டனர். இதன் பின்பே சாரதி பேருந்தை நிறுத்தினர்.

பின்னர் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் பின் பக்கமாகப் பேருந்து சென்றது. அங்கு கீழே வீழ்ந்த பயணி முகம், கைகளில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் காணப்பட்டார்.

அவரை ஏற்றிய மேற்படி பேருந்து பரந்தன் சந்தியில் அவரை வலுக்கட்டாயமாக இறக்கிவிட்டு வவுனியா நோக்கிச் சென்றுவிட்டது. சக பயணிகள் காயமடைந்த வரை யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தில் ஏற்றிவந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

காயமடைந்தவரைப் பரந்தனிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்காது பரந்தன் சந்தியில் இறக்கிவிட்டுச் சென்ற தனியார் பேருந்து சாரதியின் செயல் சக பயணிகளுக்கு ஆத்திரத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.


முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலய ஆசிரியரும், கொடிகாமம் தாவளை - இயற்றாலையைச் சேர்ந்தவருமாகிய 42 வயதான இரத்தினம் நாகேந்திரன் என்பவரே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (க-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கால ஆபரணங்கள்








பழங்காலத்தில் பயன்படுத்திய ஆபரணங்கள் பார்ப்பதற்கு மிகவும் வித்தியாசமாகக் காணப்படும்.
இத்தகைய அரியவகை ஆபரணங்களில் இங்கு சிலவற்றை காணலாம்.

# களி மண்ணால் உருவாக்கப்பட்ட வீடு




பண்டைய கால நுட்பங்களின மூலம் மலைப் பகுதியில் களிமண் மற்றும் வைக்கோல் போன்றவற்றைப் பயன்படுத்தி பசுமையான சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட அழகான வீடு இதுவாகும்.

# பழங்காலத்தில் பயன்படுத்திய தொலைபேசி





தற்காலத்தில் தொலைபேசிகள் பல நவீன விடயங்களை உள்ளடக்கியதாக உள்ளது.
ஆனால் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசிகள் என்ன வடிவத்தில் இருந்தது என்று பார்க்கலாம்.

# எகிப்தின் அற்புதங்கள்



எகிப்து என்றாலே நம் அனைவருக்கும் நினைவுக்கு வருவது அங்குள்ள பிரமிட்டுகள் தான்.
...கு மிகுந்த பிரமிட் ஒன்றை இங்கு காணலாம்.

# பாம்புகள் இணைந்து ஆடும் நடனம்



பாம்புகள் சண்டையிட்டுக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம்.
அவ்வாறே பாம்புகள் மகிழ்ச்சியாக இருக்கும்போது பின்னிப் பிணைந்து ஆடும் நடனத்தை இங்கு பார்க்கலாம்.

# கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதக் குரங்கின் எலும்பு கண்டுபிடிப்பு

உகண்டா அருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 2 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்க மனிதக் குரங்கின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
ஆராய்ச்சியாளர்கள் இவற்றைத் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தி வருகின்றனர். இதன்மூலம் மனித உயிர்களின் தோற்றம் குறித்து தெரியவரும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.
உகண்டாவின் நபாக் என்ற பகுதியில் மார்ட்டின் பக்போர்ட் தலைமையில் பிரெஞ்ச் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட அகழ்வாராச்சியில் இந்த அரிய எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது.
இந்த எலும்புக்கூடு மற்றும் மண்டை ஓடு சுமார் 2 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது என்று முதல்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.
இத்தனை ஆண்டுகள் பழமையான மனிதக் குரங்கின் எலும்புகள் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறை என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.
இது குறித்து தலைமை ஆராய்ச்சியாளர் மார்ட்டின் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டதாவது:-
அகழ்வாராய்ச்சியில் மிகப் பழைமையான மனிதக் குரங்கின் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விரிவாக ஆராய்ந்து வருகிறோம்.
முதற்கட்ட ஆய்வில் இது 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையது என்பது உறுதியாகி உள்ளது. மனிதத் தோற்றம் குறித்து துல்லியமாக அறிந்து கொள்ள இந்த ஆராய்ச்சி பெரிதும் உதவும்.
கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடு 11 வயதுடைய ஆண் குரங்கினுடையது என்பதும் ஆய்வில் கிடைத்த தகவலாகும்.

# பழங்கால குகை நகரம்



George என்ற மன்னரால் 12 ஆம் நூற்றாண்டில் இந்தக் குகை நகரம் உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த குகை வார்ட்ஸியா (Vardzia) என்றழைக்கப்படுகிறது. வார்ட்ஸியா (Vardzia) குகை மட்கவாரி (Mtkvari) என்ற ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. (Vardzia) குகையில் உள்ள 6 ஆயிரம் அறைகள் 13 புராண கதைகளுக்கு விளக்கம் தருகிறது.
இந்த நகரத்தில் ஒரு தேவால யம், ஒரு அரியணை அறை மற்றும் ஒரு சிக்கலான நீர்ப்பாசன அமைப்புப் போன்றவை அமைந்துள்ளது.
தற்போது இந்த நகரம் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்திழுக்கக் கூடியதாக உள்ளது.

# பூமி கிரகத்துக்கு 2 சந்திரன்கள் புதிய ஆய்வில் தகவல்



பூமிக் கிரகம் பகலில் சூரியனின் தீவிர வெளிச்சத்தையும், இரவில் மனதுக்கு இதமான மென்மையான வெளிச்சம் தரும் நிலாவையும் கொண்டு இருக்கிறது.
இந்த நிலா பூமியில் 2 ஆக இருந்தது என ஆய்வாளர்கள் புதிய கண்டுபிடிப்பில் தெரிவித்துள்ளனர். 2 ஆவது நிலா இப்போது தெரிவதில்லை. இரு சந்திரன்களும் மோதிக் கொண்டதைத் தொடர்ந்து 2 ஆவது நிலாவை உடன் வந்த சகோதர செயற்கைக்கோள் ஈர்த்து விட்டது.
இரண்டு நிலாக்களும் மோதிக்கொண்டதைத் தொடர்ந்து அதன் பரப்பில் மலை போன்ற உயர் நிலங்கள் உருவாகி உள்ளன. ஈர்ப்பு சக்தி அலைகளால் நிலாவின் கூட்டுப் பகுதி ஏற்றத் தாழ்வுகளுடன் ஆகிவிட்டது. செவ்வாய்க்கிரக அளவில் உள்ள பொருள் சூரியக் குடும்பத்தின் ஆரம்பக் கட்டத்தில் மோதி [illegible] வெளிப்பட்டன. அவை பின்னர் ஒன்று சேர்ந்து நிலாவாக உருவெடுத்தது என நிபுணர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் உள்ள தமிழ் அமைச்சர்கள் உரிமைக்காக செயற்படவேண்டும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

வெல்லாவெளி, ஓக.10

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு உள்ளூராட்சி சபையை உருவாக்குதல், அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை தமிழ்ப் பிரிவு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமுள்ள பிரதேச செயலகமாக மாற்றுதல், அதற்கான உள்ளூராட்சி சபையை உருவாக்குதல் ஆகியவை தொடர்பாகப் பல காலமாகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அவை பயனளிக்கவில்லை. இவ்வாறான நிலையில் அரசுடன் சேர்ந்த தமிழ் அமைச்சர்கள் அபிவிருத்தியோடு எமது உரிமையையும் கருத்தில்கொண்டு செயற்படவேண்டும்.

இவ்வாறு மீள் குடியேற்றப் பிரதி அமைச்சருக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ரா.துரைரெட்ணம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1989 ஆம் ஆண்டு கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது. எனினும் அதற்கு 23 வருடங்களாக காணி, நிதி, ஏனைய அதிகாரங்கள் ஆகியவை வழங்கப்படவில்லை. இன்று வரை இது செயற்படுகின்றது.

2005ஆம் ஆண்டு கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்கு தனியான பிரதேசசபை உருவாக்குவதற்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சால் குழு நியமிக்கப்பட்டது. இருந்தும் இன்று வரையும் அது உருவாக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு அவசியம் என உணரப்பட்ட புதிய பிரதேச செயலகங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்கக் கூடிய அரசியல் பலம் அற்றவர்களாகவும் தமிழ் அரசியல் தலைவர்கள் இருந்துள்ளனர்.

இந்த நிலைமையை மத்திய அரசு சாதகமாகப் பயன்படுத்தி தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை சூழ்ச்சியான முறையில் அபகரித்துக் கொண்டுள்ளனர்- என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பு - கண்டி அதிவேக வீதி நிர்மாணப் பணி அடுத்தாண்டு ஆரம்பம்

கொழும்பு, ஓக.10

கொழும்புக்கும், கண்டிக்கும் இடையிலான அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடம் ஆரம்பிக்குமாறும், இவ்வருட இறுதிக்குள் திட்ட வரைபை பூர்த்தி செய்யுமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வீதி அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார் எனப் பெருந் தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சின் எதிர்கால வேலைகள் பற்றிய கலந்துரையாடல் அண்மையில் அலரி மாளிகையில் நடந்தபோதே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த வீதி நிர்மாணத்துக்காக வயல் வெளிகளை ஆக்கிரமித்து அவற்றை நிரப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், முற்றாக கொங்கிரீட் தூண்கள் மீது அமைக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் தக்ஷிண அதிவேக வீதியில் காலியிலிருந்து மாத்தறை வரையிலான பகுதியின் வேலைகளைத் துரிதப்படுத்துமாறும் அவர் கூறினார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியை மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை விஸ்தரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# வரக்காப்பொலை பொலிஸ் பிரிவில் வாகன விபத்துக்கள் அதிகரிப்பு

வரக்காப்பொலை, ஓக. 10

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வரக்காப்பொலை பொலிஸ் பிரிவில் மாத்திரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு வாகன விபத்துகளின் எண்ணிக்கை 27 சதவீதம் அதிகரித்துள்ளது என வீதி விபத்துகளைத் தடுக்கும் தேசிய குழுவின் தலைவர் மனோ விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

வரக்காப்பொலை ஆதார வைத்தியசாலையில் அவசர விபத்துப் பிரிவொன்றை ஆரம்பிப்பது தொடர்பாக ஊழியர்களை அறிவுறுத்தும் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வரக்காப்பொலைப் பொலிஸ் பிரிவில் இவ்வாறு விபத்துகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த போதிலும், வரக்காப்பொலை வைத்தியசாலையில் சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் காணப்படுவதில்லை.

இதனால், வரக்காப்பொலை ஆதார வைத்தியசாலையில் அவசர விபத்துப் பிரிவொன்றை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச)



மகாஓயா பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வரும் ரம்புக்கன்ஓயா நீர்த்தேக்கத்திற்கான அணைக்கட்டு நிர்மாணப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இந்த வேலைத்திட்டத்தினால் இந்தப் பிரதேச மக்கள் எதிர்நோக்கிவரும் தண்ணீர்ப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதி இன்றி இயங்கும் வைத்தியசாலை

கொழும்பு, ஓக.10

களுத்துறை மாவட்டத்திலுள்ள பழைமையான அகலவத்த பிம்புர வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ள போதிலும் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான விடுதிச் சுவர்கள் வெடிப்பு ஏற்பட்ட நிலையில் காணப்படுவதுடன், நீண்டகாலமாக புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மேல்மாகாண சுகாதார அமைச்சு இது குறித்து கவனம் செலுத்தி இந்த வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்து தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ஓட்டோ சாரதியை தாக்கிய பொலிஸார் மூவர் பணி நிறுத்தம்

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

யகம பொலிஸ் பொறுப்பதிகாரியும் இரண்டு கான்ஸ்டபிள்களும் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோனின் உத்தரவின் பேரில் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டோ சாரதி ஒருவரைத் தாக்கினர் என்ற குற்றச் சாட்டின் பேரில் இரு கான்ஸ்டபிள்களும் இந்தச்சம்பவத்தை உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கத் தாமதம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கான்ஸ்டபிள்களை திருப்பித் தாக்கிய ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து டயகம பொலிஸ் நிலையத்துக்கு முன் திரண்ட பிரதேசவாசிகள் கற்களை எறிந்ததால் மூன்று பொலிஸ் வாகனங்கள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# குண்டசாலை பிரதேசசபை அதிகாரி லஞ்ச ஊழல் விவகாரத்தில் கைது

கொழும்பு, ஓக. 10

தொழில்நுட்ப அறிக்கையொன்றை வழங்குவதற்காக ஏழாயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் குண்டசாலை பிரதேச சபையின் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல் துஷ் பிரயோக விசாரணைக்குழு அதிகாரிகளால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

பன்வில பிரதேசத்திலுள்ள வீதி புனரமைக்கும் ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் சந்தேகநபரைக் கைதுசெய்தனர்.

வீதி திருத்தவேலை சம்பந்தமான தொழில்நுட்ப அறிக்கையொன்றை வழங்குவதற்கு சந்தேகநபர் பத்தாயிரம் ரூபாவை லஞ்சமாகக் கோரியுள்ளார். அதன்பின் அதனை ஏழாயிரமாகக் குறைத்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரான அதிகாரி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைத்துப் பணத்தைப் பெற்றபோது ஆணைக்குழு அதிகாரிகள் அவரை கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர். சந்தேகநபர் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார். (ச-5)

## துப்பாக்கி வாங்கமுயன்ற பாதாளக்கோஷ்டி கைது

கண்டி, ஓக. 10

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஆறு பேர் ரி - 56 ரகத் துப்பாக்கி ஒன்றை விலைக்கு வாங்க முயன்றபோது கண்டி பொலிஸ் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் இராணுவத்தை விட்டு தப்பிவந்த இரண்டு சிப்பாய்களும் முன்னாள் கடற்படை சிப்பாயும் அடங்குகின்றனர். (ச)

# அப்புகஸ்தனை தோட்டத்தின் மூன்று பிரிவுகளில் பெண் தொழிலாளருக்கு வேலை வழங்க மறுப்பு

## தொழிற்சங்கங்கள் மீது மக்கள் விசனம்

மஸ்கெலியா, ஓக.10

மஸ்கெலியா, அப்புகஸ்தனை தோட்டத்தின் மூன்று பிரிவுகளில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கு கடந்த 30ஆம் திகதி முதல் வேலை வழங்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கிய போதிலும் பெண் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுவதில்லை. இது தொடர்பில் தாங்கள் சார்ந்த தொழிற்சங்கத்திடம் முறையிட்டாலும் நடவடிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் பெண் தொழிலாளர்கள் தோட்ட முகாமையாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் தொழிலாளர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 5 வருடகாலமாக தோட்ட நிர்வாகம் தோட்டத்திலுள்ள தேயிலைச் செடிகளுக்கு உரமிடவில்லை. பல ஏக்கர் தேயிலைக் காணிகள் கவனிக்கப்படாத காரணத்தால் காடாகி விட்டன. இவ்வாறு அதிக தேயிலைக் காணிகள் காடாகியதாலேயே எங்களுக்கு வேலை மறுக்கப்படுகின்றது.

தொழிலாளர்கள் சுகவீனம் காரணமாக பணிக்குச் செல்லாவிடில் மாவட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ சான்றிதழுடனேயே மீண்டும் செல்ல வேண்டும். இதனால் பெண்கள் அதிக வேலை நாள்களை இழக்கின்றனர்.

அற்பசொற்ப லாபத்திற்காக தொழிலாளர்களை அடகுவைக்கும் தொழிற்சங்கத்தையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் நம்பி ஏமாறுகின்றோம்.

எனவே, தொழிற்சங்கங்கள் தோட்டத்தைத் துப்புரவு செய்யவும், வேலை வழங்கவும், கூட்டு ஒப்பந்தப்படி நாளொன்றுக்கு 16 கிலோவுக்கு சம்பளம் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தோட்ட முகாமையாளரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் - எனத் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். பெற்றோர் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். அதிக ஆதாயத்தை எதிர்பார்த்த விடயம் ஒன்றில், குறைவான ஆதாயம் கிடைக்கலாம். சக ஊழியர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். மறதியால் அவதியுண்டு.



**இடபம்:**
செலவில்லாமல் சிக்கனமாக சில வேலைகளை முடிப்பீர்கள். ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் மூலம் சில செய்திகளைக் கேட்கலாம். பல நாள்களாக முயற்சித்த சில காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். உறவினர்கள் சிலர் உங்களுக்காகச் செலவுகள் செய்யலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.



**மிதுனம்:**
வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். அதிக வேகமாக ஒரு செயலில் இறங்கி விட்டு, பின்னர் அது என்னவாகுமோ எனக் கவலை அடையலாம். உறவினர்கள் வழியில் ஆதாயகரமான நன்மைகள் உண்டு. வரவாக வந்த பணத்தில், அரைப்பங்கை குடும்பத்திற்குத் தேவையான பொருள் கள் வாங்க செலவிடுவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறைகாட்டுவீர்கள்.



**கடகம்:**
உங்களின் முயற்சிகளுக்கு, பெரிய மனிதர்கள் சிலர் துணையாக இருப்பர். கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமைக் காணப்படும். பணவரவு ஒன்று வருவது போல இருந்தாலும், அது உடனே கைக்கு கிடைக்காமல் தடைபடலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.



**சிங்கம்:**
ஆரம்பித்த காரியங்கள், துரிதமாக நடைபெறும் நாள். பழைய நண்பர் ஒருவர் மூலம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் சாக்குபோக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் கூடும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். நாவன்மை கூடும்.



**கன்னி:**
உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். காலை முதல் மாலை வரை பரபரப்பாக செயற்படுவீர்கள். சகோதரர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். சிலரிடம் பணம் கடனாக வாங்கலாம். வெளியூர்களில் இருந்து, முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். அவசிய தேவைக்காக சில பொருள்களை அடகு வைத்து பணம் பெறலாம்.



**துலாம்:**
அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிலர் சுயநலமாக செயல்படுவது கண்டு எரிச்சல் அடைவீர்கள்.



**விருச்சிகம்:**
மனதை வாட்டிய கவலைகள் விலகி, மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலருடன் கோபதாபம் ஏற்படலாம். போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். மாற்று மதத்தினரை நம்பி, எந்த முக்கியமான காரியங்களிலும் இறங்க வேண்டாம். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றை சாதிப்பதற்காக மற்றவர்களை நச்சரிப்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.



**தனுசு:**
மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கமான சில வேலைகளை மாற்றி அமைக்க நேரிடலாம். வாங்க நினைத்த பொருள் ஒன்றை என்ன விலை கொடுத்தாவது வாங்குவீர்கள். உடன் பிறப்புக்கள் வழியில், சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம். தொழில், வியாபார ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலையலாம்.



**மகரம்:**
பணத்தேவைகள் எந்த வழியிலாவது பூர்த்தியாகும். கடன் விவகாரங்களை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். நண்பர்கள் மூலம், உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். சொந்த பந்தங்களுடன் ஏற்பட்ட பகை நீங்கி பாசம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுளளவீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.



**கும்பம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். எந்த விடயத்திலும் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.



**மீனம்:**
திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். சிலர், உங்களின் மனம் சங்கடப்படும் வகையில் பேசலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராதச் செலவுகள் ஏற்படலாம். நண்பர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். உறவினர்களிடம் உங்களின் பெருமைகளைப் பேசுவீர்கள். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத திருப்பங்கள் நேரும்.

# போதிய அவ
# வழங்கிய
# இனியாவ
# வாய் திறச

## சுமந்திரன் எம்

"இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்குப் போதியளவு கால அவகாசம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. அதனாலேயே இரண்டு வாரங்களுக்குள் தனது பதிலை அரசு தர வேண்டும் என்று கூட்டமைப்புக் கேட்டுள்ளது. இந்தப் பேச்சு மூலம் சரியான ஒரு தீர்வை எட்ட முடியவில்லை என்றால் அதனால் பயன் ஏதுமில்லை" என்று தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

தீர்வு காண்பதற்குப் பேச்சுக்களே சாத்தியமான ஒரே வழியாக இருக்கும் போது காலக்கெடு விதிக்கப்பட்டமைக்கான காரணம் தொடர்பாகவும் லண்டனில் மேற்கொளப்பட்ட தனது உரை தொடர்பாகவும் சுமந்திரன் 'தி நேஷன்' பத்திரிகையின் கேள்விகளுக்கு வழங்கிய பதில்கள் இங்கே மொழியாக்கம் செய்யப்பட்டுத் தரப்படுகின்றன.

*கேள்வி:* இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான பரிந்துரைகளுக்கான பதிலை ஓகஸ்ட் 18ஆம் திகதிக்குள் வழங்க வேண்டும் எனக் கூட்டமைப்பு காலக்கெடு விதித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென நீங்கள் ஏன் தீர்மானித்தீர்கள்?



*பதில்:* அரசுடன் பெப்ரவரி 03ஆம் திகதியன்று மேற்கொண்ட இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பரிந்துரைகளை நாம் வழங்கியிருந்தோம். விரிவான அறிக்கையை வழங்குமாறு அவர்கள் எம்மிடம் கேட்டுக்கொண்டனர். அதன் பின்னர் மார்ச் 18இல் இடம்பெற்ற அடுத்த சுற்றுப் பேச்சின்போது விரிவான அறிக்கை ஒன்றை அரச தரப்பிடம் கையளித்தோம்.

இந்தத் தீர்வுத் திட்ட அறிக்கையானது முழுமையானது எனவும், இதனை ஆராய்ந்து தமது பதிலைத் தெரிவிப்பதற்கு சிறிது காலம் தேவைப்படுவதாகவும் அரச தரப்பினர் எம்மிடம் தெரிவித்தனர்.

இதன் பின்னர் ஏப்ரல் 07ஆம் திகதியன்று நான்காம் சுற்றுப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எங்களால் வழங்கப்பட்ட தீர்வுத்திட்ட அறிக்கை தொடர்பாக ஏப்ரல் 29ஆம் திகதியன்று கலந்துரையாடப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஏப்ரல் 29ஆம் திகதியன்று இடம்பெற்ற பேச்சுக்களில்கூட இது தொடர்பாகக் கலந்துரையாடப்படவில்லை. அதன் பின்னர் இடம்பெற்ற பேச்சுக்களிலும் இந்த அறிக்கை தொடர்பாகக் கலந்துரையாடுவதில் இழுபறி நிலை காணப்பட்டது.

நடந்து முடிந்த 10 சுற்றுப் பேச்சுகளில் ஒன்றின்போது, இந்தத் தீர்வுத் திட்ட அறிக்கை தொடர்பான பதிலைத் தாம் எழுத்து மூலமாகத் தருவதாக அரச தரப்பினர் பதிலளித்தனர். அதன் பின்னர் எழுத்து மூலம் அதனைத் தரமுடியாது என அவர்கள் தாமாகவே மறுத்தனர்.

எம்மால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட அறிக்கை தொடர்பான பதிலை வழங்குவதற்கான போதியளவு கால அவகாசத்தை நாம் அரசுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளோம். இது தொடர்பான தமது நிலைப்பாட்டை அரச தரப்பினர் முன்வைக்காவிட்டால் நாங்கள் எவ்வாறு பேச்சுக்களில் தொடர்ந்தும் கலந்துகொள்ள முடியும்?

அரசு எமது தரப்பு பரிந்துரைகளுக்கான பதிலைத் தரத்தயாராகும் பட்சத்தில் மட்டுமே தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட முடியும் என்பதாலேயே நாங்கள் தற்போது இந்தக் காலக்கெடுவை விதித்திருக்கிறோம். அத்துடன், எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுக்கான பரிந்துரை தொடர்பான பதிலை அரசு முன்வைக்காவிட்டால் இது நாள் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்கள் போதுமானதாகும் என்பதே எமது தரப்பு நியாயமாகும்.

*கேள்வி:* இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் மிக முக்கியமான அடித்தளமாக உள்ளன. அப்படி இருக்கையில் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்படும் தற்போதைய நகர்வானது மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவிக்கும் என நீங்கள் நினைக்கவில்லையா?

*பதில்:* இந்த நிலை தோன்றாமல் இருப்பதற்காகவே பேச்சு பயனுள்ள வகையில் நடப்பதை நாம் உறுதிப்படுத்த விரும்புகின்றோம். அதற்காகவே பாடுபடுகின்றோம். அரசுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் மிகவும் பயனுள்ளதாக அமையவேண்டும். ஒரு நடவடிக்கையைப் பிறிதொரு விடயத்தைக் காரணங்காட்டி தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முடியாது. அந்தநடவடிக்கையானது பயனுள்ளதாக அமையவேண்டும்.

அரசு எம்முடன் இதுவரை நடத்திய பேச்சுக்கள் மூலம், தமிழர் பிரச்சினையில் தாம் மிகுந்த கரிசனை கொண்டிருப்பதாக வெளியுலகுக்குக் காட்டவே முயற்சித்தது. அதைத் தவிர இந்தப் பேச்சு ஊடாக எந்தவொரு பயனும் கிட்டவில்லை.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், அரசு உண்மையில் இதயசுத்தியுடன் இந்தப்பேச்சுக்களில் ஈடுபடவில்லை என்பது தெளிவாகிவிட்டது.

இதனாலேயே - அரசு தனது நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்காததால் - அடுத்த கட்டப் பேச்சில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று நாம் தீர்மானித்துள்ளோம். இதன் ஊடாக மட்டுமே நாம் எமது இலக்கை அடைந்து கொள்ள முடியும். இது மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கான சரியான பதிலை அரசு வழங்க வேண்டும். அப்படிச் செய்வதாக பேச்சின் போது அரச தரப்பினர் ஏற்கனவே உறுதி வழங்கி இருந்தனர். இதற்கான பதிலைத் தம்மால் தரமுடியாது என அவர்கள் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் இன்னமும் அதனை நடைமுறைப்படுத்தவுமில்லை.

*கேள்வி:* அரசுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளீர்களா?

*பதில்:* எமது நிலைப்பாடுகள் தொடர்பாக மிகத் தெளிவாக அரசிடம் தெரிவித்ததன் பின்னரே தற்போது எம்மால் விதிக்கப்பட்ட காலக்கெடு தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளோம். நாங்கள் இரு வார கால அவகாசத்தைத் தற்போது வழங்கியுள்ளோம். ஏற்கனவே போதியளவு கால அவகாசத்தை நாம் வழங்கியதால், அரசு எமது தீர்வுத் திட்டம் தொடர்பான தமது பதிலை எமக்கு அறிவிக்கும் வரை நாம் காத்திருக்கவேண்டிய தேவையில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவானது மிகவும் குறுகியது என அரசு தெரிவித்துள்ளது. நாங்கள் புதிதாக எந்தவொரு நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. அவர்கள் தமது தரப்பு ஈடுபாட்டைக் காண்பிக்க வேண்டும் என்பதை மட்டுமே இப்போது நாம் கேட்டிருக்கிறோம். கடந்த மார்ச் மாதத்தில் இருந்து அவர்களுக்கான காலஅவகாசத்தை நாம் வழங்கியிருந்தோம்.

*கேள்வி:* தங்களால் வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் இலங்கை அரசு தனது பதிலைத் தரத்தவறினால், கூட்டமைப்பின் அடுத்த கட்ட நகர்வு என்ன?

*பதில்:* எம்மால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கான பதிலைத் தருவதாக அரசு மார்ச் மாதமே ஒப்புக் கொண்ட போதிலும், நாம் வழங்கிய காலக்கெடுவுக்குள் வழங்காவிடின், பேச்சுக்களிலோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலோ அரசு விருப்பமின்றி இருக்கின்றது என்றே நாம் கருதுவோம். எமது கோரிக்கைகளுக்குப் பதிலளிப்பதற்கு அரசுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்பட்டால் அது வேறு விடயம். ஆனால் அதனை அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். முதலில் எமது கோரிக்கைகளுக்கான பதிலைத் தெரிவிக்க வேண்டும். ஆனால் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவகாசத்தை
# யோயிற்று
# வது அரசு
# றக்கட்டும்

## எம்.பி. பேட்டி

எந்தவொரு பதிலையும் கூறாவிட்டால் பேச்சில் கலந்து கொண்டு வெறுமனே உட்கார்ந்திருப்பதில் எந்தவொரு பயனுமில்லை.

***கேள்வி:*** அரச தரப்பினர் மேலதிக கால அவகாசத்தைக் கோரி நீங்கள் அதனை ஏற்றுக் கொண்டால், தங்களது தற்போதைய நகர்வு பயனற்றுப் போய்விடும் என நீங்கள் கருதவில்லையா?

***பதில்:*** அதனால் தான் நாம் தற்போது இருவார கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். அரசு எந்தவொரு வழிமுறையிலாவது இதற்கான பதிலை வழங்கியே ஆகவேண்டும். இரு வாரங்கள் என்பது ஒரு நிபந்தனையோ அல்லது அதற்கு ஒப்பான வேறெதுவுமோ அல்ல. இந்த விடயங்கள் தொடர்பாக அவர்கள் பதில்சொல்லி ஆகவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை.

***கேள்வி:*** இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அரசு அமைக்கவுள்ளது. இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

***பதில்:*** நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது தனது பதிலை எந்த நிபந்தனையின் கீழ் வழங்க முடியும் என்று நாம் கேட்டிருந்தோம். எம்முடன்

**அரசு எம்முடன் இதுவரை நடத்திய பேச்சுக்கள் மூலம், தமிழர் பிரச்சினையில் தாம் மிகுந்த கரிசனை கொண்டிருப்பதாக வெளியுலகுக்குக் காட்டவே முயற்சித்தது. அதைத் தவிர இந்தப் பேச்சு ஊடாக எந்தவொரு பயனும் கிட்டவில்லை.**

பேச்சுக்களில் ஈடுபடுவதற்காக நியமிக்கப்பட்ட அரச தரப்புக் குழு ஒரு சந்திப்பில் உடன்படுகின்ற விடயங்களையே அடுத்த சந்திப்பில் மாற்றும் படிகேட்டு நிற்பார்கள். அப்படி இருக்கையில் அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களுக்கான பதிலை நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் எப்படி எட்ட முடியும். நாடாளுமன்றக் குழுவின் கடப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்ன என்பது பற்றிய தெளிவும் இதுவரை கிடையாது.

***கேள்வி:*** அரசிடம் தங்களால் வழங்கப்பட்ட தீர்வுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பான விதிமுறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்காக தாங்கள் காத்திருப்பதாகக் கூறுகிறீர்கள். அத்தகைய ஒரு நிலையில் ஏற்கனவே நீங்கள் வழங்கிய பரிந்துரைகள் தொடர்பாகப் பதில் தரத் தவறும் பட்சத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு என்ன நடக்கும்?

***பதில்:*** அதிகாரப் பகிர்வுடன் தொடர்புபட்ட உடன்படிக்கையை நாடாளுமன்றத் தெரிவுக் குழு நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அது ஒரு பயனற்ற பொறிமுறையாகவே இருக்கும். ஆகவே முதலில் அதிகாரப் பகிர்வு விடயம் தொடர்பான பொருத்தமான கலந்துரையாடல் ஒன்றை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

***கேள்வி:*** நாடாளுமன்றத் தெரிவுக் குழு நடைமுறைக்கு வந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பேச்சில் மாற்றம் ஏற்படுமா?

***பதில்:*** நாடாளுமன்றத் தெரிவுக் குழுவானது ஒத்துழைப்பை நல்கினாலும்கூட பேச்சைத் தொடர முடியும். ஆனால் பேச்சில் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படாதவிடத்து தெரிவுக் குழு அமைத்துப் பயன் ஏதுமில்லை.

***கேள்வி:*** தாங்கள் அண்மையில் பிரிட்டனுக்குச் சென்றிருந்த போது சில தகவல்களை வெளியிட்டிருந்தீர்கள். அவை தொடர்பாக தமிழ் அரசியல் வட்டத்திற்குள்ளே சில குழப்ப நிலைகள் காணப்படுகின்றன. குழப்பத்தை ஏற்படுத்திய விடயங்கள் தொடர்பாகக் கூறமுடியுமா?

***பதில்:*** லண்டனில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் நான் உரை நிகழ்த்தியிருந்தேன். அந்த உரையில் மூன்று விடயங்கள் தொடர்பாக சில முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிங்கள மக்களுக்கு ஏற்புடையதான ஒரு தீர்வை நாம் தெரிவுசெய்ய வேண்டும் என நான் எனது உரையின் போது குறிப்பிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனது உரையை சிலர் ஆவணப்படுத்தியுள்ளனர்.

அதன் மூலம் நான் உண்மையில் என்ன சொன்னேன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். எமது நிலைப்பாடு நியாயமானது. அதனால் நாம் அதனைக் கோரி நிற்கின்றோம் என்றே நான் உண்மையில் தெரிவித்திருந்தேன். எமது நிலைப்பாடு நியாயமானது என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்வதற்காக நாம் அவர்களை தைரியப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் மிகக் கடிமான நிலைப்பாட்டில் இருக்கவில்லை என்பதை அனைத்துலக சமூகமானது ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைப் போன்றே, இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களில் ஒரு தொகுதியினராவது எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் நியாயமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

''குறைந்த சிங்கள மக்களின் ஒரு தொகுதியினராவது'' என நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அது திரிபுபடுத்தப்பட்டு தற்போது வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பான விடயம் இரண்டாவதாகும். போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்படக் கூடாது என நான் தெரிவித்திருக்கவில்லை. இது தொடர்பாக நான் எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை. எனது உரை பதிவுசெய்யப்பட்ட காணொலியில் கூட இவ்வாறானதொரு தகவல் காணப்படவில்லை. இது யாராலோ பரப்பப்பட்டுள்ள புரளியாகும். யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

இந்தக் குற்றங்கள் தொடர்பான அறிக்கை ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினரால் முன்வைக்கப்பட்டவையாகும். மாறாக பொறுப்பற்ற அல்லது பொருத்தமற்ற அமைப்பினரால் முன்வைக்கப்பட்டவை அல்ல. யுத்தத்தில் பங்கு கொண்ட இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் இந்த அறிக்கையில் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இது மட்டுமல்ல. இந்தியா உள்ளடங்கலாக உலக நாடுகள் பல இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும் என கடந்த வியாழனன்று இந்திய வெளியுறவு அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பாக நான் எனது உரையில் குறிப்பிட்ட விடயம் மூன்றாவதாக உள்ளது. புலம்பெயர் உறவுகள் தொடர்பாக மீண்டும் மீண்டும் கேள்விகள் கேட்கப்பட்டன.

புலம்பெயர் உறவுகள் ஒருசார்புக் கருத்துக்களை உடையவர்கள் போல் பார்க்கப்படுகிறார்கள் என நான் தெரிவித்திருந்தேன். அதாவது புலம்பெயர் உறவுகளால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அனைத்துலக சமூகத்தாலும், ஐ.நா. நிபுணர் குழுவாலும் அனைத்துலக நெருக்கடிக் குழுவாலும் எதிர்மறையாகக் கருதப்படுகின்றன.

அனைத்துலக சமூகத்திடமிருந்து மட்டுமல்லாது புலம்பெயர் உறவுகளிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அனைத்துலக சமூகத்தின் ஊடாக புலம்பெயர் உறவுகள் தமது தரப்பு அழுத்தங்களையும் மேற்கொண்டால் அது மிகப் பயனுள்ளதாக அமையும் என நான் தெரிவித்திருந்தேன். ஆனால் நான் தெரிவித்த கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு பல மாறுபட்ட புதிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்பவர்களால் உருவாக்கப்பட்டது.

## கலைவாணர் நகைச்சுவை



ஒரு நல்ல நகைச்சுவை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரியான விளக்கத்தை கொடுக்கிறார்கள் ஆனால் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் கொடுக்கிற விளக்கம் என்ன தெரியுமா?

நகைச்சுவை என்பது அடுத்தவர்களுக்குத் துன்பம் கொடுக்காமல் இருக்க வேண்டும். அடுத்தவர்கள் மனதைப் புண்படுத்தக்கூடாது. அதுதான் சிறந்த நகைச்சுவை என்கிறார்.

அதற்கு ஓர் உதாரணமும் கொடுக்கிறார்.

ஓர் ஏரி ஓரமாக இரண்டு சிறுவர்கள் நடந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருத்தன் பணக்காரவீட்டுச் சிறுவன். மற்றவன் ஏழைச்சிறுவன். இவர்கள் இரண்டுபேரும் போய்க் கொண்டிருக்கையில், வழியில் ஓர் இடத்தில் ஒரு சோடிசெருப்பு இவர்கள் கண்ணில் பட்டது.

ஒரு விவசாயி அந்தச் செருப்பை அங்கே கழற்றிவிட்டு பக்கத்தில் இருந்த ஏரியிலே கை கால்களைக் கழுவிக் கொண்டிருந்தார். உடனே அந்தப்பணக்காரச் சிறுவனுக்கு ஒரு யோசனை தோன்றியது ''இப்போது ஒரு வேடிக்கை செய்யலாம் அந்தச் செருப்பு இரண்டையும் தூக்கி தூரத்தில் எறிந்து விடுவோம். அவர் வந்து பார்த்துவிட்டு செருப்பைத் தேடி அல்லாடுவார். அங்கேயும் இங்கேயும் ஓடுவார்; திருதிரு என்று முழிப்பார், அதை நாம் இரசிக்கலாம். நல்ல சந்தோசமாக இருக்கும்'' என்றார்.

இப்படி கூறிவிட்டு அவன் அந்தச் செருப்புக்களைத் தூக்கப் போனான்.

''கொஞ்சம் பொறு'' என்றான் அந்த ஏழைச்சிறுவன் ஏன்? என்று கேட்டான் மற்றய சிறுவன். அதற்கு ஏழைச் சிறுவன் ''நீ சொல்வது ஒன்றும் வேடிக்கையாக இல்லை; உன்னுடைய செருப்புத் தொலைந்தால் உன் அப்பா உடனே உனக்கு வேறு செருப்பு வாங்கிக்கொடுத்து விடுவார்; ஆனால் அந்த மனிதன் இந்தச் செருப்பைத் தொலைத்தால் வேறு புதுச்செருப்பு வாங்குவதற்கு வாயையும், வயிற்றையும் கட்டிப் பணத்தை சேர்க்க வேண்டியிருக்கும். அதனால் நான் ஒரு வேடிக்கை சொல்கிறேன். அது மாதிரிச் செய் மகிழ்ச்சியும் வேடிக்கையுமாக இருக்கும் என்றார்.

சரி சொல் என்றான். ''செருப்பு இரண்டும் அது இருக்கின்ற இடத்திலேயே இருக்கட்டும் உன் சட்டையிலிருந்து ஒரேயொரு ரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச் செருப்புமேல் அதன் குதிப் பகுதியில் வைத்துவிட்டு அந்த மரத்துக்கு பின்னால் மறைந்து நின்று பார்ப்போம் ;அதற்குப்பின் வேடிக்கையை பார் என்றான்.

அதேமாதிரி ஒரு ரூபாவை செருப்புமேல் வைத்துவிட்டு இவர்கள் மறைந்து நின்றார்கள்.

கொஞ்ச நேரத்தில் அந்தவிவசாயி வந்தார். காலில் உள்ள மண்ணைத் தட்டிவிட்டு செருப்பை மாட்டுவதற்குப் போனவர் அங்கே இருந்த காசைக் கண்டார் . அவருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அதைக்கையில் எடுத்துப்பார்த்து விட்டு நாலா பக்கமும் திரும்பித்திரும்பிப் பார்த்தார். கடைசியில் ஆகாயத்தைப்பார்த்தார் '' ஆண்டவா! அது உன்னுடைய கருணைதான் ; நீதான் யாரோ புண்ணியவான் மனதில் தருமம் செய்யும் எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறாய்'' என்று வாழ்த்தி அந்தக் காசை கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த ஏழைச்சிறுவன் கூறினான் ''பார்த்தாயா? உன்னைப்புண்ணியவான் என்று வாழ்த்திவிட்டு போகிறார்.அவருக்கும் சந்தோசம் அதைப்பார்த்த எமக்கும் சந்தோசம். இதன்மூலம் எமக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சி மிகவும் உயர்வானது'' என்றான்.

வேடிக்கையும் கிண்டலும் இது மாதிரி அடுத்தவர்களுக்கு இடைஞ்சலா இல்லாமல் இருக்கவேண்டும் என்றார் கலைவாணர்.

அவருக்கு இடைஞ்சலா வருகின்ற விடயங்களைக் கூட அவர் வேடிக்கையாகத்தான் எடுத்துக் கொண்டார்.

ஒரு தடவை ஒருத்தர் கலைவாணரிடம் வந்து''ஐயா...' என் குழந்தை இறந்துவிட்டது '' என்று சொல்லி அழுதார். உடனே அவருக்கு நூறு ரூபாய் பணம் கொடுத்து ''அடக்கம் செய் யுங்கள்'' என்று சொல்லி அனுப்பினார்.

ஒரு வருடம் கழித்து மறுபடியும் அதே மனிதர் வந்து இவர் மறந்திருப்பார் என்ற நினைப்பில் ''என் குழந்தை இறந்து விட்டது என்றார்'' மறுபடியும் நூறு ரூபா கொடுத்து ஆறுதல் கூறி அனுப்பிவைத்தார்.

ஏழெட்டுமாதம் கழித்து மறுபடியும் அதே மனிதர் வந்தார். அவர் வாயைத் திறப்பதற்கு முன்னரே இவர் நூறு ரூபாவை அவர் கையில் வைத்து ''போன இரண்டு தடவைகள்தான் குழந்தைகள் இறந்து விட்டன. இந்தத் தடவையாவது அதை சாகாமல் காப்பாற்றி விடுங்கள்'' என்றார். அதன் பின் அந்த மனிதனர் வருவதே இல்லை.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

கே.தவகுலரெட்ணம்,
ஆசிரிய ஆலோசகர்,
மேல்மாகாணம்.

பரீட்சை இலக்கம்: 13

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011


பெயர்/சுட்டெண்:......................

## வினாத்தாள்-1

நேரம்: 45 நிமிடங்கள்

* எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்குக.
* முதலாம், இரண்டாம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொற்களுக்கு மிகவும் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கோடிடுக.

01. காடு -



A B C

02. பார்வை -



A B C


* 3 - 5 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிலும் இரண்டு படங்களுக்கு இடையே ஒற்றுமை உண்டு. ஒரு படம் வித்தியாசமானது. அதன் கீழ்க்கோடிடுக.

03.




A B C D E

04.



A B C D E

05.



A B C D E

* 6ஆம், 7ஆம் வினாக்களின் கோடிடப்பட்ட பகுதிகளுக்கு மிகவும் பொருத்தமான கருத்தைத் தரும் சொற்களைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.


06. கமலா சிரிக்கும்போது பற்கள் <u>முத்துக்கள்</u> போல தெரிந்தன.
1) மென்மையான. 2) வெள்ளை நிறமான. 3) பலமான.
(......................................................)

07. இராமன் <u>அல்லும் பகலும்</u> அயராது உழைக்கின்றான்.
1) இராக்காலம். 2) ஓய்வின்றி. 3) பகற்காலம்.
(......................................................)

08. கண்ணன் <u>அகங்காரம்</u> இல்லாத சிறுவன்.
1) இறுமாப்பு. 2) அழகு. 3) ஆடம்பரம்.
(......................................................)

* 9ஆம், 10ஆம் வினாக்களுக்கு காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்து வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பெறுமானத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

09.




1) 30
2) 6
3) 12

10.

| | |
|---|---|
| 10 | 8 |
| 5 | 7 |

| | |
|---|---|
| 10 | 8 |
| 15 | 7 |

| | |
|---|---|
| 10 | 8 |
| ? | 7 |


1) 12
2) 35
3) 25

* கீழே காணப்படும் வினாக்களில் ஆங்கில எழுத்துக்களால் காட்டப்படுவது ஒரு தனி இலக்கத்தின் எண்ணிக்கையாகும். அதன்படி கீழேயுள்ள வினாக்களைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

11.
```
  A T S
+ T S S
  3 5 6
```
இங்கு A, T, S எனும் ஆங்கில எழுத்துக்களின் பெறுமானங்கள் முறையே
1) 1, 2, 3 2) 5, 3, 1 3) 1, 6, 2


12.
```
  Z Y X
- 2 Z Y
  1 2 3
```
இங்கு X, Y, Z எனும் ஆங்கில எழுத்துக்களின் பெறுமானம்,
1) 7, 4, 1 2) 8, 5, 3 3) 1, 2, 3

13.




இந்தச் செவ்வக வடிவத்தில் இன்னும் எத்தனை செவ்வகங்கள் உள்ளன?
1) 18
2) 16
3) 12

14. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியை சமமாக காட்டும் உரு எது?



1) 2) 3)

15. ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதன் நடுவில் செவ்வுக வடிவான துவாரம் இடப்பட்ட பின்னர் இக்கடதாசித்துண்டினை மீண்டும் விரிக்கும் போது ஏற்படக்கூடிய தோற்றம் கொண்ட உரு எது?



1) 2) 3) 4)

* பின்வரும் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவல்களை விளகி தரப்பட்ட உருவிற்கான பெறுமானத்தைக் காண்க.

△ + △ = ⑧
○ + △ = D
▭ + ▭ = D

16. உரு △ இன் பெறுமானத்தை பின்வருவனவற்றில் இருந்து தெரிவுசெய்க.
1) 4 2) 2 3) 8

17. வினாக்குறிக்குள் வரவேண்டிய எண், △ + □ + ○ = ?
1) 24 2) 48 3) 18

18. D உருவின் பெறுமானம்,
1) 2 2) 8 3) 12

19. □ உருவின் பெறுமானம்,
1) 8 2) 6 3) 4

20. XVI என்பதை இந்து அராபிய எண்ணில் எழுதினால்,
1) 7 2) 17 3) 16

21. என்னிடம் 4 நாணயங்கள் உண்டு. அதன் மொத்தப் பெறுமதி ரூபா 5.00 ஆகும். அதன்படி என்னிடம் உள்ள நாணயங்களின் வகை,
1) இரண்டு ரூபா நாணயங்கள் மூன்று.
2) இரண்டு ரூபா நாணயங்கள் இரண்டும் 50 சத நாணயங்கள் இரண்டும்.
3) 50 சத நாணயங்கள் ஐந்தும் ஒரு ரூபா நாணயங்கள் மூன்றும்.


* கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

22. மனிதர்கள் தமது தினப்பதிவேட்டில் பல விடயங்களை எழுதிவைப்பதன் நோக்கம்,
1) பதிவேடுகள் இலவசமாகக் கிடைப்பதனால்.
2) தமக்கு கிடைக்கும் தகவல்களை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக.
3) பதிவேட்டு மட்டைகள் கவர்ச்சியாக இருப்பதனால்.

23. மின் வேலைசெய்வோர் இறப்பர் அடிப்பாகம் உடைய பாதணிகளை அணிவர். அதற்கான காரணங்களில் மிகப்பொருத்தமானது,
1) நாகரிகமான பாதணிகள் வாங்க வசதி இன்மை.
2) இறப்பர் பாதணிகளை அணிவதால் விரைவாக வேலைசெய்ய முடியும்.
3) இறப்பர் ஊடாக மின் கடத்தப்படுவதில்லை.

* 24-25 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

24. இங்கு நீர் நிரப்பிய போத்தல்கள் சில காட்டப்பட்டுள்ளன. அதிகமாக நீர் காணப்படும் போத்தல்களைக் கொண்ட தொகுதி யாது?



A B C

25. இங்கு தரப்பட்டுள்ள அடைப்புக்களின் உள்ளேயிருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ்நோக்கியும் தரப்பட்டுள்ளது. பெறுமதிகளின் மொத்தம் தரப்படாத "?" என்ற குறியினைக் காட்டும் நிரலின் பெறுமதிகளின் மொத்தம் எதுவென தெரிவுசெய்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| △ | ▭ | ○ | △ | 10 |
| △ | ▭ | △ | ○ | 7 |
| △ | ▭ | ▭ | △ | 6 |
| △ | ▭ | ○ | △ | 7 |
| 4 | 8 | "?" | | |

1) 8
2) 12
3) 6
4) 9

(17 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சிப் பட்டறையும் பலியாடுகளும்

கொழும்பில் ஒரு ''வேர்க்சொப் '' நடக்க இருக்குது. அதில ஒவ்வொரு பள்ளிக்கூடத்தில இருந்தும் ஆர்வமுள்ள மாணவர்கள் 5 பேரை அனுப்பப் போறம். வேர்க்சொப் முடிவில அதில பங்குபற்றின எல்லாருக்கும் பெறுமதியானசேர்ட்டிபிக்கட்டும் குடுப்பினம். இந்த வகுப்பில நாங்கள் 2 பேரை செலக்ட் பண்ணியிருக்கிறம் என்று கூறியவாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இருவரின் பெயரையும் வகுப்பாசிரியர் உரத்து வாசித்தார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் தலைகால் புரியவில்லை. நாட்டின் தலைநகரில் நடக்கும் ஒரு முக்கியமான வேர்க்சொப்பில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் தம் தலைமாட்டில் வந்துசேரும் என்று அவர்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை. வாயெல்லாம் பல்லாக , சேர்ட் கொலரைக் கொஞ்சம் தூக்கியபடி சக மாணவர்களை நோக்கினர். மற்றவர்களின் முகங்களில் ஈயாடவில்லை. அரியதொரு சந்தர்ப்பம் கைநழுவி விட்டதே என்ற ஆதங்கம் அவர்களின் முகங்களில் அப்பட்டமாகத்தெரிந்தது.

இப்போதுதான் அவர்கள் ஏ.எல். கிளாசுக்குச் செல்லும் சாட்டில் ரவுணையே எட்டிப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கொழும்புக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைப்பதென்றால் சும்மாவா? அதுவும் மிக முக்கியமான பயிற்சிப்பட்டறை. அதன் முடிவில் பெறுமதியான சான்றிதழ். கரும்பு தின்னக் கைக்கூலி கொடுக்கும் இந்த வாய்ப்புக் கிடைக்காவிட்டால் மாணவர்களுக்கு ஒரு மாதிரித்தானே இருக்கும். தெரிவு செய்யப்பட்டவர்களை வெளியே ஒப்புக்கு வாழ்த்தி விட்டு, உள்ளுக்குள் புகைந்துகொண்டார்கள்.

பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ளவெனத் தெரிவானவர்களுக்கு அதன் பின் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. பரபரப்புடன் கொழும்பு செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். கொழும்பு செல்வதற்கான நாள் நெருங்க, நெருங்க மாணவர்களின் பரபரப்பும் அதிகரிக்கத் தொடங்கியது. ஒருநாள் வகுப்பாசிரியர் அழைப்பதாக இன்னொரு மாணவன் வந்து சொன்னதும் தெரிவு செய்யப்பட்டவர்கள் பிடரியில் கால்பட,ஓடிச்சென்று அவர் இருந்த ஸ்ராவ் ரூமுக்குள் மூச்சிரைக்க ஆஜராகினர்.

''வாங்கோ! உங்கட வேர்க்சொப் நடத்திறவையிட்ட இருந்து ஒரு தகவல் வந்திருக்கு. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டனான்''. வகுப்பாசிரியர் மெலிதான பீடிகையுடன் தொடங்கினார். அந்தத் தகவல் என்ன? என்ற ஆவலில் மாணவர்களுக்கு இன்னமும் மூச்சு வாங்கத்தொடங்கியது.

'' நீங்கள் கொழும்புக்கு போறதுக்கான செலவுகளை முதல்ல அரசுதான் பொறுப்பேற்கிறதாக இருந்தது. ஆனா இப்ப அந்த நிதி ஒதுக்கீடு இன்னும் முடியாததால உங்களிட்ட போக்குவரத்துக்கான காசை வாங்கச் சொல்லியிருக்கினம்''.

ஆசிரியரின் இந்த வார்த்தைகள் மாணவர்களின் சந்தோஷ பலூனில் முதலாவது ஊசியாக இறங்கிற்று. ஒரே நொடியில் மாணவர்களின் முகங்கள் வாடிப் போனதைக் கண்ட ஆசிரியர் அவர்களுக்கு நம்பிக்கை தரும் விதமாக தன் விளக்கத்தைத் தொடர்ந்தார்.

''நீங்கள் இப்ப குடுக்கிற போக்குவரத்து காசை வேர்க்சொப் முடிஞ்சவுடன தந்திடுவினம். கொஞ்சக் காசைக் கணக்குப் பார்த்து, அருமந்த சான்ஸ், தவற விட்டுடாதையுங்கோ''. மீண்டும் சந்தோஷ பலூனுக்குள் காற்று அடிக்கப்பட்டது. ஆசிரியர் சொன்னவுடன் தலையாட்டி விட்டு, சிட்டாகப் பறந்தனர்.

ஒருமாதிரி வீட்டில் விடயத்தை எடுத்துச் சொல்லி, போக்குவரத்துக்கான காசை அடுத்தநாளே வாங்கிவந்து கட்டி விட்டார்கள். மாணவர்கள் எதிர்பார்த்திருந்த நாளும் வந்தது. எல்லாப் பாடசாலைகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களை அள்ளியெடுத்துக்கொண்டு பஸ் கொழும்புக்கு புறப்பட்டது. கிட்டதட்ட

## கோணல் கோலங்கள்

500க்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் பயணத்தில் இணைந்துகொண்டிருந்தனர்.

10 மணித்தியாலப் பயணத்தின் பின்னர் கொழும்பை மாணவர்கள் காண முடிந்தது. அதன் பின்னர் அவர்கள் ஒரு கலை நிகழ்வுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பாடல்கள், நடனங்கள் என்று பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருந்தன. எனினும் அந்த நிகழ்வுகளில் சிங்கள மொழியின் பயன்பாடே உச்சமாக இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மாணவர்கள் ஒன்றுமே புரியாவிட்டாலும் எல்லாமே விளங்கியது போல தலையாட்டி, கைதட்டி, மகிழ்வது போல பார்வையாளர் பகுதியில் இருந்து நடிக்க வேண்டியிருந்தது. இத்தனைக்கும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது மூவின மாணவர்களையும் ஒன்றிணைக்கும் கலாசார நிகழ்வாம்.

ஒரு மாதிரி நிகழ்வு முடிந்தது. ஆனால் மாணவர்களுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. ஏனெனில் கலைநிகழ்வு முடிந்த கையோடே மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு பயணப்படுவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற ஆரம்பித்தன. ஆசிரியர்கள் மாணவர்களை விரைவாக அவரவர்களின் பயணப் பைகளுடன் பஸ்களில் ஏறுமாறு அவசரப்படுத்திக் கொண்டிருந்தனர். கடைசி மட்டும் ஆசிரியர்கள் அறிவித்திருந்தது போல பயிற்சிப்பட்டறை எதுவும் நடக்கவேயில்லை.

அந்தக் கட்டளைகளை மறுக்கமுடியாதவர்களாக பஸ்களில் இருண்ட முகங்களோடு மாணவர்கள் குந்திக்கொண்டனர்.

இன்னொரு 10 மணித்தியாலங்களை விழுங்கிய பின்னர் பஸ்கள் மீண்டும் யாழ்ப்பாணத்து வீதிகளை முத்தமிட்டன. ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஏற்றப்பட்ட மாணவர்களை அதேவரிசைக் கிரமத்தில் இறக்கியவாறு பஸ்கள் தம் பாட்டில் நகர்ந்து கொண்டிருந்தன.

ஆனால் மாணவர்கள் மனதில் மட்டும் சில கேள்விகள் புதிதாக முளைத்திருந்தன.

ஏன் வேர்க்சொப் நடக்கேலை?

ஏன் சேர்ட்டிபிக்கேட் தரேலை?

கலாசார நிகழ்வில கூட்டத்தைக் காட்டுறதுக்காகத்தான் எங்களை வேர்க்சொப் எண்டு பேய்க்காட்டி கூட்டிக் கொண்டு போனவையோ?

இந்தக் கேள்விகளோடுதான் அந்த மாணவர்கள் இன்னமும் வலம் வருகிறார்கள். தேர்தலுக்கு கூட்டம் கூட்டுவது போல தலைநகரில் நடைபெற்ற நிகழ்வுக்காக யாழ்ப்பாணத்து மாணவர்களை பயிற்சிப்பட்டறை, சான்றிதழ் என ஏமாற்றி அழைத்துச் செல்வது சரியா எனக் கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஒரு முறையாவது தம்மைத்தாமே கேள்வி கேட்டுக் கொள்ளவேண்டும். பாவம்! அவர்களும் என்ன செய்வது? அவர்கள் பொம்மைகள்தானே! ஆட்டுவிப்பது வேறொருவர் அல்லவா. ஆட்டுவித்தால் ஆடத்தானே வேண்டும். இல்லாவிட்டால் கட்டாய லீவு கட்டாயம்.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

✱ 26-28 வரையிலான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டின் மேல் விடை எழுதுக.

26. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதல் எழுத்து 'தவத்தில்' உண்டு; 'பாவத்தில்' இல்லை.
இரண்டாம் எழுத்து 'கம்பியில்' உண்டு; 'கப்பியில்' இல்லை.
மூன்றாம் எழுத்து 'பிழையில்' உண்டு; 'மழையில்' இல்லை.
(......................)

27. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதல் எழுத்து 'அருவியில்' உண்டு; 'கருவியில்' இல்லை.
இரண்டாம் எழுத்து 'கொம்பில்' உண்டு; 'கொப்பில்' இல்லை.
மூன்றாம் எழுத்து 'மாலையில்' உண்டு; 'காலையில்' இல்லை.
(......................)


28. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசைகளில் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலது பக்கமும் மற்றைய வண்டி இடப்பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?
(......................)

✱ பின்வரும் பந்தியிலுள்ள வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்களில் இருந்து தெரிவுசெய்து நிரப்புக.


29. எல்லா மனிதனும் செல்வந்தராக வாழ்வதற்கு விடா ...................................
(முயற்சி, முயச்சி, முயட்சி) அவசியம்.

30. சிலர் நல்ல ...............(பழக்கவழக்கங்களினால், பலக்கவளக்கங்களினால், பளக்கவலக்கங்களினால்) பெருமையடைகின்றனர்.

✱ 31ஆம், 32ஆம் வினாக்களில் காணப்படும் முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரியும் இரண்டு கடிகார முகங்கள் ஒவ்வொன்றிலும் காட்டப்படும் சரியான நேரம் எதுவெனத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

31.



1) பி.ப 5.00
2) பி.ப 7.00
3) பி.ப 12.25
..............

32.




1) 10.40
2) 4.05
3) 1.20
............


33. கமலன் தனது உறவினரான சாந்தாவிடம் வயதைக் கேட்டான். சாந்தா தனது வயதில் உள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். இவ்விரு எண்களையும் இடம் மாறிப் போட்டால் என் வயதில் 9 கூட வரும் என்றான். சாந்தாவின் வயது என்ன?
1) 25 2) 45 3) 54 4) 27


34. 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நாடு,
1) லண்டன் 2) சீனா 3) இந்தியா 4) ஜப்பான்


35. பாடசாலை விழா ஒன்றிற்கான நிகழ்ச்சி நிரலின் விடயங்கள் சில ஒழுங்கு மாற்றப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.
A - அதிபரின் உரை. B - வரவேற்புரை.
C - நன்றியுரை. D - அதிதிகளின் வருகை.
E - பரிசில் வழங்கல். F - பிரதம அதிதியின் உரை.
நிகழ்ச்சி நிரலின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
1) BDCAEF 2) ACEFDB 3) DBAFEC 4) FBCDEA


✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்துக்குச் சமனாக அமையாத வடிவத்தை எதிரே தரப்பட்டுள்ள நான்கு வடிவங்களில் இருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தின் கீழ்க்கோடிடுக.

36.

A B C D

37.

A B C D

38.

A B C D

39.

A B C D

40.

A B C D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்றிங் அடித்தல்

கட்டடங்களுக்கு உடன் சட்றிங் அடித்துக் கொடுக்கப்படும்.
1 ஸ்குயர்- 6,000/= ரூபா மட்டும்.
தொ.பே.: 0770204990.
(6679)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கை நடத்தி வருகின்றது.

இன்று புதன்கிழமை 7 ஆம் திருவிழாவில் செல்வி ஜெகனி சண்முகநாதன், திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, என்.சதீஸ்குமார், ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் பங்குபற்றும் இசையரங்கு இடம்பெறும். (வ-313)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு சமய சொற்பொழிவுகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை 7 ஆம் திருவிழாவில் சைவப்புலவர் பொன்சுகந்தன் " சமயம் காட்டும் வாழ்வு " எனும் தலைப்பிலும், பேராசிரியர் முனைவர் நல்லூர் சா.சரவணன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் அறநெறிப்பாடசாலை, வெல்வில் அறநெறிப்பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (வ-313)

* * *

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்புக்களின் ஏற்பாட்டில் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆன்மிக சொற்பொழிவில் இன்று புதன் கிழமை 'முருக வழிபாடு' எனும் தலைப்பில் சைவப்புலவர் க. நித்தியதசீதரனின் சொற்பொழிவு இடம்பெறும். (வ-311)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
(6393)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1938.05.21
உதிர்வு: 2006.08.10

### அமரர் யோசப் பற்றிக் (ராசா)

ஐந்தாண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் அருகில் வீற்றிருக்க
இறைவனை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

149/2, கதிற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14 ★ 03 ★ 1947



உதிர்வு
10 ★ 08 ★ 2007

### அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்- ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)

அன்பு மொழி பகர்ந்து பண்புடனே
எமை வளர்த்த அன்பு நிறைந்த எம் தந்தையே!
எமைவிட்டு நீர் சென்று நான்காண்டுகள் சென்றாலும்
என்றும் உம் நினைவுகளைச் சுமந்தபடி
இவ்வுலகில் நாமிருப்போம்.

"தணிகை",
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

உங்கள் இனிய நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
(6662) (38)

## நினைவலைகளில்....

முதலாம் ஆண்டு | 16 ஆம் மாதம் | 18 ஆம் மாதம்







தோற்றம்: 19.08.1920
மறைவு: 22.07.2010
**திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்**

**கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

தோற்றம்: 21.04.1940
மறைவு: 09.02.2010
**கணபதிப்பிள்ளை இரத்தினம்**

கடந்த (22.07.2010) அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (10.08.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி, உடுவில், சுன்னாகம்.
க.வடிவேலு (மகன்).

## இடைநிலைப்பரீட்சை

கூட்டுறவு பணியாளர்களுக்கான உயர் பிரிவு தராதரபத்திர இடை நிலைப்பரீட்சை, எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

உயர்பிரிவுக்கான இடைநிலைப் பரீட்சை 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறும்.

அனைத்து பரீட்சாத்திகளையும் தவறாது பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு யாழ் .மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் திருமதி வே. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (வ-311)

## 26 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 10.02.1956
விண்ணில்: 10.08.1985



### திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்

(ஆசிரியை றோ.க.பாடசாலை - கோப்பாய் தெற்கு)

இருபத்தியாறு ஆண்டென்ன எத்தனை ஜென்மமானாலும்
எம் தாயைப் போல காண்போமா?
கண்ணுக்குள் வைத்து காத்த மனைவியே!
கண்ணீருடன் நிற்கின்றோம் உமைப் பிரிந்து
எம் இதயத்தினுள் தெய்வமே என்றும்
உங்களை மறக்க முடியாதம்மா!

நீங்காத நினைவுடன்:
கணவர் - லயன் வ.சுப்பிரமணியம்,
மகன்: சு.சுதர்ஸன்
(பொறியியலாளர்- புத்தளம்).

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக,
கோப்பாய் மத்தி.


நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு விசேட விலையில் அனைத்து விதமான இலத்திரனியல், கணனிப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| COMPUTER | INTEL DUAI CORE | INTEL DUAI CORE | INTEL CORE i3 | INTEL CORE i5 |
|---|---|---|---|---|
| Processor | Intel Dual core 3.2GHZ | Intel Dual core 3.2GHZ | IntelCore i3 3.06Ghz | IntelCore i5 3.20Ghz |
| Mother board | Intel Chipset G41 -D3B | Intel Chipset G41 -D3B | Intel DH55PJ | Intel DH55PJ |
| Memory | 1GB DDR-III, 800MHZ | 2GB DDR-III, 800MHZ | 2GBDDRIII | 2GBDDRIII |
| Hart disk | 250GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | LG DVD Writer | LG DVD Writer | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte |
| Casing | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte | LG DVD Writer | LG DVD Writer |
| Moniter | Viewsonic 16" LCD | DELL LCD 18.5" | DELL LCD 18.5" | DELL LCD 18.5" |
| Key board | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 |
| Mouse | I-NEXOptical USB Ps\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 | I-NEX USB,PS\2 |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =36950 | price= 40900 | price= 49900 | price=60900 |




| Toshiba mini | HP mini | HP 430 Laptop | HP 430 Laptop | Toshiba satellite L635 | COMPAQ 420 | HP probook 4530s |
|---|---|---|---|---|---|---|
| Atom Intel 1.6Ghz<br>Dos<br>1GB<br>H.D250GB<br>128MB<br>LCD10.1"<br>WIFI Blue Tooth<br>webCamWith Mic | Atom Intel 1.6Ghz<br>Win 7 starter<br>1GB<br>H.D 160GB<br>128MB<br>LCD10.1"<br>WIFI Blue Tooth<br>webCam With Mic | Intel core i3 2.10 GHz,<br>Free Dos<br>Intel HD Graphics<br>RAM 2GB DDRIII<br>H.D 320GB<br>DVD super multi<br>Wifi<br>webCamera With Mic<br>LED 14.1" HD | Intel core i5 2.30GHz<br>Free Dos<br>Intel HD Graphics<br>RAM 2GB DDRIII<br>H.D 500GB<br>webCam With Mic<br>Wifi<br>DVD super multi<br>LED 15.6" HD | Intel core i3 2.53 GHz,<br>Free Dos<br>2GB<br>H.D 500GB<br>DVD Writter<br>Intel HD Graphics<br>webCamera With Mic<br>LED 13.3" HD<br>WIFI Blue Tooth | Intel Core2 Duo 2.2 GHZ<br>Free Dos<br>2GB<br>320GB HDD<br>DVD Writter<br>796MB<br>webCamera With Mic<br>LCD14.1"<br>WIFI Blue Tooth | IntelCorei3-2.10 GHz, 3 MB L3 cache<br>Win7 Home pre<br>4GB 1333 MHz DDR3 RAM<br>320GB HDD<br>DVD Writter<br>Intel® HD Graphics 3000<br>HD Camera With Mic<br>LED 15.6"<br>Wifi, SRS Premium Sound |
| Price= 43900 | Price= 39900 | Price=64900 | Price=76900 | Price=74900 | Price=54900 | Price=71900 |

Midea Electro Mart
Authorized Dealer for Abans Ltd.
NO: 1-I, 1-H, Stanley Road, Jaffna, Srilanka.
Tel: 021-222 4566, Fax: 021 222 1646, E-mil: midea21@gmail.com

**Terms & Contdition**
**1. 3Years Manufacturer's warranty, 2. Offer Valid for 07 Days**

Midea PC Show Room
Branch: No. 04,New Market, Chavakachcheri.
T.P: 021 227 0268, Fax:021 227 0129


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுடன் இணைப்பாட விதானத்திலும் முன்னிலை வகிக்கும் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை லைடன் தீவில் பெண்கள் பாடசாலையாக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் கரம் பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்.

தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை இணைந்து நடைபெறும் இந்தப் பாடசாலை முதலாம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1979.12.31 இல் அதி பர் காமலீற்றா ஓய்வுபெற 1980 தை முதல் 1980 வைகாசி வரை அருட்சகோதரி பொன் வஞ்சர் பதில் அதிபராகக் கடமை யேற்று அந்த குறுகிய காலத்தினுள் தனது பணியைத் திறம்படச் செய்தார்.

1980 வைகாசி 5 இல் சகோதரி லீனா அதிபரானார். இவரது காலப்பகுதிகளில் கலை, இலக்கியப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை மாணவர்கள் பிரகாசித்தனர். 1989 இல் இவர் ஓய்வுபெற அருட் சகோதரி பாஸ்கல் அதிபரானார். இந்தக் காலப்பகுதியில் 480 மாணவிகள் இங்கு கல்வி கற்றனர். 1990 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக இந்தப் பாட சாலையும் இடம்பெயர்ந்தது.

சுருவில் பிரதேசத்திலுள்ள தனியார் வீடு ஒன்றில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகள் இணைந்து செயற்பட்டன. மீண்டும் 1991 இல் தீவுப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து யாழ். நகருக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யாழ். நகரிலுள்ள மத்திய கல்லூரியில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகள் மாலை நேரப் பாடசாலையாகச் செயற்பட்ட போது கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயமும் அவற்றுடன் இணைந்து செயற்பட்டது.

பின்னர் 1992 ஆம் ஆண்டு தை மாதம் முதல் யாழ். சென். ஜோன்ஸ் அக்கடமியில் முழு நேரப் பாடசாலையாக ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகள் செயற்படத் தொடங்கின. கடினமான இந்த காலப் பகுதியில் அதிபர் அருட்சகோதரி பாஸ்காவின் கடுமையான உழைப்பினால் பாடசாலையின் தரத்தை நிலை நிறுத்த முடிந்தது.

1995 இல் இவர் மாற்றலாகிச் செல்ல அருட்சகோதரி கலிஸ்ரா அதிபராக இப்பாடசாலையைப் பொறுப்பேற்றார். இவர் பொறுப்பேற்ற காலமும் மிகத் துன்பியல் நிறைந்த காலமாகக் காணப்பட்டது. 1995 ஐப்பசி மாதம் இப்பாடசாலை இடம் பெயர்ந்து தென்மராட்சிக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. மிருசுவிலில் உள்ள உசன் மகா வித்தியாலயத்தில் யாழ். கோட்டப் பாடசாலையுடன் இணைந்து இதுவும் செயற்பட்டது.

1996 இல் வைகாசியில் இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கும் பேறுபெற்றது. காடு வளர்ந்து கட்டட கூரைகளை இழந்து பொலிவற்றிருந்த பாடசாலை, கல்லூரிச் சமூகம் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்ட காரணத்தினால் மீண்டும் புதுப்பொலிவு பெற்று செயற்படத் தொடங்கியது.

கல்வியில் மட்டுமின்றி இணைப் பாடவிதான செயற்பாடுகளான சாரணியம், விளையாட்டுத்துறை என்பனவற்றிலும் பாடசாலை மாணவிகள் சிறந்து விளங்கினார். 2000 ஆம் ஆண்டு வைகாசியில் இப்பாடசாலை அதிபர் கலிஸ்ரா மாற்றலாகிச் செல்ல புதிய மிலேனியம் ஆண்டில் அருட் சகோதரி செபமாலை தயாநாயகி அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலத்தில் வளங்கள் அதிகரிக்கப்பட்டதோடு கூடுதலான மாணவர்கள் பாடசாலையில் இணைந்து கல்வி கற்று வந்தனர். அருகில் உள்ள திருக்குடும்பக் கன்னியர் மட விடுதியில் மாணவர்கள் தங்கி நின்று கல்வி கற்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணப் பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளில் மாணவிகள் கூடுதலான அடைவு மட்டத்தை வெளிப்படுத்தியதுடன் வருடாந்தம் பல்கலைக்கழக அனுமதிகளையும் மாணவிகள் பெற்றுக் கொண்டனர்.



இந்தப் பாடசாலையில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களுக்கு சுய தொழில் வசதிவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் முகமாக முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு முதல் தட்டச்சுப் பயிற்சி, பெயின்ரிங், கணினிப் பயிற்சி, கேக்ஐசிங், சிகை அலங்காரம், உணவு பதனிட்டுப் பாதுகாத்தல் போன்ற பயிற்சி நெறிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2005 இல் அதிபர் அருட்சகோதரி செபமாலை தயாநாயகி இடமாற்றலாகிச் செல்ல அருட்சகோதரி சகாய நாயகி பஸ்தியாம்பிள்ளை அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றார். 2005 இல் 250 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை தற்பொழுது 400 ஆக அதிகரித்துள்ளது. அதேபோன்று புதிய அதிபரின் கடின முயற்சியினால் விஞ்ஞான ஆய்வுகூடம் கட்டப்பட்டுள்ளது.

இங்கு விளையாட்டு மைதானம் இல்லாதது பெருங்குறையாகவே இருந்து வருகின்றது. மைதானம் இல்லாத போதும் எமது பாடசாலை மாணவிகள் கோட்ட, வலய, மாவட்டத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றதோடு மாகாண மட்டத்திலும் தெரிவாகியுள்ளனர். இதுமட்டுமன்றி ஆங்கில, தமிழ்த் தினப் போட்டிகளிலும் பங்குபற்றி மாகாண மட்டத்துக்கும் தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீ

2011 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பாடசாலை அதிபரின் தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள் தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். பாடசாலை மாணவர்களின் எதிர்கால நலனில் அதிபர், ஆசிரியர்கள் அக்கறை கொண்டுள்ளனர். ஆசிரியர்களால் மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையுடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் முழு மனதோடு ஈடுபடுவார்களாயின் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம் கல்வியில் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் மென்மேலும் சிறந்து விளங்கும் என்பது உறுதி. ★


## நல்லூர் கந்தன்

மஹோற்சவம்

(ஏழாம் திருவிழா)




### நல்லூரின் நாயகன் வருவான்!

கந்தனுக்குச் சொந்த இடம் தமிழ்நாடம்மா
கடல் தாண்டிச் சென்றாலும் அவன் வீடம்மா
குன்றுவளர் கந்தன் முகம் தினம் பாரம்மா!
கோடி நலம் தேடிவரும் உன் வீடம்மா

பாலும் தெளிதேனும் கசக்குதம்மா ! - அந்த
பாலகன் திருவடி இனிக்குதம்மா
நாளும் பொழுதும் முருகா! என்றால் - அந்த
நாயகன் நல்லூரில் வருவானம்மா

என் பாடல் அவன் கேட்டு ஓடி வருவான்
எந்நாளும் நல்லோரை வாழ விடுவான்
கண்ணிழந்த குருடனுக்குப் பார்வை தருவான்
கந்தா என்றழைத்தாலே தன்னைத் தருவான்

கவிஞர் செ. பரமநாதன்,தாவடி.



விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**காவேரி சில்க்ஸ்**

பட்டுப்புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்

இல.48, பெரியகடை, யாழ்ப்பாணம்.





## வருடாந்த மஹோற்சவம் 2011

(வேட்டைத் திருவிழா)


## சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார்

மதம் கொண்ட ஆதிசேடனை அரை நாணாக்கி
இதம் காணும் இனிய பிள்ளையாய் பாருலகில்
பதம் பணியும் தொண்டர்க்கு கற்பகத் தருவாகி
வரம் தரும் வள்ளலே எழுவோம் உனை தொழ
ஏழாம் திருவிழாவில் - தி.சிவதட்சணாமூர்த்தி (சங்கை சிவம்)

சிறப்புற வாழ்த்துவோர்: சொம்பொற்சோதி குடும்பத்தினர்.
வல்லை வீதி, சங்கானை.



## மனமார வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**V.M.இராமலிங்கம்**

(ஓய்வு நிலை கிராம
A ¾ I) ;

கடந்த வன்செயலின்போது இடம்பெயர்ந்து சுன்னாகம் கிழக்கு J/197 பிரிவில் தஞ்சமடைந்த இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்களை உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்குவதற்கு இருப்பிட வசதியில்லாத குடும்பங்களுக்குப் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் இருப்பிடவசதி ஒழுங்குசெய்தும் துரிதமாக எல்லாக் குடும்பங்களுக்கும் இலவச உணவு விநியோகம், நிவாரணக் கொடுப்பனவு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களி டமிருந்தும் உணவில்லாப் பண்டங்களை விரைவில் பெற்றுக் கொடுத்தும் நலன்பேண் நிலையங் களை நன்கு பராமரித்தும் ஓய்வுநிலை பெற்று மீண்டும் சேவையாற்றிய திரு.வி.மா.இராமலிங்கம் அவர்களை என்றும் செய்நன்றி மறவாத இடம்பெயர்ந்த மக்கள் இனிவரும் காலங்களிலும் தங்களது பொதுமக்கள் சேவையை தொடர்வதோடு பல்லாண்டு காலம் சிறப்புற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

இடம்பெயர்ந்த மக்கள்



**மொழி வகுப்புக்கள்**

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் A1 Exam இற்கு ஏற்றவாறு நடை பெறுகிறது. CD, Book விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது.

No.10, PALALY ROAD, JAFFNA.
T.P:0771604823.

**விற்பனைக்கு**

புதிய MUBOTA நெல் அறுவடை இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு. 15.02.2011 இல் கொள்வனவு செய்யப்பட்டது.

**தேவை**

நெல் அறுவடை மெசினில் வேலை செய்யக் கூடியவர் உடன் தேவை

**தொடர்பு:0212224065**

**காணிவிற்பனை**

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக (150 mதூரம்) உள்ள 8 பரப்புக்கு மேற்பட்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0779906042


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானா நபீக் விடுதலைக்கு வாய்ப்பு; அமைச்சர்குழு சவூதி அரேபியா பயணம்

கொழும்பு, ஓக.10

சவூதி அரேபியாவில் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக் மன்னிப்பு அளிக்கப்பட்டு விரைவில் இலங்கைக்கு அழைத்துவரப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளுக்காக அமைச்சு மட்ட தூதுக்குழுவொன்று ஏற்கெனவே சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளது.

16.07.2007 ஆம் திகதி ரிஸானா நபீக்கிற்கு மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. 4 மாதக் குழந்தையொன்றைக் கொன்றார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அப்போதிருந்து இலங்கையின் அரசியல் கட்சிகளும் மனித உரிமைக் குழுக்களும் ரிஸாணாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வருகின்றன. ரிஸானாவுக்கு மன்னிப்பு அளிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாவுக்கு கடந்தவருடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

சவூதி அரேபியாவில் அமுலிலுள்ள சரீஆ சட்டத்தின்படி மரணதண்டனை விதிக்கப்பட்டவருக்கு அந்த நாட்டு மன்னரும் மன்னிப்பளித்து விடுவிக்க முடியாது. இந்த விடயத்தில் உயிரிழந்த குழந்தையின் பெற்றோரே மன்னிப்பு அளிக்க வேண்டும்.

இந்த நிலையில் அந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேரா, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க ஆகியோர் கடந்த சனிக்கிழமை சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஐக்கிய நாடுகள் சபையில்சர்வதேச இளைஞர் உயர்மாநாடு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகபெரும, இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் லலித் பியூம் பெரேரா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சபைப் பணிப்பாளர் அன்ரே டினேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (23)

# டெங்கு நோயால் 114 பேர் மரணம்

கொழும்பு, ஓக.10

இந்த ஆண்டு டெங்கு நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 114 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு அறிவித்துள்ளது.

மேலும், இதே கால கட்டத்தில் சுமார் 4,844 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று இந்தப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் இந்த வருடம் டெங்கு நோயினால் உயிரிழந்தோரில் அதிக எண்ணிக்கையான மரணங்கள் கொழும்பிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வருட அறிக்கையின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் 52 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 17 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 பேரும் இதுவரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 10 லட்சம் இலங்கையர்கள் சிறுநீரக நோயினால் பாதிப்பு

கொழும்பு, ஓக.10

இலங்கையில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் என சுகாதாரத்துறை ஆராய்ச்சியாளர்கள் இனங்கண்டுள்ளதுடன், இந்தப் பிரச் சினைக்குத் தீர்வுகாண தேசியக் கொள்கையை முன்னெடுக்குமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த பத்து லட்சம் பேர் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாக ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது.

வடமத்திய மாகாணத்தில் மட்டும் சிறுநீரக செயலிழப்பினால் 12 லட்சத்து 40 ஆயிரம் பேர் துன்பப்படுவது கண்டறியப்பட்டிருப்பதாக ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் பராக்கிரம ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள குடிதண்ணீரில் இரசாயனப் பொருள்கள் கலந்திருப்பதே நோய்க்கான பிரதான காரணமென அவர் தெரிவித்துள்ளார். 45 - 70 வயதுக்குட்பட்டவர்கள், 20-45 வயதுக்குட்பட்டவர்கள் ஆகியோர் மத்தியில் மேற்கொண்ட ஆய்வில் 45-70 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 68 வீதமானவர்களும், 20 - 45 வயதெல்லைக்குட்பட்டோரில் 11சத வீதமாகவும், அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் மக்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். நிலத்தடி நீரில் ஆசனிக் கலந்திருப்பதே இந்த நோய்க்கான காரணமாக இருக்கலாமென அண்மையில் ஆய்வு மேற்கொண்ட குழுவொன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-கிளிநொச்சி (வ-து)

## பதிவு இலக்கமும், திகதியும் : P/46, 08.02.1971

## அறிவித்தல்

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் - 14.08.2011

வடக்கு,கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16 ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத்தெரிவு செய்வதற்கான விதிகள்'' இதற்கு அமைய திரு.குமாரசிங்கம் அருந்தவநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகிய நான் 2009.04.08ஆம் திகதிய 1596/17ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிமூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கு அமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

★இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

★கிளைப்பொதுச் சபைக்கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர், 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.

★தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (9) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் குறைந்தது இருவராவது 18-35 வயதுக்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

★சபையில் இருந்து கிடைக்கப்பெறும்முன்மொழிவுகள் அவ்வவ் தொகைகளுக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.

★இரண்டுவேட்பாளருக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே சமவாக்குகள்கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும், எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

★தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தவருக்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இந்தஅறிவித்தலை ஏற்றுக்கொண்டு இந்தக் கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப்பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

### கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் தொடர்பான விவரம்

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்-14.08.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

| தொ.இல. | கிளையின்பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | 01 | திரு.சோ.கிருஷ்ணகுமார், கூ.அ.உ | கிளை நிலையம்,கணேசபுரம் |
| 02 | கனகபுரம் | 02 | திரு.ந.நாவேந்தன், கூ.அ.உ | கிராம அபிவிருத்திச் சங்கம், கனகபுரம் |
| 03 | திருநகர் | 03 | திரு.க.செல்வகுமார், கூ.அ.உ | முன்பள்ளி,திருநகர் |
| 04 | ஜெயந்திநகர் | 04 | திரு.க.சசிகரன் , கூ.அ.உ | கிராம அபிவிருத்திச் சங்கம், ஜெயந்திநகர் |
| 05 | கிளி-மேற்கு | 05 | திரு.இ.ஜெகதீபன், கூ.அ.உ | கிளை நிலையம்,5ஆம் வாய்க்கால்,பெரியபரந்தன் |
| 06 | உருத்திரபுரம் மேற்கு | 06 | திரு.இ.விஜயகுமார், கூ.அ.உ | கிளைநிலையம்,உருத்திரபுரம் மேற்கு |
| 07 | உருத்திரபுரம் கிழக்கு | 07 | திரு.வி.சிவபாலன், கூ.அ.உ | கிளை நிலையம், உருத்திரபுரம்கிழக்கு |
| 08 | சிவநகர் | 08 | திரு.ஜெ.சஞ்சீவ், கூ.அ.உ | சிவநகர், அ.த.க.பாடசாலை |
| 09 | புதுமுறிப்பு | 09 | திரு.க.உதயரூபன், கூ.அ.உ | கிளை நிலையம்,புதுமுறிப்பு |
| 10 | இரணைமடு கிழக்கு | 11 | திரு.இ.ராஜீவ்ரதன், கூ.அ.உ | அம்மன் கோயில் மண்டபம்-மருதநகர் |
| 11 | திருவையாறு | 13 | திரு.உ.ஜெயந்தபிரகாஸ், கூ.அ.உ | கிளை நிலையம், கனகாம்பிகை அம்மன் கோயிலடி |
| 12 | இரத்தினபுரம் | 14 | திரு.ப.தவப்பிரியன், கூ.அ.உ | கிளை நிலையம், இரத்தினபுரம் |
| 13 | பாரதிபுரம் | 16 | திரு.வ.ரஞ்சன், கூ.அ.உ | கிளை நிலையம்,பாரதிபுரம் |
| 14 | உதயநகர் | 17 | திரு.அ.வசிகரன், கூ.அ.உ | கிளை நிலையம்,உதயநகர் |
| 15 | அம்பாள்குளம் | 18 | செல்வி க.கார்த்திகா, கூ.அ.உ | கிளை நிலையம், அம்பாள்குளம் |
| 16 | செல்வாநகர் | 19 | திரு.இ. சுதன், கூ.அ.உ | கிளை நிலையம், செல்வாநகர் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை, கிளிநொச்சி.
08.08.2011

(F/2613) (19).

ஒப்பம்: வி.கே.அருந்தவநாதன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவை மன்மோகன்சிங் வன்மையாகக் கண்டிக்கவேண்டும்

## பழ.நெடுமாறன் ஆவேசம்



சென்னை, ஒக. 10

தமிழக முதல்வரை இழிவு படுத்தும் வகையில் இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய பேசியுள்ளதற்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரையும் சட்டமன்றத்தையும் வரம்புமீறித் தாக்கியுள்ள கோத்தபாய ராஜபக்ஷவின் செயலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கண்டிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக விசாரிக்க வேண்டும் என்றும் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை இழிவு படுத்தி அரசியல் நாகரிகமற்ற முறையில் பேசியுள்ள இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழக முதல்வரை மட்டுமல்ல. ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள தமிழக சட்டமன்றத்தையும் அவர் இழிவுபடுத்தியுள்ளார். இந்தத் துணிவு அவருக்கு வந்ததற்கு இந்திய அரசே முழுமையான காரணமாகும்.

மாநில முதல்வர்கள் இல்லையென்றால் இந்தியா இல்லை. தமிழக முதல்வரை அவமதிக்கும் போக்கை அண்டை நாட்டின் அதிகாரி ஒருவர் மேற்கொள்வதை அனுமதிப்பது ஒட்டு மொத்தத்தில் இந்தியாவை அவமதிப்பதாகும்.

தமிழக முதல்வரையும் சட்டமன்றத்தையும் வரம்பு மீறித் தாக்கியுள்ள கோத்தபாய ராஜபக்ஷவின் செயலைக் கண்டிக்க இந்திய பிரதமர் மன்மோகன் சிங் முன்வரவேண்டும்.

- இவ்வாறு தனது அறிக்கையில் நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பை உடன் ஏற்று சமச்சீர் கல்வி நடைமுறைக்கு வரும்

## பேரவையில் முதல்வர் தெரிவிப்பு



சென்னை, ஒக. 10

சமச்சீர் கல்வி வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ள தீர்ப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கும். உச்ச நீதிமன்ற அறிவுறுத்தியபடி, இன்னும் 10 நாள்களில் அனைத்து வகுப்புகளுக்கும் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் - என்று முதல்வர் ஜெயலலிதா நேற்று சட்டப் பேரவையில் அறிவித்தார்.

தமிழகத்தில் சமச்சீர் கல்வித் திட்டத்தை நடப்பாண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். இன்னும் 10 நாள்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தி புத்தகங்களையும் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து தமிழக அரசின்நிலை குறித்து அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். இந்த நிலையில் நேற்று சட்டசபையில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வாசித்தார் முதல்வர் ஜெயலலிதா.

அப்போது அவர் கூறுகையில், சமச்சீர் கல்வித் திட்டத்தை நடப்பாண்டிலேயே தமிழகத்தில் அமுல்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவை தமிழக அரசு ஏற்கிறது. அதன்படி நடப்பாண்டிலேயே சமச்சீர் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - என்று அவர் தெரிவித்தார்.



கர்நாடக மாநில ஆளுநர் மாளிகையில் இடம்பெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில், பதவியேற்ற 21 அமைச்சர்களுடன் ஆளுநர் பரத்வாஜ், முதல்வர் சதானந்த கவுடா ஆகியோர் நிற்கின்றனர்.

# இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த 40 கிலோ கஞ்சாவுடன் இலங்கையர் உட்பட 6 பேர் கைது

ராமேஸ்வரம், ஒக. 10

இலங்கைக்குக் கடத்துவதற்காக திருச்சியிலிருந்து ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்திற்கு பல லட்ச ரூபா மதிப்புள்ள கஞ்சா, புகையிலை உள்ளிட்ட பொருள்களை வானில் கடத்தி வந்த இலங்கையர் உட்பட 6 பேர் கைதாகினர்.

தங்கச்சிமடம் தெரசாள் தேவாலயம் அருகே உள்ள பொலிஸ் சோதனை நிலையத்தில் பொலிஸ் அதிகாரி செய்யது ஹலி முல்லா, எஸ்.ஐ. நடராஜன், லட்சுமணன் மற்றும் பொலிஸார் பணியிலிருந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணிக்கு ராமேஸ்வரம் நோக்கி வேகமாகச் சென்ற வானை நிறுத்திச் சோதனை செய்தனர். இதில் 40 கிலோ கஞ்சா, ஆயிரத்து 800 பக்கெட் ஜரிதா புகையிலை உள்ளிட்ட பொருள்கள் இருந்தன. அவற்றைப் பறிமுதல் செய்தனர். வானில் மறைத்து வைத்திருந்த ஒரு லட்சம் ரூபாவையும் பொலிஸார் கைப்பற்றினர். இலங்கை கொழும்பு கதிரேசன் வீதியைச் சேர்ந்த சுந்தர் ராஜன் (வயது - 54) உட்பட 6 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களிடம், ராமேஸ்வரம் பொலிஸ் அதிகாரி, மணிவண்ணன் விசாரணை நடத்தினார். கொழும்பில் கடைகளுக்கு பொருள்களை மொத்தமாக விநியோகம் செய்து வருபவர் சுந்தர்ராஜன். திருச்சி வந்த இவர் திருச்சியைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் கஞ்சா, புகையிலையை இலங்கைக்குக் கடத்துவதற்காக வானில் ராமேஸ்வரம் கொண்டு வந்துள்ளார்.

பாம்பன் மீனவர்கள் சிலர் உதவியுடன் படகில் இலங்கைக்குக் கடத்திச் செல்ல முயன்றபோது இவர்கள் பிடிப்பட்டனர் என தெரியவந்தது.

# பா.ஜ.க. கடல் முற்றுகை பற்றி பொலிஸார் தீவிர விசாரணை

ராமேஸ்வரம், ஒக. 10

ராமேஸ்வரத்தில் நடந்த கடல் முற்றுகைப் போராட்டத்தில் பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் கடலுக்குள் செல்ல பயன்படுத்தப்பட்ட படகு குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் மீது, தொடர் தாக்குதலை நடத்திவரும் இலங்கை அரசையும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய மத்திய அரசையும் கண்டித்து கடந்த ஞாயிறன்று ராமேஸ்வரத்தில் பா.ஜ.க. சார்பில் கடல் முற்றுகைப் போராட்டம் நடந்தது. பா.ஜ.க. அகில இந்தியச் செயலர் முரளீதர் ராவ் பகல் 12 மணிக்கு மேடைக்கு வந்த சிறிது நேரத்தில் கடற்கரையில் படகில் வந்திறங்கிய பொன்.ராதாகிருஷ்ணன் உட்பட கட்சி நிர்வாகிகளை, பொலிஸார் மேடைக்கு அழைத்து வந்தனர். மேடையில் ராதாகி ருஷ்ணன், காலை 6 முதல் நண்பகல் 12 மணிவரை கடலில் முற்றுகைப் போராட்டம் நடத்தினோம் - என்றார்.

பொலிஸார் முதலில் இதை மறுத்தாலும், பின்னர் விசாரித்ததில் உள்ளூர் நிர்வாகிகள் சிலரின் உதவியுடன், அதிகாலையில் பா.ஜ.கவினர் நாட்டுப்படகில் ஆழ்கடலுக்குச் சென்று திரும்பிய தகவல் தெரியவந்தது.

இதையடுத்து, இவர்கள் பயணம் செய்த படகு எது, உரிமையாளர் யார் ஆகிய தகவல் கிடைக்காத நிலையில் இது குறித்து நாட்டுப்படகுமீனவர்களிடையேபொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# கனிமொழியை திஹார் சிறையில் சந்தித்துப் பேசினார் அழகிரி





டில்லி, ஒக. 10

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் சிக்கி கைதாகி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி.மு.க. மாநிலங் களவை உறுப்பினர் கனிமொழியைச் சிறைக்குச் சென்று சந்தித்துப் பேசி னார் அவரது மூத்த சகோதரர் மு.க.அழகிரி.

மத்திய அமைச்சரான மு.க.அழகிரி கனிமொழியைச் சந்தித்துப் பேசுவது இது மூன்றாவது முறையாகும்.

நேற்றுமுன்தினம் திஹார் சிறைக்குச்சென்று மு.க.அழகிரி, சிறை வரவேற்பறையில் வைத்து தனது தங்கையைச் சந்தித்துப் பேசி ஆறுதல் கூறினார். சுமார் அரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

# இடதுசாரிகளுடன் சேர மன்மோகன்சிங் விருப்பம்

டில்லி, ஒக. 10

இடதுசாரிகளுடன் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி சேர விரும்புவதை பிரதமர் மன்மோகன் சிங் சூசகமாக வெளிப்படுத்தி உள்ளார் எனக் கூறப்படுகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் கடந்த 2006 ஆம் ஆண்டு மத்திய அரசு பதவியேற்றபோது அந்தக் கூட்டணி அரசில் இடதுசாரிகள் முக்கிய பங்கு வகித்தனர். அமைச்சரவையில் இடதுசாரிகள் பங்கேற்காவிட்டாலும், சபாநாயகர் பதவியை மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் சோம்நாத் சட்டர்ஜி ஏற்றார்.

கடந்த 2008ஆம் ஆண்டு இந்தியா - அமெரிக்கா அணு ஒப்பந்தம் தொடர்பாக காங்கிரஸுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கூட்டணியில் இருந்து இடதுசாரிகள் விலகினர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸும், இடதுசாரிகளும் தனித் தனியாகப் போட்டியிட்டனர். காங்கிரஸ் மீண்டும் மத்தியில் ஆட்சிக்கு வந்த நிலையில் இடதுசாரிகள் கடும் இழப்பைச் சந்தித்தனர்.

அதன் பின்னர் நடந்த கேரளா, மேற்கு வங்க தேர்தல்களிலும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு தோல்வியே ஏற்பட்டது.

இந்த நிலையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த 5 மார்க் சிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் அரசியல் குழு உறுப்பினர் சீதாராம் யெசூரியும் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களிடம் மன்மோகன் சிங் நீண்ட நேரம் மனம் விட்டுப் பேசினார். இடது சாரிகள் வழங்கி வந்த நல்ல ஆலோ சனைகளை தான் இழந்து விட்டார் என அவர் கவலையுடன் கூறினார்.

அவரது பேச்சு மூலம், இடதுசாரிகளுடன் மீண்டும் காங்கிரஸ் கூட்டணி சேர விரும்புவதை சூசகமாக வெளிப்படுத்தி உள்ளார் எனக் கூறப்படுகிறது.

மார்க்சிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர், என் மீது நம்பிக்கை இல்லையா என்று கேட்டாராம். அதற்கு அவர்கள், ''உங்கள் நேர்மை மீது நாங்கள் ஒருபோதும் சந்தேகப்பட்டது இல்லை'' என்றார்களாம்.

இதையடுத்து நாம் மீண்டும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்று மன்மோகன் சிங் கூறினார் எனத் தெரிகிறது.

இதன் தொடர்ச்சியாக கம்யூனிஸ்ட் தலைவர்கள், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளனர். சில கூட்டணி கட்சிகளின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், இடதுசாரிகளை தனது நட்பு வளையத்துக்குள் வைத்துக்கொள்ள இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஸ்பெக்ட்ரம், கொமன்வெல்த் ஊழல் குற்றச்சாட்டுகளில் பிரதமர் மீது பா.ஜ.க. குற்றம்சாட்டி வரும் நிலையில், இடதுசாரிகள் இந்த விவகாரத்தில் பிரதமர் மீது எதுவும் சொல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுகைக்காக இலங்கையை உளவு பார்க்கிறது அமெரிக்கா

## உஷாராக இருக்கவேண்டும் என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஓக.10

முற்றுகை ஒன்றுக்காக அமெரிக்கா இலங்கையை உளவு பார்க்கின்றது. எனவே, அரசு படைகளுடன் எந்த நேரத்திலும் உஷார் நிலையில் இருக்க வேண்டும். அது மட்டுமன்றி, உள்ளூர் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் வகையில் இராஜதந் திரத் தொடர்புகளை அவசர மாகக் கையாளவேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக் கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பத்துப் போர் விமானங்கள் இலங்கை வான் பரப்பில் அத்துமீறி ஊடுருவி யதைத் தற்செயலாக இடம்பெற்ற செயலாகக் கருதமுடியாது. தற் போது அவ்வாறான சம்பவம் நடைபெறவில்லையென்று அமெரிக்கா கூறி வருகின்றது.

இதிலிருந்து அமெரிக்கா வின் உள்நோக்கமும், நாட்டுக்கு எதிரான முற்றுகையும் வெளிப் பட்டுள்ளது என்றும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாகத் தேசப்பற் றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:-

யுத்தத்துக்குப் பின்னர் இலங்கைக்கு எதிரான சர்வதேச செயற்பாடுகள் மிகவும் தீவிர மாகவே காணப்படுகின்றன. குறிப்பாக அமெரிக்கா இலங்கை விடயத்தில் மிகவும் தீவிரமா கவே செயற்படுகின்றது.

அது மட்டுமன்றி அண்மைக் காலமாக அனுமதியின்றி ஏனைய நாடுகளின் எல்லைக்குள் ஊடு ருவித் தாக்குதல்களை நடத்து தல், சிறு நாடுகளை ஆக்கிர மித்தல் என்று பல்வேறு நட வடிக்கைகளிலும் அமெரிக்கா தீவிரமாகச் செயற்படுகின்றது.

எனவே, அமெரிக்கா, இலங்கை யின் இறையாண்மையைக் கேள் விக் குறியாக்கியுள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு உஷார் நிலையில் இருக்க வேண்டும். இராஜதந்திரத் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளவேண் டும். அமெரிக்காவினால் எப் போதும் ஆபத்து வரலாம் என் பதை அரசு புரிந்துகொள்ள வேண் டும் - என்றார்.

(ச)

# இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் தூதுவர்களுக்கு சிங்களமொழி தெரியாது

## ஜனாதிபதி கூறுகிறார்



கொழும்பு, ஓக. 10

இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் சில தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் உரிய முறையில் கடமையாற்றுவதில்லை. இராஜதந் திர சேவையில் ஈடுபட்டுள்ள சிலருக் குச் சிங்கள மொழியில் பேசக் கூட தெரியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவர்கள் அதிகளவில் தங்களது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள் வதில் நாட்டம் காட்டி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளதுடன் இலங்கை இராஜதந்திர சேவையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

நாடு மற்றும் இனம் பற்றிய அறிவு இல்லாதவர்களை இராஜ தந்திர சேவையில் ஈடுபடுத்துவது பொருத்தமற்றது. எனவே, இராஜதந்திர சேவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

# முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து தீர்வு காண்பது குறித்து ஆராய்வு

இலங்கையின் முற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்துத் தீர்வுகான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமச மாஜக்கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியன ஒன் றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குண சேகர, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ் கட்சி களின் தலைவர்களைச் சந்தித்த போதே இந்தக் கோரிக்கை யினை முன்வைத்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அவசியம் குறித்தும் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் இடதுசாரிக்கட்சிகளின் தலைவர்களும் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் ஆராய்ந்துள்ளனர். இனப்பிரச்சினைக்கு நாட்டி லுள்ள முற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தீர்வினைக் காண்பதற்கு முயற்சி எடுக்க வேண்டியது அவசிய மாகும். இதற்கு தமிழ்க் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமைச்சர்கள் மூவரும் கோரியுள்ளனர்.

இதற்கு தமிழ்க் கட்சித் தலைவர்கள் மூவரும் இணக்கம் தெரிவித்ததுடன் தொடர்ந்தும் இந்த விடயங்கள் தொடர் பில் ஒன்றுகூடி ஆராய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சிங்கள முற்போக்கு சக்திகளை ஒன்றிணைக்க வேண்டியது அவசியம் என்ற கருத் தினைச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

முற்போக்கு சக்திகளை அரவணைத்து தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதற் கான அழுத்தத்தினை சகல தரப்புகளும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித் தும் இங்கு இரு தரப்பினரும் கருத்துக் களை பரிமாறியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மூன்று அமைச்சர்களும் வலியுறுத்தி வருகின்றனர். மத்திய அரசின் அதி காரங்கள் சரிசமமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கும் வழங்கப்படவேண் டும் என்று கடந்த வாரம் லங்கா சமச மாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதா ரண தெரிவித்துள்ளார். இதேபோல் வடக்கு தமிழ் மக்களுக்கு சுய நிர்வாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என் றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியிருந்தார். இந்த நிலையி லேயே தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் அமைச்சர்கள் மூவரும் சந்தித்துள்ளனர்.

**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
**காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி**
(ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமுகம் தரவும்.

சாந்தமே சரீரமாய் சாற்றிடும் வேந்தராய்
மாந்தர்கள் மதித்திடும் மணிமொழிச் செல்வனாய்
சேந்தனே சேற்றினில் முளைத்திடும் முத்தாய்
காண்டமே படைத்திடும் காவிய நாயகன் களிப்போடு வாழி!

வாழ்த்துவோர்: தேவா மணிவிழாச் சபை
நிரு கல்வி நிலையம் - கோண்டாவில்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை தகவல் தொழில்நுட்பப்பாட ஆசிரியை
திருமதி நித்தியா அருள்மொழிவர்மனின்
பாசமிகு தந்தை

**கந்தையா குணராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்ம சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானி.மகளிர் கல்லூரி, மானிப்பாய். (6680)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

**ஆக்கங்கள் தேவை**

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சைவசமயம் சார்ந்த ''தீபச்சுடர்'' எனும் சஞ்சிகைக்கு எழுத்தாளர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் தேவைப்படுகின்றன. விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு 14.08.2011 இற்கு முன்னர் தங்களது ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்.

**''தீபச்சுடர்''**
C/O திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்
*88/11, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி அழைப்பு - காலையும் மாலையும் 6 - 8.45*
T.P. *021 5681463 (T.நேசன்), 0755559914*
குறிப்பு: ஆலயம் சம்பந்தமான நிகழ்வுகள் பற்றிய செய்திகள் இலவசமாகப் பிரசுரிக்கப்படும்.

**பணியாளர் தேவை**

**கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பணிமனைக்கு ஆங்கிலம், சிங்களம் எழுதப் பேசத் தெரிந்த ஆண் தமிழ்ப் பணியாளர் ஒருவர் தேவை. இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

விண்ணப்பங்கள் வரும் 15.08.2011 ஆம் நாளுக்கு முன்
இல.366, திருநகர் வடக்கு, கிளிநொச்சி
என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது
தபால் மூலமோ அனுப்பவும்.
021 3208181 **தலைவர்.**

**தேவை**

RESTAURENT ஒன்றுக்கு DELIVERY BOYS, STEWARDS TRAINEES தேவை DRIVING LICENCE(MOTORBIKE) உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு - 0772017824, 0778736700

**தவறிவிட்டது**

ஆனந்தராசா மணிமாலன் ஆகிய எனது தே. அ. அட்டை (793304153V), லைசென்ஸ், வி. அ. அட்டை மற்றும் வேறு முக்கிய ஆவணங்கள் 07.08.2011 அன்று நாவற்குழி -தனங்கிளப்புக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே- 0771988520, 0777906022

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



அமரர்
**தம்பிஐயா பாஸ்கரன்**
தோற்றம் 21.09.1962
மறைவு 13.07.2011

கடந்த (13.07.2011) இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.08.2011) புதன்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும்,வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (12.08.2011) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி கிழக்கு, மானிப்பாய். (6678)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் மற்றும் மாமனார்.

**வீடு வாடகைக்கு**

உப்புமடப்பிள்ளையார் வீதி,
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்
மேற்கு, கோண்டாவில்
(யாழ்ப்பாணத்திலிருந்து 4 கிலோ.மீ.)
இருமாடிக் கட்டடம் நவீன முறையில்
அமைக்கப்பட்டது. 8 அறைகள்,
இணைந்த குளியலறை மற்றும்
8 வாகனம் நிறுத்தக்கூடிய
தரிப்பிட வசதி கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு.
(6653)(38)
தொடர்பு: 0114854556, 0770443306, 0112472275.

**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 14.07.2011
வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த
அமரர் **விசுவலிங்கம் கனகராசா**
தோற்றம்: 1944.10.16
மறைவு: 14.07.2011

அவர்களின் மோட்சக் கிரியைகள் நாளை (11.08.2011) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 13.08.2011 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

32/11, ஓட்டுமட வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு கடந்த திபெத் அரசின் புதிய பிரதமர் பதவியேற்பு

தரம்சாலா,ஒக10

நாடு கடந்த திபெத் நாடாளுமன்றத்தில் நிர்வாக அரசின் புதிய பிரதமராக லொப்சங் சாங்கே நேற்றுமுன்தினம் பதவியேற்றார். இதற்கான பதவியேற்பு விழா தரம்சாலாவில், நாடு கடந்த திபெத் மதகுருத் தலைவர் தலாய் லாமா முன்னிலையில் நடந்தது.

பதவியேற்பு முடிந்த பின்னர் தலாய்லாமாவே மீண்டும் மதகுருவாகச் செயற்படுவார் எனத் திபெத் அரச நிர்வாகம் தெரிவித்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற விழாவில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திபெத்தியர்கள் கலந்து கொண்டனர்.

திபெத் மத்திய நிர்வாகத்தின் தலைமை நீதிபதி நக்வாங்-பெஹல்ஜி, நாடு கடந்த புதிய பிரதமர் லொப்சங்-சாங் கேவுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். புதிய பிரதமராகத் பதவியேற்ற லொப்சங்- சாங் கேயை வாழ்த்திய பின்னர் தலாய் லாமா திபெத் மொழியில் பேசியதாவது:

ஜனநாயக ரீதியில் தேர்வு செய்யப்பட்ட லொப்சங்- சாங் கேயிடம் இன்று முதல் திபெத் நிர்வாகத்தின் அனைத்து அரசியல் பொறுப்புக்களையும் ஒப்படைக்கிறேன்.

இனி அவர் திபெத் நாடாளுமன்றத்தின் பிரதமர் ஆவார் என்றார்.

புதிய பிரதமர் லொப்சங்-சாங்கே (43) டார்ஜிலிங் நகரில் பிறந்தவர். இவர் முன்னதாகக் கடந்த மே மாதம் 31ஆம் திகதி 15 பேர் கொண்ட திபெத்திய சட்டமன்றத்தில் தற்காலிக பிரதமராகத் தேர்வு செய்யப்பட்ட சாம்டெங்- ரிம்போச்சே விலகியதைத்தொடர்ந்து பிரதமரானார்.

கடின உழைப்பும், தியாக மனப்பான்மையும் தான் என்னைப் பிரதமராகத் தெரிவு செய்துள்ளது என சாங்கே கூறினார்.

# முக்கிய எண்ணெய் குழாய்ப் பாதை லிபிய கிளர்ச்சியாளர்களால் தகர்ப்பு

லிபியாவில் முக்கிய எண்ணெய் குழாய் பாதையை போராட்டக்காரர்கள் தகர்த்தனர். இந்தத் தாக்குதல் கடாபிக்கு பலத்த அடியாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் குழாய் தகர்ப்பால் தலைநகர் திரிபோலியில் பெரும் இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

லிபியாவில் சமீப நாள்களாக மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் போராட்டக்காரர்கள் முன்னேறி வருகிறார்கள். பர்கானம் பகுதியை கைப்பற்றி விட்டதாகப் போராட்டக்காரர்கள் கூறினர். இந்தப் பகுதி துனிஷிய மற்றும் கத்தார் ஆயுதக் கப்பல் செல்ல உதவும் கடல் வழி சாலையாகும்.

போராட்டக்காரர்களின் தாக்குதல் குறித்து லிபிய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் காலித் கய்ம் கூறுகையில்:

''மின்நிலையத்துக்கு எரி பொருள் கொண்டு செல்லும் எண்ணெய் குழாய் பாதையில் போராட்டக்காரர்கள் சேதம் ஏற்படுத்தி உள்ளனர். எனவே மின் உற்பத்தித்திறனில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம்களின் புனித மாதமான ரமழான் கடந்த வாரம் தொடங்கிய நிலையிலும் 40 டிகிரி வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையிலும் மின்உற்பத்தி நிறுத்தம் மக்களைப் பெரிதும் பாதிக்கச் செய்துள்ளது என்றார்.

# பஞ்சத்தில் தவிக்கும் ஆபிரிக்க மக்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிக்க ஜேர்மனி முடிவு

பெர்லின்,ஒக.10

பயிர் விளைச்சல் இல்லாமல் கருகிப் பட்டினியால் உயிருக்கு போராடும் ஹார்ன் ஆபிரிக்க மக்களுக்கு உதவ ஜேர்மனி நிவாரண உதவியை மேலும் அதிகரித்துள்ளது.

மூன்று பெரும் ஜேர்மனி நிவாரண சேகரிப்பு அமைப்புகள் கடந்த சில வாரங்களில் 6 கோடியே 40 லட்சம் யூரோக்களை நன் கொடையாக சேகரித்து ஆபிரிக்க மக்களின் துயரத்தைப் போக்க அளித்து உள்ளன.

அகிடோன் டெயுட்ஸ் வேண்ட் ஹஜப்ட் என்ற நிவாரண அமைப்பு கூட்டணி மட்டும் 1 கோடி யூரோ நன்கொடையை சேகரித்து அளித்து உள்ளது. இதனை அந்த அமைப்பின் இயக்குநர் பீற்றர் முகே தெரிவித்தார்.

ஆபிரிக்க பிராந்தியத்துக்கு கூடுதல் நிவாரண உதவி அளிப்பதில் ஜேர்மனி அரசு உறுதி கொண்டுள்ளது. இதுவரை 3 கோடியே 30 லட்சம் யூரோ அளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் 3 கோடி யூரோவை கூடுதல் உதவியாக அளிக்க ஐரோப்பிய கொமிஷன் நடவடிக்கை எடுக்கிறது. இதற்கும் ஜேர்மனி ஆதரவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நிவாரண உதவிகள் உணவு, தண்ணீர் வாங்குவதற்கு செலவிடப்படுகின்றன. சோமாலிய நாட்டின் பரிதாப நிலையால் சர்வதேச நிவாரண நிதிகள் குவிகின்றன.



ரஷ்யா, சோசியில், அந்தநாட்டு பாதுகாப்பு அமைச்சர் அனாடொலி செர்டியோகா (இடது), புதிதாகத் தயாரிக்கப்பட்ட விமான மாதிரியை, அந்நாட்டு அதிபர் டிமித்ரி மெத்வதேவுக்கு (வலது), காண்பித்தார்.

# இரு பலூன்கள் இடையே அந்தரத்தில் நடந்து சாதனை

## சீன வீரர் நிகழ்த்தினார்

சீனாவை சேர்ந்த சாகச வீரர் சைமாய்தி அய்ஷன்(27)2 ராட்சத பலூன்கள் இடையே கயிறு கட்டி கீழே பாதுகாப்பு வலை கட்டாமல்அதில் நடந்து சாகசம் செய்துள்ளார் சீன வீரர்.

வெப்பக் காற்றில் இயங்கும் 2 ராட்சத பலூன்கள் இடையே கையில் நீளமான கம்புடன் பலூனில் ஏறினார். இதனை ஏராளமான மக்கள் திரண்டிருந்து பார்வையிட்டனர். தரையில் இருந்து 100 அடி உயரத்தில் பறக்கும் போது வெற்றிகரமாக ஒரு பலூனில் இருந்து கம்பி வழியாக நடந்து மற்றைய பலூனுக்குச் சென்று அசத்தினார்.

பின்னர் பலூன் இன்னும் உயரே கிளப்பப்பட்டது. 328 அடி உயரத்தில் பறக்கும் போதும் நடந்து செல்லும் சாகசத்தை தொடங்கினார் அய்ஷன்.

எதிர்பாராதவிதமாக காற்று வேகமாக வீச தொடங்கியதால் நிற்க முடியாமல் திணறிய அய்ஷன், கை பிடி நழுவியது. கையில் இருந்து கம்பு கீழே விழ , இரும்பு கம்பியை பிடித்து தொங்கி அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினார்.

''650 அடி உயரத்தில் பறந்து 4ஆவது முறையாக கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். எதிர்பாராத விதமாக முயற்சி தோல்வி அடைந்துவிட்டது. இதே சாதனையை விரைவில் படைப்பேன்'' என்றார்.

# கியூபா - அமெரிக்கா கடலை நீந்திக் கடக்கும் 61 வயதுப் பெண்

61 வயது அமெரிக்க பெண் டயானா நியாத் புதிய சாதனை முயற்சியை மேற்கொண்டு இருக்கிறார். அவர் கியூபாவில் இருந்து அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் வரை சுறா பாதுகாப்பு வளையம் இல்லாமலேயே கடலில் வேகமாக நீந்தி வருகிறார்.

1970 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற நீண்ட தூர நீச்சல் வீராங்கனையாகத் திகழ்ந்தவர் டயானா நியாத். இவர் நேற்று முன்தினம் கியூபா தலை நகர் ஹவானாவில் இருந்து சாதனை நீச்சலை தொடக்கியுள்ளார்.

அவர் இன்று ப்ளோரிடாவின் கீ வெஸ்ட் பகுதியை வந்தடைவார். இருநாடுகள் இடையே உறவு இல்லாத நிலையில் டயானா நீந்துவதற்கு அனுமதி அளிக்க ஒரு வருடம் ஆலோசனை நடந்தது.

டயானாவுக்கு 28 வயது இருக்கும் போது 1978ஆம் ஆண்டில் கியூபாவில் இருந்து அமெரிக்கா வரை நீந்திக் கடக்க முயன்றார். அந்த முயற்சி உரிய பலன் தரவில்லை. தனது 61 வயதில் டயானா மீண்டும் சாதனை முயற்சியைத் தொடக்கி உள்ளார்.

நீச்சல் போட்டியில் இருந்து ஓய்வுபெற்று 30 ஆண்டுகள் ஆனாலும் தனது வாழ்க்கை கனவான கியூபா அமெரிக்கா நீச்சலை இப்போது மேற் கொள்கிறேன் என டயானா பெருமிதத்துடன் கூறுகிறார்.

# அமெரிக்கா எப்போதுமே 'ஏஏஏ' நாடுதான்; ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்டன்,ஒக.10

அமெரிக்கா எப்போதுமே 'ஏஏஏ'நாடுதான் என்று அதிபர் பாரக் ஒபாமா தெரிவித்துள்ளார். அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு பேசியதாவது அமெரிக்காவின் கடன் மதிப்பீடு குறியீடு பாதுகாக்கப்பட வேண்டியதுதான். என்றாலும், அது நிதிப் பற்றாக்குறையின் காரணமாகவே சரிவடைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடியதுதான் என்றாலும், அதற்கு அரசியல் ரீதியான ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

# ஒபாமாவுக்கு அதிபர் கர்சாய் தொலைபேசியில் ஆறுதல்

நியூயோர்க்,ஒக.10

ஆப்கானிஸ்தானில் கடந்த 6 ஆம் திகதி நடந்த ஹெலிகாப்டர் விபத்தில், நேட்டோ படையினர் 30 பேர் உயிரிழந்தது வருத்தம் அளிக்கிறது. தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில், அமெரிக்காவுடன் இணைந்தே செயற்படுவோம் என, ஆப்கன் அதிபர் ஹமீத் கர்சாய், அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் தொலைபேசியில் ஆறுதல் தெரிவித்தார்.

# லண்டனில் தொடரும் கலவரம்; கடைகள், வாகனங்கள் தீக்கிரை

லண்டன்,ஒக.10

பிரிட்டன் தலைநகர் லண்டனில்,பொலிஸாரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் ஏற்பட்ட கலவரம் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

நகரின் பல்வேறு இடங்களில், கொள்ளை, மோதல்கள் தொடர்கின்றன. ஏராளமான வாகனங்களும் கடைகளும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. இதுவரையிலும், 160 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது ''21ஆம் நூற்றாண்டில், பிரிட்டனில் நடந்த முதல் கலகம்'' என, பிரிட்டன் பத்திரிகைகள் இச்சம்பவங்களை வர்ணித்துள்ளன.

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய்வர்கள் வசிக்கும் லண்டனின் வடக்குப் பகுதியில் உள்ள டொட்டன்ஹாம் பகுதியில் முதலில் இந்த வன் முறை ஏற்பட்டது.16 வயது சிறுமியை பொலிஸார் கண் மூடித்தனமாகத் தாக்கியதாலும், மார்க் டுக்கான்(29) என்ற இளைஞர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாலும் இந்த வன்முறை ஏற்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த சுமார் 300 பேர் பொலிஸ் நிலையம் முன் திரண்டு நீதி கேட்டு போராட்டம் நடத்தினர். அவர்களை பொலிஸார் பலப்பிரயோகம் செய்து கலைத்த போது, கலவரம் மேலும் பரவியது.

சனிக்கிழமை இரவு பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய கலவரக்காரர்கள், கட்டடங்களுக்கும் வாகனங்களுக்கும், கடைகளுக்கும் தீ வைத்தனர். இதில் ஏராளமான பொலிஸார் காயமடைந்தனர். பல கோடி மதிப்புள்ள பொருள்கள் சேதமடைந்தன.

இந்தக் கலவரம் நேற்று முன்தினம் என்பீல்ட், பரிக்ஸ்டன், டால்ஸ்டன், இலிங்டன் வால்தம்ஸ்டவ் ஆகிய இடங்களுக்கும் பரவியது. இங்கும் ஏராளமான கடைகள் சூறையாடப்பட்டு தீ வைக்கப்பட்டன. ஏராளமான வாகனங்கள் எரிக்கப்பட்டன. ஒக்ஸ்போர்ட் கிறிஸ்தவ தேவாலயமும் தாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டத்தில் இன்று பாடும் மீன்- றோயல் மோதல்

யாழ்ப்பாணம், ஒக.10

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக உரும்பிராய் சென். மைக்கல் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு.யூட் நிக்சன் அடிகள் கலந்துகொள்வார். (த-23)



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலைஅணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்ற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீரர்களுடன் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண். தயாளன், வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள். (த-86)

# ஜொலிஸ்ரார் நடத்தும் ‘20- 20’ கிரிக்கெட்

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் ‘20- 20’ கிரிகெட் போட்டி அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

போட்டிக்கான நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் அழைக்கப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளைப் போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# ஸ்கந்தா 2 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக.10

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும்15 வயதினரிடையேயான மிகவும் பரபரப்பான துடுப்பாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை 2 விக்கெட்டுக்களால் வென்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மகாவித்தியாலய அணி முதலிலே துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. 27.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டுமே இந்த அணியால் பெற முடிந்தது. இந்த அணியின் துடுப்பாட்டத்தில் எஸ்.நிருசாந்த் 7 பவுண்டரிகளுடன் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஸ்கந்தா அணியில் சுழல் பந்து வீச்சாளர் கே.கதியோன் 9.5 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 95 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி 27 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஸ்கந்தாவின் துடுப்பாட்டத்திலும் கை கொடுத்த கே. கதியோன் 5 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தார். கே. சயந்தன் 3 பவுண்டரிகளுடன் 13 ஓட்டங்களைப் பெற்றார்.

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் பந்து வீச்சில் கே. ஜெயதர்சன் 9 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கட்டுக்களையும் எஸ். தினேசன் 9 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். (த-55)

# வலி.கிழக்குப் பிரதேச சபை இறுதிப் போட்டிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக.10

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினரால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையேயான 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் வலி.கிழக்கு பிரதேச சபை அணி தம்மை எதிர்கொண்ட காரைநகர் பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை மற்றும் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (த)

# சிந்துஜா இரண்டாமிடம்



மாகாண மட்ட மெய்வல்லுநர்போட்டியில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஈட்டி எறிதலில் பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி மாணவி சிறிதரன் சிந்துஜா இரண்டாம் இடத்தைப் பெற்றார். (த-190)

# விசுவமடு மாகாவித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி.வடக்கு, ஒக .10

வடமாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை மட்டத்தில் விளையாட்டின் தரத்தை மேம்படுத்தும் வகையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் செயற்பாடுகள் வட மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த விசுவமடு மகா வித்தியாலயத்துக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாடசாலை இடம் பெயர்வுக்கு உள்ளாகி தற்போது இயங்கத் தொடங்கிய நிலையில் விளையாட்டு உபகரணங்களுக்குப் பற்றாக் குறை காணப்படுகின்றது. பல நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையில் விளையாட்டு உபகரணங்களுக்கான பற்றாக்குறை உள்ள போதும் மாணவர்கள் விளையாட்டில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (த-86)

# பெரு விளையாட்டுக்களில் வலயங்கள் பெற்ற புள்ளிகள்

வலி.வடக்கு, ஒக. 10

வடமாகாண கல்வித் திணைக்கள மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளில் வலயங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விபரங்கள் வருமாறு:

வலிகாமம் கல்வி வலயம் (390 புள்ளிகள்), யாழ்ப்பாணம் கல்வி வலயம் (300 புள்ளிகள்), வடமராட்சி கல்வி வலயம் (225 புள்ளிகள்), தீவகக் கல்வி வலயம் (25 புள்ளிகள்).

யாழ். மாவட்டம் மொத்தமாக 940 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

வவுனியா கல்வி வலயம் (55 புள்ளிகள்), வவுனியா தெற்கு கல்வி வலயம் (40 புள்ளிகள்) வவுனியா மாவட்டம் மொத்தமாக 95 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

மன்னார் கல்வி வலயம் (50 புள்ளிகள்), முல்லைத்தீவு கல்வி வலயம் (10 புள்ளிகள்).

வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில் மூன்று கல்வி வலயங்கள் பெரு விளையாட்டுக்களில் புள்ளிகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. (த-86)

# அரை மரதன் ஓட்டப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் பதுளையில்

வலி.வடக்கு, ஒக. 10

கல்வி அமைச்சு அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் அரை மரதன் ஓட்டப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி பதுளை நகர மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆண், பெண் இரு பாலாருக்கும் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கடந்த பல வருடங்களாக அரை மரதன் ஓட்டப் போட்டி தென்னிலங்கையில் இடம்பெற்று வருகின்றது. எனினும் இவ்வாண்டு முதல்முறையாக வடமாகாண ஆண்கள், பெண்கள் இந்த அரை மரதன் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட மாகாண அரை மரதன் ஓட்டப் போட்டிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வீரர்கள், வீராங்கனைகள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# வவுனியா தெரிவு அணியை வென்றது வல்வெட்டி கழுகுகள்



யாழ்ப்பாணம், ஒக.10

வவுனியா தெரிவு அணிக்கும் வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான நட்பு ரீதியான ‘20-20’ கிரிக்கெட் ஆட்டத்தில் கழுகு விளையாட்டுக் கழக அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை நெற்கொழு பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கழுகுகள் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகு விளையாட்டுக் கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றனர். ஜீவகன் 29 ஓட்டங்களையும் தனஞ்சயன் 24 ஓட்டங்களையும் முல்லைத்தீவன் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வவுனியா தெரிவு அணி சார்பாக ரகுமான், றசாதின் ஆகியோர் முறையே 3 விக்கெட்டுக்களையும் கலைச்செல்வன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா தெரிவு அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

றிசாப் 66 ஓட்டங்களையும் பவுதீன் 34 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கழுகுகள் விளையாட்டுக் கழகம் சார்பாக ஜீவகன் 4 விக்கெட்டுக்களையும் கோகுலன், துளசி ஆகியோர் முறையே 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய ஆட்டங்கள் ஆரம்பம்

கொழும்பு, ஒக. 10

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டமும், இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டமும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி இரண்டு 'ரி-20' ஆட்டங்கள், 5 ஒரு நாள் ஆட்டங்கள், 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடவுள்ளது. முன்னதாக இடம்பெற்ற இரண்டு 'ரி-20' ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணி தோல்வியைத் தழுவியது. இந்த நிலையில் ஆஸி அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் முதலாவது ஒரு நாள் ஆட்டம் பல்லேகலவில் இன்று பி.ப 2.30 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஆரம்பமாகி பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

**மலிங்க, தரங்க உள்வரவு**

இலங்கை அணிக்கு லசித் மலிங்க மற்றும் உபுல் தரங்க ஆகியோர் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அணித்தலைவராக டில்ஷானும், உபதலைவராக அஞ்சலோ மத்தியூஸும் செயற்படவுள்ளனர். ஆஸ்திரேலிய அணிக்கு மைக்கல் கிளார்க் தலைமை தாங்கவுள்ளார். பொன்டிங் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட அதே நேரம் 'ரி-20' அணித்தலைவராக செயற்பட்ட வையிட் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்திய அணி அங்கு விளையாடி வருகின்றது. முன்னதா 4 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. முதலிரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்தின் நெட்டிங்ஹாமில் இலங்கை நேரப்படி இன்று பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. இன்று நடைபெறும் இந்த டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றாலோ, சமன் செய்தாலோ இந்திய அணியினால் கிண்ணத்தை கைப்பற்ற முடியாமல் போகும். அத்துடன் டெஸ்ட் அரங்கின் முதலிடத்தையும் பறிகொடுக்க வேண்டி ஏற்படும். (15)

# சாதித்தது சிம்பாப்வே!



ஹராரே, ஒக. 10

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் ஆட்டத்தில், சிம்பாப்வே அணி 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. இதன்மூலம் சிம்பாப்வே அணி 1-0 என்று டெஸ்ட் தொடரை கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் ஆட்டம் ஹராரேயில் நடந்தது. முதல் இன்னிங்சில் சிம்பாப்வே 370, பங்களாதேஷ் 287 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் சிம்பாப்வே அணி 5 விக்கெட்டுக்களுக்கு 291 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. பின்னர் 375 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை தொடக்கிய பங்களாதேஷ் அணி, நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களுக்கு 112 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**அபார பந்துவீச்சு:**

பங்களாதேஷ் அணிக்கு அஷ்ரபுல் (39) ஓரளவு ஆறுதல் அளித்தார். அடுத்து களமிறங்கிய மகமுதுல்லா (11), அணித்தலைவர் சகிப் அல் ஹசன் (6) வந்த வேகத்தில் நடையை கட்டினர். ரஹிம் (28) பெரிய அளவில் சோபிக்கவில்லை.

அடுத்து வந்த அப்துர் ரசாக், அதிரடியாக ஓட்டங்கள் குவித்தார். இவர் 17 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் உட்பட 43 ஓட்டங்கள் எடுத்து, சிக்கம்புரா பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய ஷபியுல் இஸ்லாம் (7), ரோபியுல் இஸ்லாம் (12) ஏமாற்ற, பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 244 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது.

இரண்டாவது இன்னிங்சில் சதம் கடந்து அசத்திய சிம்பாப்வே வீரர் பிரண்டன் ரெய்லர், ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டி கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஹராரேயில் நடக்கின்றது.

**ஆறு ஆண்டுகளுக்கு பின்...**

சிம்பாப்வே அணி, கடைசியாக கடந்த 2005 இல் இந்தியாவுக்கு எதிராக இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இந்தத் தொடரை இந்திய அணி 2-0 எனக் கைப்பற்றியது. தொடர் தோல்விகள் காரணமாக, கடந்த 2005 இல் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து தானாகவே விலகியது சிம்பாப்வே அணி. சுமார் 6 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் டெஸ்ட் ஆட்டத்துக்கு திரும்பிய சிம்பாப்வே அணி, பங்களாதேஷ் அணியை வீழ்த்தி, எழுச்சி கண்டது. (15)

# என் தூக்கத்தை கெடுத்தவர் முரளி

லண்டன், ஒக. 10

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில், பந்துவீச்சில் அச்சத்தை கொடுக்கும் ஒரே வீரர் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன். இவரால் என்னுடைய தூக்கத்தை பல நாள் இழந்துள்ளேன். இவருடைய பந்துவீச்சு திறமை உண்மையிலேயே அபாரமானது - இவ்வாறு இந்திய அணி வீரர் ராகுல் டிராவிட் தெரிவித்தார்.

என்னை இந்திய அணியின் பெருஞ்சுவர் என்று வர்ணிக்கின்றனர். நான் அவ்வாறு நினைக்கவில்லை.

இந்திய அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் டிராவிட் தூணாக நின்று ஆடி, அணியை இக்கட்டான நிலையில் இருந்து மீட்பதில் வல்லவர். இதனால் இவரை ரசிகர்கள் பெருஞ்சுவர் என்று அழைக்கின்றனர். இது குறித்து டிராவிட் கூறியது, அனைவரும் அழைப்பது போன்று பெருஞ்சுவராக என்னை ஒருபோதும் கருதவில்லை. தற்போது, ஒரு சில அனுபவ வீரர்கள் 'ரி-20' ஆட்டத்தில் செயற்படுவது போன்று, அதிரடி ஆட்டத்தை கொடுக்க முயற்சிக்கின்றனர். இது டெஸ்ட் ஆட்டத்திற்கு உகந்தது அல்ல.

ஒரு நாள், 'ரி-20', டெஸ்ட் ஆட்டம் என்று எந்த வகையான போட்டியாக இருந்தாலும் அதனை சவாலாக எடுத்து கொண்டு செயற்பட்டால் சாதிக்கலாம். இது போன்று வெவ்வேறு வடிவத்திலான ஆட்டங்கள் வீரர்களை பாதிக்காது. டெஸ்ட் ஆட்டங்களுக்கு ரசிகர்கள் மத்தியிலான ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது என்ற கருத்தை என்னால் ஏற்க முடியாது. ஏனென்றால் இந்தியாவில் 40,000 முதல் 45,000 மக்கள் வரை அமர்ந்து பார்க்கக் கூடிய கிரிக்கெட் மைதானங்கள் உள்ளன. இது முழுவதும் நிரம்பி வழிய வேண்டும் என்றால் முடியாது.

டெஸ்ட் ஆட்டம் நீண்ட நேரம் நடப்பதால், அனைவரும் தங்களுடைய வேலையினை விட்டுவிட்டு வந்து கிரிக்கெட் பார்க்க வரமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய ஓய்வு நேரத்தில் டெஸ்ட் ஆட்டத்தினை நிச்சயமாக கண்டு ரசிப்பார்கள். நான் கிரிக்கெட்டில் நுழைந்த போதெல்லாம் வீரர்கள் பெரிய அளவில் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. தற்போதுள்ள இளம் வீரர்கள் வளர்வதற்கு நிறைய வழிகள் உள்ளன.

குழந்தை தனமான மனதோடு ஆட்டங்களில் பங்கேற்று வருவதால் தான் 'மாஸ்டர் துடுப்பாட்ட' வீரர் சச்சின் இன்று வரை சாதித்து வருகின்றார். இருபது ஆண்டை கடந்து கிரிக்கெட் ஆட்டங்களில் இவர் அசத்தி வருகின்றார். இது சாதரணமான விடயம் அல்ல. மிகவும் கடினமான ஒன்று.

போட்டிகளுக்காக சிறப்பான முறையில் தயாராகுவார். நாளுக்கு நாள் அவருடைய துடுப்பாட்ட திறனில் மாறி கொண்டே வருகிறது. போட்டியின் தன்மையை மாற்ற கூடிய வீரர். ஒவ்வொரு முறையும் மாறுபட்ட ஆட்டத்தை வெளிப்படுத்தி பந்து வீச்சாளர்களை திணற செய்து, வெற்றி காண்பார் என்று டிராவிட் தெரிவித்தார். (15)

# ஆடிய ஆட்டம் போதும்

இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்குப் பின்னர் இந்திய வீரர் ராகுல் டிராவிட், ஒருநாள் மற்றும் 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற உள்ளார். இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, நான்கு டெஸ்ட், ஒரே ஒரு 'ரி-20' மற்றும் ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. 'ரி-20' மற்றும் ஒரு நாள் தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதில் அனுபவ வீரர் ராகுல் டிராவிட் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுவரை இவர், 339 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்று 12 சதம், 82 அரைசதம் உட்பட 10,765 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடைசியாக இவர், கடந்த 2009 இல் ஜோகனஸ்பர்க் நகரில் நடந்த சம்பியன்ஸ் தொடருக்கான ஆட்டத்தில், மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக விளையாடினார். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்குப் பின்னர் சர்வதேச ஒரு நாள் மற்றும் 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற போவதாக தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து டிராவிட் கூறியதாவது:**

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு நாள் தொடருக்கு தேர்வு செய்யாத என்னை, இங்கிலாந்துக்கு எதிராக தேர்வு செய்யப்பட்டிருப்பது ஆச்சரியம் அளிக்கின்றது.

**"அனுபவ வீரர் ராகுல் டிராவிட் இதுவரை இவர், 339 ஒரு நாள் ஆட்டங்களில் பங்கேற்று 12 சதம், 82 அரைசதம் உட்பட 10,765 ஓட்டங்கள் எடுத்துள்ளார்"**

இந்தத் தொடருக்குப் பின்னர், சர்வதேச ஒருநாள் மற்றும் 'ரி-20' கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து முறைப்படி ஓய்வை அறிவிக்க உள்ளேன். தொடர்ந்து டெஸ்ட் ஆட்டங்களில் கவனம் செலுத்த விரும்புகிறேன். ஓய்வை அறிவிக்க இருப்பதால், இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை வெற்றியுடன் முடிக்க முயற்சிப்பேன். இதேபோல எஞ்சிய டெஸ்ட் ஆட்டங்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி, தொடரை ச[illegible] இவ்வாறு ரா[illegible] (15)

# எங்கள் ரசிகர்களால் உபத்திரவமே!

லண்டன், ஒக. 10

இந்திய ரசிகர்களுடன் பிரவீன்குமார் மோதிக் கொண்ட சம்பவம், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி முதல் கட்டமாக நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. சர்ச்சைகள் நிறைந்த இந்தத் தொடரில், முதலில் இந்தியாவின் லக்ஸ்மன் தனது மட்டை மீது 'வசலின்' தடவியதாக வீண் புகார் தெரிவித்தனர். பின்னர் இங்கிலாந்து வீரர் இயன் பெல்லின் 'ரன் அவுட்' திரும்பப் பெறப்பட்டது.

இந்த வரிசையில் புதிதாக, இந்திய வேகப் பந்து வீச்சாளர் பிரவீன் குமார் சர்ச்சையில் சிக்கியுள்ளார். சமீபத்திய நோர்த் டன்ஷயர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டம் முடிந்து இந்திய வீரர்கள் பேருந்தில் ஏறியுள்ளனர். அப்போது அங்கு திரண்ட இந்திய வம்சாவளி ரசிகர்கள், இந்திய வீரர்களை கிண்டல் செய்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த பிரவீன்குமார் பேருந்தில் இருந்து வெளியே பாய்ந்துள்ளார்.

கையில் மட்டையுடன் காணப்பட்ட இவரை, சுரேஷ் ரெய்னா சமாதானம் செய்துள்ளார். பின்னர் தனது இருக்கையில் இருந்து எழுந்த முனாப் பட்டேல், பாதுகாவலர்களிடம் ரசிகர்களின் அவமரியாதையான செயல் குறித்து முறைப்பாடு தெரிவித்துள்ளார். இந்த நேரத்தில் மீண்டும் பேருந்தை விட்டு வெளியே வந்த பிரவீன் குமார் சம்பந்தப்பட்ட ரசிகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். உடனே பாதுகாவலர்கள் தலையிட்டு பிரவீன் குமாரை சமாதானப்படுத்தியுள்ளனர்.

தொடர்ந்து இந்திய அணியின் பாதுகாப்பு குழு மேலாளர் மற்றும் ரசிகர்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. பின்னர் போதையில் இருந்த அந்த ரசிகர் பாதுகாவலர்களால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து இன்னொரு விதமாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தில் ஏற முயன்ற போது, சம்பந்தப்பட்ட அந்த ரசிகர், இந்திய வீரர்களை புகைப்படம் எடுத்துள்ளார். அப்போது பிரவீன் குமார் தவறான சைகை காட்டியுள்ளார். இதனால் ரசிகர் மற்றும் பிரவீன் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் பேருந்தை விட்டு இறங்கிய பிரவீன், அந்த ரசிகரின் 'கொலரை' பிடித்து இழுத்து பரபரப்பு ஏற்படுத்தியதாக தெரிகின்றது. இது குறித்து இந்திய வம்சாவளி ரசிகர் ஒருவர் கூறுகையில், பிரவீன் குமார் நடந்து கொண்ட விதம் சரியல்ல. ரசிகர்கள் திட்டினால், அது பற்றி பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறைப்பாடு கொடுத்திருக்கலாம். அதை விட்டு இரண்டு முறை பேருந்தில் இருந்து வெளியே பாய்ந்து சண்டைக்கு வந்ததை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி ஜஸ்மின் நிர்மலாணந்தராணி

உடுவிலைப் பிறப்பிடமாகவும், இல. 15A, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜஸ்மின் நிர்மலாணந்தராணி நேற்று (09.08.2011) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Rev பெஞ்ஜமின் கனகரட்ணம், கிரேஸ் இவஞ்ஜலின் புஸ்ப ரத்தினம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், திருமதி நித்தியானந்தராணி, தனரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், N.R.தனரத்தினம்(இளைப்பாறிய சாலை முகாமையாளர் இ.போ.ச) அன்பு மைத்துனியும், திருமதி இவான்ஜனின் பசில் சுரேந்திரன் (ஆசிரியை, யா, புனித சென். பௌடிக் அ.த.க வித்தியாலயம், நல்லூர்), ஜோ.தனரஞ்சன்(வ.மி.போ.சபை கோண்டாவில்), எட்வின் தனறோஷான் ஆகியோரின் அன்புப் பெரிய தாயும், பசில் சுரேந்திரனின்(ஆள் பதிவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான மேரி தம்பிரத்தினம், சாமுவேல், சின்னத்துரை துரைசிங்கம் (முன்னாள் அதிபர், யாழ்/அச்சுவேலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பெறா மகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2011) மு.ப 10 மணிக்கு யாழ். அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஏழாலை புனித இசுதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
N.R.தனரத்தினம்,
(இளைப்பாறிய சாலை
முகாமையாளர், காரைநகர்).

இல.15A, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## முருகேசபிள்ளை சடாச்சரம்

(சாந்தலிங்கம்)



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரம் சிற்பனையைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய முருகேசபிள்ளை சடாச்சரம் (சாந்தலிங்கம்) 08.08.2011 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை -இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை-பவளவல்லியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசேஸ்வரியின்(சாரதா) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
மகன்-ச.ஐங்கரன்.

# தவறிவிட்டது

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் அடையாள அட்டை, சாதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கு.றஜீவ்குமார். லங்கா மோட்டர்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0770204218, 0772269867

# காணி/வீடு புனரமைத்தல்

எமது சங்கத்துக்குரிய புனரமைக்கப்பட வேண்டிய காணியும் கட்டடமும் (தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அண்மையில்) ஒப்பந்த அடிப்படையில் வழங்க உள்ளோம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்புவோர் பின்வரும் விலாசத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

வடமாகாண புற்றுநோய் எயிட்ஸ்
நோய்த் தடுப்புச் சங்கம், சென்ரல்
நேசிங் ஹோம், இல.350, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன்.
தலைவர்.

# வீடு வளவு விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் கொடிகாமம் சந்திக்கு அண்மையாகவும் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கு முன்பாகவும் வீட்டுடன் 15 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு- 0773494427

# Wanted

Multinational Company (பல்தேசிய நிறுவனம்)
Name Call Educational
Technologies house Vacancies for
**Trainee Marketing Executive**
**Marketing Executive**
*A/L qualified*
Age bellow 30 (Male/Female)
Walking Interview on 10th to 13th &
August -2011

***No.186, 1st Floor,***
***Kasthooriyar Rd, Jaffna.***
***More Information Contact- GAnthany,***
*0773434823, 0215671130*

# தவறிவிட்டது

24-1200 இலக்கமுடைய வாகனத்தின் மணல் பொமிற்றும், கூலித் துண்டுகளும் 4ஆம் குறுக்குத்தெரு, மகேஸ்வரி நிதியம், வேம்படி வீதியில் 8ஆம் திகதி தொலைந்து விட்டது. இதனைக் கண்டவர்கள் தயவுசெய்து 0777729463 இவ் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளவும். அல்லது இலங்கை போக்கு வரத்து சபை யாழ்ப்பாணம் ரிக்கற் பதிவு [புக் பண்ணும்] காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

# மரண அறிவித்தல்



## அமரர். திருமதி. சாரதாதேவி இராமதாஸ்

மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி இராமதாஸ் 24.07.2011 அன்று இந்தியாவில் அகால மரணமானார். அன்னார் வேலுப்பிள்ளை - இராமதாஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தப்பு, நல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும் திஷாந்தினி, சசிசேகர், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, ஞானசேகரம் (ஆசிரியர் - கொ. விவேகானந்தா கல்லூரி), குணசேகரம் (ஜேர்மனி), நந்தகுமாரன் (ஊழியர் - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை), மண்டலேஸ்வரன் (ஜேர்மனி), தயாநிதி (ஜேர்மனி), நவேந்தினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்லையா, தங்கேஸ்வரி, ஜெயந்தி (ஜேர்மனி), சித்திரா, ஜெயா (ஜேர்மனி), கண்ணன் (ஜேர்மனி), கோமளராஜா (கனடா), ஆகியோரின் மைத்துனியும் ஆவார். **அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.08.2011 இன்று புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு** Wiesenstr - 50, 32251 Bünde, Germany **இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

**தகவல் : மாமா**
**த.வேலுப்பிள்ளை (நல்லையா)**
**திகிரி, புலோலி வடகிழக்கு**
**பருத்தித்துறை**

# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகலிங்கம் அன்னம்மா



மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கேணியடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் அன்னம்மா கடந்த (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகேசு சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரலிங்கம், காலஞ்சென்ற ஸ்ரீதரன், சச்சிதானந்தன் (சுவிஸ்), கலாநிதி (சுவிஸ்), உருத்திரா (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்), வசந்தகுமாரி (கனடா), இராஜகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் மலர்விழி, காஞ்சனா (சுவிஸ்), கந்தலிங்கம் (யோகன் - சுவிஸ்), தருமரத்தினம் (கொழும்பு), சர்மினி (சுவிஸ்), நாகராஜா (கனடா), மோகனபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் றதீஸ்வரன், தர்சன், விருட்சிகா, தனுசன், சுலக்சன், ஸ்ரீவித்தியா, ராஜ்குமார், அஜந்தா, அபிநயா, அனுசிகன், அபர்ணன், கஜேந்தினி, பிரதீபன், கஜீபன், ஜெயலக்சன், பரத், சுவேதா, நர்தத்ஜா, நாகரூபன், துர்க்கா, மோனிஷன், ஜோதிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மோவிகாவின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற செந்தமிழ்ச்செல்வன் மற்றம் மாலினிதேவி, காலஞ்சென்ற கலைச்செல்வன் மற்றும் வதனி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திருநடராஜா, கன்னிகாபரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபூசணி மற்றும் மயூரதாஸ், தேவராணி, மதியழகன், தயாநிதி ஆகியோரின் அன்புச் சிறிய தாயும் காலஞ்சென்ற கலா, அன்னபூபதி, சிவப்பிரகாசத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி மேற்கு,
கொக்குவில்.

**தகவல்:**
**ச.குமாரலிங்கம் (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரை லண்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

''கடைகளை உடைத்து சிகரெட்டுக்கள் இனிப்புகளை எடுத்து வீதியில் நிற்பவர்களுக்கும் செல்பவர்களுக்கும் கொடுக்கிறார்கள். எனது கடை உட்பட நான்கைந்து கடைகள் இப்படி உடைக்கப்பட்டுவிட்டன'' என்றார் நகரில் கடை வைத்திருக்கும் ஈழத்த தமிழர் ஒருவர்.

நகைக்கடைகளையும் உடைத்து நகைகள் அனைத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். ''இங்கே பதற்றம் அதிகமாக இருக்கிறது. நிலைமை கட்டுக்குள் வந்த பின்னரும் கூட வேலைக்கு வருவதற்குத் தமிழர்களும் அஞ்சுகிறார்கள் என்றார் அந்த வர்த்தகர்.

வன்முறை அதிகரித்ததன் காரணமாக விடுமுறைக்காகச் சென்றிருந்த பிரிட்டிஷ் பிரதமர் அவசரமாக நாடு திரும்பியுள்ளார். கலவரங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 334 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வன்முறைச் சம்பவங்களினால் அப்பாவி பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் மற்றும் அவர்களின் சொத்துகள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். வன்முறைகளைப் பயன்படுத்தி நகரின் பல இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சில இடங்களில் கொள்ளையர்கள் தம்மிடம் சிக்குபவர்களின் ஆடைகள் முதற்கொண்டு அனைத்தையும் உருவி அவர்களை நிர்வாணப்படுத்தி விட்டே செல்கின்றனர் என்ற தகவல்கள் சமூக இணையத்தளங்களான 'டுவிட்டர்' போன்றவற்றில் பரவுகின்றன. ஆனால் அவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

லண்டன் ரெட்ணம்காம் பகுதியில் வெடித்த கலவரம் குரொய்டன் பகுதிக்கும் பரவியுள்ளது. அதனை அண்மித்த பகுதிகளான டூட்டிங், மிச்சம், பேளி ஆகிய பகுதிகளுக்கும் கலவரம் பரவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் பெருமளவான ஆபிரிக்கர்கள் வாழ்கிறார்கள். இந்தப் பகுதிகளில் தமிழர்களும் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வருவதால் அவர்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தமது வீடுகளும் சூறையாடப்படலாம் என்ற அச்சம் காரணமாக பல தமிழர்கள் தமது உடைமைகளுடன் வெளியேறி (இடம்பெயர்ந்து) உறவினர் வீடுகளில் தங்க ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. (மற்றொரு செய்தி 23ஆம் பக்கத்தில்) (உ)

## அவசர காலச் சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேச விடுதலைப்புலி ஆதரவாளர்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, சில ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட சில நாடுகளில் இயங்குகின்ற இலங்கை அரசுக்கு எதிரான அரசசார்பற்ற நிறுவன, அமைப்புகள் இதில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக வணக்கத்துக்குரிய எஸ்.ஜே. இம்மானுவேல் (GTF - Global Tamil Forum), வீ.ருத்ரகுமாரன் (TGTE - Transnational Government of Tamil Eelam) சுரேன் சுரேந்திரன் (BTF - British Tamil Forum) மற்றும் நெடியவன் குழுவினர் (TNC - Tamil National Council) ஆகிய அமைப்புகள் முழுமூச்சாக செயற்படுகின்றன.

அதேவேளை, தென் இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் குழுவினர் மக்களை ஒன்றுதிரட்டி, இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்குமாறு பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிரான பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த சனல் - 4 தொலைக்காட்சி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச சமூகம் ஆகியவற்றுக்குச் சிறந்த பதிலை கடந்த முதலாம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பாதுகாப்பு அமைச்சு வழங்கியது.

மனிதாபிமான நடவடிக்கை ஆய்வு அறிக்கை என்ற விடியோவை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டதோடு, அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. இவற்றை தயாரிப்பதற்கு அரசுக்கு நீண்டகால ஆய்வில் ஈடுபட காலம் எடுத்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் இல்லாதபோதிலும், அவர்களின் வெடிபொருள்களை மீட்பதற்கும், பொதுமக்களிடையே மறைந்துள்ள பயங்கரவாதிகளைக் கண்டுபிடிப்பதற்கும் அவசரகாலச் சட்டம் யுத்தம் நிறைவடைந்தபோதிலும் நீடிக்கப்பட்டு வந்தது. தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

அத்துடன், ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் ஜயஸ்ரீ மஹாபோதி ஆகிய வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களை அடுத்து அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவசரகாலச் சட்டம் தேவைப்பட்டது.

இதேவேளை, இறுதிக்கட்ட மனிதாபிமான நடவடிக்கைகளின்போது, விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் பல்வேறு வழிகளில் வெளிநாடுகளுக்கும், இலங்கையின் தென் பகுதிகளுக்கும் விரைந்தனர். எனினும், அவர்கள் பல்வேறு வழிகளில் தங்களது நடவடிக்கைகளை தற்போதும் மேற்கொண்டே வருகின்றனர். புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளைத் தொடர்புகொள்ள அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சித்தனர்.

எனவே, மேற்கண்டவாறு கூறிய விடயங்களைக் கவனத்தில்கொண்டு அனைத்து மக்களுக்காகவும் சட்டம் மற்றும் நீதி, சமாதானம், பாதுகாப்பு என்பவற்றையும், அரச சொத்துகள் பாதுகாப்பு என்பதற்காகவும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்குமாறு இப்பிரேரணை மூலம் கேட்டுக்கொள்கிறோம். - இப்படி பிரதமர் தெரிவித்தார். (உ-சி)

## சுடரொளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனின் மைத்துனரும் *உதயன், சுடர்ஒளி* பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான ந.வித்தியாதரனின் இளைய சகோதரர்களில் ஒருவருமாவார்.

திருகோணமலை இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான ரவிதரன் தனது துணைவியார் உமா மற்றும் இரு பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார். (அ-சி)

## அரசு அரங்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டும். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி யுத்தம் முடிவுற்றதாக அரசு பிரகடனப்படுத்தியது. அன்றுமுதல்தான் எமது இனம் திட்டமிடப்பட்டு ஒழிக்கப்படுகின்றது. இன அடையாளங்கள் ஒழிக்கப்படுகின்றன. தமிழ்ப் பிரதேசம் திட்டமிடப்பட்டு சிங்கள, பௌத்த மயப்படுத்தப்படுகின்றது. இது போர்க் குற்றச்சாட்டுகளைவிட மிகவும் பயங்கரமானது.

நாம் தனிப்பட்ட முறையில் இராணுவத்தை குறை கூறவில்லை. இராணுவமும், அரசும் ஜனாதிபதியின் தலைமையிலேயே இயங்குகின்றன. ஜனாதிபதியே பொறுப்புக் கூறவேண்டும்.

இறுதி யுத்தத்தின்போது முல்லைத்தீவில் 4 இலட்சத்து 20 ஆயிரம் பேர் இருந்தனர் என்று அரச பதிவுகள் சான்று பகிர்கின்றன. ஆனால், அரசிடம் சரணடைந்தவர்களில் 3 இலட்சத்து 17 ஆயிரம் பேர் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பதிவுகளின்படியே பார்த்தால் எஞ்சியுள்ள ஒரு இலட்சத்து மூவாயிரம் பேரும் எங்கே என்று கேட்கின்றேன்.

இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்று கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜே சிங்க, இந்த ஒரு லட்சத்து மூவாயிரம் பேரும் எங்கே இருக்கின்றனர் என்பதைக் கண்டுபிடித்துக் கொடுப்பாரா என்று சவால் விடுக்கின்றேன்.

எமது நிலம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. கடல் வளம் தென்பகுதி சிங்கள மீனவர்களால் சூறையாடப்படுகின்றது.

எமது மண்ணில் அரைவாசிக்கும் மேல் இராணுவமயமாக் கப்பட்டுள்ளது. சம்பூர் மக்கள் இன்றும் தமது சொந்த மண்ணில் கால்பதிக்க முடியவில்லை.

இப்படியான நிலையில்தான் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெற்றன. எமது மக்கள் தொடர்ச்சியாக அறுபது ஆண்டுகளாக ஏற்பட்டுவரும் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தி உள்ளனர்.

இந்த அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் கருணா அம்மான் (முரளிதரன்) கூட தமிழ் மக்கள் அபிவிருத்தியை அல்ல, உண்மையான அரசியல் தீர்வையே விரும்புகின்றனர் எனக் கூறுகிறார்.

இதனை ஜனாதிபதி பொறுப்புடன் அவதானித்து செயல்படவேண்டும் என்றும் கூறியுள்ளார். அதனைப் பாராட்டுகின்றேன்.

எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எல்லாம் வெறும் பேச்சில் மட்டுமே. ஆனால், தேர்தல் முடிந்த சூட்டோடு உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். ஆனால், இன்றுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதுவரை எத்தனை ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; தாக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், சிவமகாராசா ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். அரசு இக்கொலைகளுடன் தொடர்புடைய ஒருவரையாவது கைது செய்துள்ளதா என்று கேட்கிறேன்.

கிளிநொச்சியில் எமது இளைஞர் அணித் தலைவர் தாக்கப்பட்டார். இந்த நிலைமைகளைப் பார்த்தால் அரசே ஜனநாயகத்தை ஒழித்துக்கட்ட முனைகின்றது.

இவற்றுக்கு எல்லாம் பாதுகாப்பதற்காகவே அரசு அவசரகாலச் சட்டத்தை நீடித்துக்கொண்டே செல்கின்றது. இதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம் என்றார் மாவை சேனாதிராஜா. (உ-சி)

## கருணாநிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங் கைத் தமிழரின் விடுதலையை விரும்புகிறது என்பதை அவர் நன்றாக அறிவார்'' எனக் கருணாநிதி கூறியுள்ளார்.

போராட்டத்தின் மூலமாக உரிமையைப் பெற விரும்பும் மக்கள் அவர்களின் அரசியல் உரிமையை நிராகரிப்போரின் கருத்துகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் இனப்படுகொலையைத் திமுக ஆதரிக்கவில்லை எனக் கூறியுள்ள கருணாநிதி, போரில் மக்கள் கொல்லப்படுவது சகஜம் என்று சொன்ன அதிமுகவைப் போன்றதல்ல திமுக என்றும் கூறினார். (உ)

## போர்க்குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுதலுக்குமான சாதகமான நகர்வாக ஐ.நா. நிபுணர் குழுவை ஏற்றுக்கொள்ள முடியும் என்று நாம் நம்புகின்றோம்'' என்றும் ரோனர் தெரிவித்தார். (உ)

## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வெங்கடேஷ் சுவாமிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுனர்
கைரேகை, ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தை பாக்கியம், வேறு என்ன பிரச்சினை இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.
தொடர்பு இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0773741117, 0771656527
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை. கட்டணம்- 101/-

## காணி விற்பனைக்கு

ஒட்டுமடச் சந்திக்கு அருகில் மானிப்பாய் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் 5½ பரப்பு நெற் காணி விற்பனைக்குண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு- 0774030493

## வீடுகள் விற்பனைக்குண்டு

தெகிவளையில் 2nd lane இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொடர் மாடியில் 750sqft 2B/R, 2Bath/R கொண்ட வீடு மற்றும் WINDSOR AVENUE இல் 520sqft 1B/R, 1Bath/Rவீடுகள் விற்பனைக்குண்டு.
மேலதிக விவரங்களுக்கு 0727222378

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (6603)

## ENGLISH MEDIUM

உயிரியல் A/L
தனி/ குழு
பிரத்தியேக வகுப்பு
0770236743

## கண்ணீர் காணிக்கை

சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையின் உப அதிபர்

### ச.சபாநாதன்



அவர்களின் திடீர் மறைவை யொட்டி எமது ஆழ்ந்த கவலையை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை
மைதான நலனோம்பு சபையினரும், பாடசாலை சமூகமும்.

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



கல்விப்புலத்தில் 33 வருடங்களுக்கு மேலாக மாணவர்களின் உயர்வாகத் தன்னையே அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றி இன்று [10.08.2011] புதன்கிழமை மணிவிழாக் காணும் எமது கல்வியாளர்

### திரு. கந்தையா தர்மராசா

Sp.Trd in Tam, B.A, PGDE.MED,M.A

ஆசிரிய கல்வியாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய்.
அவர்களை குடும்பத்துடன் சிறப்பாக நீடூழி காலம் வாழ உளப் பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.

## விற்பனைக்கு

லிஸ்ரர் எஞ்சினுக்கு உரிய காஸ்கட் பிஸ்ரன் றிங்ஸ் செற் வீற்பனைக்கு உண்டு.
தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு0777102200

## விற்பனைக்கு

5 அந்தர் தராசு, கல்வனைஸ் பைப் மூலம் செய்யப்பட்ட கூலிங் தகரத்துடன் கூடிய செற், இரும்பு ராக்கை, முதிரைப் பலகையினால் செய்யப்பட்ட ராக்கை என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0777283811, 0770770529

## வீடு விற்பனைக்கு

தெகிவளையில் Galle Road இற்கு மிக அருகில் அமைதியானதும் பாதுகாப்பானதுமான ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள APARTMENT இல் 3 B/R, 2B/Rமற்றும் 1B/R வீடுகள் மிகவும் சாதாரணவிலையில், எளிமையான கொடுப் பனவு முறையுடன் விற்பனைக்குண்டு. முன்பதி வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு
தொடர்புகொள்க- 0727779222

## Physics Class

தனி/ குழுவாகக் கற்பிக்கப்படும்.
தொடர்பு- 0750740042

## வேலை ஆள்கள் தேவை

*ஹாட்வெயர் ஒன்றுக்கு உதவியாளர் தேவை.
* விநியோக வாகனத்துக்கு உதவியாளர் தேவை.
தகுதி: க.பொ.த சா/த / உ/த (O/L,A/L)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு- 0212230202, 0772543158

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதியில் நகரை அண்டிய பகுதியில் 4 பரப்புள்ள காணித் துண்டுகள் (4x7) விற்பனைக்குண்டு. வீடு அல்லது கடை கட்ட உகந்தது.
தொடர்பு- 0777492779, 0772250149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்

### நடேசபிள்ளை ரவிதரன்



பணியினைப் பாங்காய்ச் செய்து
பண்பினால் ஓங்கி நின்ற
குணநலக் குன்றாம்
ரவிதரனுக்கு
எங்கள் நெஞ்சம் நெகிழ்
காணிக்கைகள்.

பணியாளர்கள், உதயன் வெளியீட்டகம்.

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் நெல்லியடி- பருத்தித்துறை பிரதான வீதியில், வீதிக்குக் கிழக்குப் பக்கமாக 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714720177/0776143305

## கண்ணீர் அஞ்சலி

சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர் ச.ஐங்கரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### முருகேசபிள்ளை சடாச்சரம் -

அவர்கள் கடந்த (08.08.2011) திங்கட்கிழமை கனடா ரொறன்டோவில் இறைபதம் அடைந்தார். இவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவலர் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், ஈஞ்சடி சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

## 2011 - தரம் 5 புலமைப்பரிசில்

### பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான

மாபெரும் வெற்றித்தேர்வு இறுதி இலவசக் கருத்தரங்கு

இடம் : கோப்பாய் ஆசிரிய கலாசாலை
காலம் : 12.08.2011 (வெள்ளி)

* காலை 8.00 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை.
  வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் கல்வி வலய மாணவர்களுக்கு
* பி.ப. 1.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
  யாழ்ப்பாண கல்வி வலய மாணவர்களுக்கு

கையேடுகள், வினாப்பத்திரங்கள், கோவைகள் என்பவற்றுக்காக ரூபா 100 மட்டும் அறவிடப்படும்

**பெறுமதிமிக்க வளவாளர்களும், துறைசார்ந்த விரிவுரையாளர்களும் கலந்துகொள்வர்.**

தொடர்புகளுக்கு:
077 5388471, 077 3126807, 021 2229016, 077 9543956

**வன்னி பிரதேச மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.**

தவறாது கலந்துகொண்டு சாதனையாளர் ஆகுங்கள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### திருமதி நடேசன் சிவபாக்கியம்

மலர்வு
12.07.1933

உதிர்வு
12.07.2011

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை [11.08.2011] வியாழக்கிழமை பனிப்புலம், பண்டத்தரிப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

அம்மன் கோயிலடி
பனிப்புலம், பண்டத்தரிப்பு.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## அலுவலகம் இடமாற்றம்

வலிகிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகம் இன்று தொடக்கம் கோப்பாய் உப அலுவலக நூலக கட்டடத்திலும், ஆயுள்வேத வைத்தியசாலை நீர்வேலி உப அலுவலக கட்டடத்திலும் தற்காலிகமாக இயங்கும் என்று வலிகிழக்கு பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (எ)

## இதோ வெளிவந்து விட்டது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான இறுதிக்கருத்தரங்கும் செயலமர்வும் திருமலை எஸ்.கணேசலிங்கம் எழுதிய புதிய வெளியீடு துரிதகற்றல் வழிகாட்டி முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் [சொற்ப பிரதிகளே கைவசம்]

ஆல்சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ்
இல.212, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.021 222 5542

## CHEMISTRY CENTRE

300 பலாலி வீதி (ஆலடிச் சந்தி அருகில்)

**INORGANIC**

ஆரம்பம் 10/08 Wed 5.30 pm.
Wed, Thurs 5.30 - 6.30 pm

BY:- அன்பு

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்வியாண்டு 2011/2012

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப்பட்ட பாடநெறிகளான

* கலை முதற்தேர்வு G.A.Q
* வர்த்தக முதற்தேர்வு

மேற்படி பாடநெறிகளுக்காக இடை நிறுத்தி வைக்கப்பட்ட விரிவுரைகள் 13.08.2011 இல் ஆரம்பமாகின்றன.

- பேராதனைப் பல்கலைக்கழக G.A.Q.,B.A. டிசம்பர் மாதம் பரீட்சை நடைபெறவிருப்பதால் வினாவிடை விரிவுரை பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் வழங்கப்படவுள்ளன. முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும் G.A.Q மாணவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால் மாணவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பேசி இலக்கம்:
0726807756,
0773825266

தொடர்பு: இயக்குநர்,
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
158/18 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[இலங்கை வங்கிக்கு முன்பாக]

(6623)

## விடுமுறைக்கால விசேட கணினிப் பயிற்சிநெறிகள் ஆரம்பம்



Kids Programming (Year2-10)
Microsoft Office, Hardware
Computer Typing (Tamil & English)
Desk Top Publishing
Internet E-mail

**Start on: 11, 13.08.2011**

**Softview Computer College**
43, Arasady Road, Thaddatheru Junction,
Jaffna. T.P No: 0212225170

## புதிய பிரிவுகள்

**Rs.800 Upwards**

**Diploma Courses..**
*MS Office *Accounting
*Web Devel.* Multimedia
*AutoCAD,VB.net, LINUX, ICT,GIT,Kids Prog

**International Courses...**
Computer Engineering, CIMA,IELTS / Toefl
Cisco-CCNA,CCNP ICDL-CAD, BCS-UK
Oracle Java prog., Red Hat Engineer

Degree Course-BIT-University of Colombo

**Free:** ICDL, Dip. in English, Hardware, DTP, Internet & Email

SMS your name & course to 0772 395 895 & get Schol. Reg. Before 12.08.2011

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்

MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org Call 772395895

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

### செல்லையா - சிவசுப்பிரமணியம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1924 | 2011 |
| 09 | 07 |
| 15 | 11 |

நித்தம் உங்கள் நினைவுகள் - எங்கள்
சித்தம் தனை நனைக்கிறதே;
உறவுகளின் உத்தமரே
கனிவான உங்கள் வார்த்தைகள்
நம் காதில் இன்றும் ஒலிக்கிறதே
குடும்பத்தின் சிகரம் நீங்கள்
பிள்ளைகளின் இருப்பிடம் நீங்கள்
உறவுகளின் வழிகாட்டி நீங்கள்

உதவி செய்யும் உங்கள் குணமும்
தீர்க்கமான உங்கள் முடிவும்
எம்மனதில் உம் நினைவுகளாய் தவழ
காலம் செய்த கோலம் காலனவன்
உங்கள் உயிரைப் பறித்ததேனோ
உம் பிரிவை தேற்ற முயல்கின்றோம்
இருந்தும் முடியவில்லை!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் வாய்க்கால்தரவை மூத்த விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி/2228)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்



### விசுவலிங்கம் நாகேஸ்வரி (தங்கம்)

அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (08.08.2011) திங்கட்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நாகலிங்கத்தின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான திரு.திருமதி வைத்திலிங்கத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லிங்கேஸ்வரி மற்றும், திருலிங்கேஸ்வரன், விஸ்வலோஜினி, சிறிலோகேஸ்வரன், ராகவன்,ராகினி, நந்தகுமார், ரஜினி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0212230784

தகவல்:
திருலிங்கேஸ்வரன் (மகன்).

### பிரம்மஸ்ரீ சண்முகசுந்தர சர்மா சபாநாதன்

[ஆசிரியர், திருஞானசம்பந்த வித்தியாசாலை, சுன்னாகம்]

குடியிருப்பு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், கற்பொக்கணை பிள்ளையார் கோயில் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ச.சபாநாதன் நேற்று (09.08.2011) சிவபதமடைந்தார்.

அன்னார் வசந்தியின் பாசமிகு கணவரும் குடியிருப்பு சுழிபுரம் ஸ்ரீவத்ஸ சண்முகசுந்தர சர்மா வாலாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், உடுவில் முருக மூர்த்தி கோயில் பிரம்மஸ்ரீ குகானந்தக் குருக்கள் - நிர்மலாதேவி தம்பதியரின் மருமகனும், பிரம்மஸ்ரீ மோகனகிருஷ்ணன், ஸ்ரீமதி ஸ்ரீவித்தியா, சண்முகராஜேஸ்வர குருக்கள், ஸ்ரீமதி சுபத்திராதேவி, சுரேந்திரசர்மா, பிரம்மஸ்ரீ சிவசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தகுருக்கள், பிரம்மஸ்ரீ கணேசராஜசர்மா, ஸ்ரீமதி செல்வலஷ்சுமி குணாதரசர்மா, செல்வி சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.08.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் முருகமூர்த்தி கோயிலடி உடுவில் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயில்,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

கலாநிதி சிவகாம திலகம்

### சிவஸ்ரீ ஸ்கந்ததாஸக் குருக்கள் - சச்சிததானந்த குருக்கள்

(வேலம்பிராய் கண்ணகை அம்மன் கோயில் தர்மகர்த்தா பிரதம குருக்கள்) நேற்று (09.08.2011) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஸ்கந்ததாசக்குருக்கள் தர்மாம்பாள் தம்பதியரின் நான்காவது புத்திரனும், வாலாம்பிகையின் அன்புக் கணவரும், சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் (வண்ணை சிவன் கோயில்), சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் (பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்), சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் (சுதுமலை அம்மன் கோயில்), மு.நாகபூசணி, கா.மஹாலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2011) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் கேணியடி வீதி, மீசாலை மேற்கில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்:
சிவஸ்ரீ.சிவசாமிக்குருக்கள்,
வண்ணார்பண்ணை(சிவன்)

## Quick Learning Course

## Spoken English with Grammar

Duration
1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

**15 -08- 2011**
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II :02.00 PM - 05.00 PM


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel கேக்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

BCHS

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடிவமைத்து பிரபல்யமடையுங்கள்

**லங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி**

ங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் தனித்துவ அடையாளங்களை நேர்த்தியாக உருவமைக்கும் தகுதியைக் கொண்ட படைப்பாற்றல் மிக்க லஞர்களுக்கு இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் அடையாளங்களை பிரதிபலிக்கின்ற விதத்தில் புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வமைத்து பெயரையும் புகழையும் ரூ.50,000 காசுப் பரிசினையும் பெற்றுக் கொள்வதற்கான அழைப்பினை இலங்கை மத்திய வங்கி விடுக்கிறது.

ட்டிக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் பின்வருமாறு இருக்கும்:

டிவமைப்புக்களை இலங்கையின் 25 மாவட்டங்களில் ிரும்பிய ஏதேனும் மாவட்டம்/ மாவட்டங்களுக்காக மர்ப்பிக்கலாம். அத்துடன், வடிவமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட மாவட்டத்துடன் சேர்ந்து ரையப்பட்ட தோற்றம் அல்லது தொனிப் பொருளும் அத்தகைய தெரிவிற்கான அடிப்படையும் தெளிவாக டுத்துக்காட்டுப்படுதல் வேண்டும்.

டிவமைப்புக்கள் 2009ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு ற்பொழுது சுற்றோட்டத்திலுள்ள ரூ.10 நாணயக் த்தியினையொத்த நாணயக் குத்தியின் முன்புறத்திற்காக முன்பக்கம்) மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அனைத்து வடிவமைப்புக்களும் கறுப்பு வெள்ளையில் இருத்தல் வேண்டும். நிறத்திலமைந்த வடிவமைப்புக்கள் ிராகரிக்கப்படும்.

டிவமைப்புக்கள் A4 அளவு தாளில் 18 செ.மீற்றர் ிட்டத்தில் அமைந்த வட்ட வடிவமொன்றில் வரையப்படுதல் வண்டும். வடிவமைப்புக்கள் 26.4 மி.மீற்றர் விட்டத்தினைக் கொண்ட நாணயக் குத்திக்கு பொருத்தமானவையாக இருத்தல் வேண்டும்.

னினும், ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ டிவமைப்புக்களுடனும் இவ்விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு வடிவமைப்பாளரினால் செய்யப்பட்ட ிரகடனமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ரணமாக நிரப்பப்பட்ட பிரகடனம் இணைக்கப்பட்டிராத ந்தவொரு வடிவமைப்பும் நிராகரிக்கப்படும்.

டிவமைப்பானது, வடிவமைப்பாளரின் அடையாளத்தினை டுத்துக்காட்டக் கூடிய ஏதேனும் அடையாளம், தொடர்பு அல்லது இலச்சினை எதனையும் கொண்டிருக்கக்கூடாது.

வ்வொரு வடிவமைப்பும் வடிவமைப்பாளரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டியதுடன் ஏற்கனவேயுள்ள ற்றைய ஏதேனும் வடிவமைப்பிலிருந்து எடுத்தாளப்பட்டதாக இருக்கக்கூடாது. வடிவமைப்பாளர் இதனை இவ்வறித்தலில் ரப்பட்டுள்ள பிரகடனப் படிவத்தில் குறிப்பிடுதல் வண்டும்.

ரிசு பெறுகின்ற வடிவமைப்புக்கள், இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவின் ிதந்துரைப்புக்களை பரிசீலித்ததன் பின்னர் இலங்கை த்திய வங்கியின் நாணயச் சபையினால் தெரிவு செய்யப்படும்.

9. வெற்றி பெறும் ஒவ்வொரு வடிவமைப்பாளருக்கும் ரூ.50,000 பணப் பரிசு வழங்கப்படும்.
10. சமர்ப்பிக்கப்பட்டு, தெரிவு செய்யப்படாத வடிவமைப்பிற்கு இலங்கை மத்திய வங்கி எந்தவொரு கொடுப்பனவினையும் செய்யமாட்டாது.
11. இலங்கை மத்திய வங்கியினால் வடிவமைப்பானது தெரிவு செய்யப்பட்டதும் அவ்வடிவமைப்பு இலங்கை மத்திய வங்கியின் புலமைச் சொத்தாக மாறி விடுவதுடன் வங்கி அதன் தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான விதத்தில் வடிவமைப்பினை அத்துடன்/ அல்லது வங்கியினால் இறுதியாக மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய முழு தொனிப்பொருளையும் திருத்துவதற்குமான உரிமையையும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கும்.
12. போட்டியாளரின் தனிப்பட்ட தகவல்களை, அஞ்சல் முகவரி, தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் (கிடைக்கத்தக்கதாக இருப்பின்) என்பனவற்றுடன் சேர்த்து ஒவ்வொரு வடிவமைப்புடனும்/ வடிவமைப்புக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
13. அனைத்து வடிவமைப்புக்களும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 07.10.2011 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும், அல்லது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் வரவேற்புப்பீடத்தில் நேரடியாகக் கையளிக்கப்படுதல் வேண்டும்.
14. வடிவமைப்பினைக் கொண்டுள்ள தாளினை மடிக்கக்கூடாது. இதனை பொருத்தமான கடித உறையிலிட்டு பாதுகாப்பான முறையில் சீல் இட்டு 'புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
15. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும், தெரிவு செய்யப்படாத வடிவமைப்பாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.
16. சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற அல்லது நிராகரிக்கின்ற உரிமையினை மத்திய வங்கி கொண்[illegible] நிராகரிப்பதென தீர்மானிக்குமிடத்து அவற்றை நிராகரிக்கும் உரிமை[illegible]

## வடிவமைப்பாளரின் பிரகடனம்

புதிய தொடர் ரூ.10 நாணயக் குத்தியினை வடிவமைப்பதற்கான போட்டி

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................

தொலைபேசி: .............................. மின்னஞ்சல்: ..............................

செல்லிடத்தொலைபேசி: ..............................

நான் மேலே குறிப்பிட்ட போட்டிக்காக .............. வடிவமைப்பினை /வடிவமைப்புக்களை சமர்ப்பித்திருக்கின்றேன் என்பதனை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

அ. என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் எனது சொந்தப் படைப்பு/ படைப்புக்களாகும்.

ஆ. இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு/ வடிவமைப்புக்கள் தொடர்பான அனைத்து உரிமைகளையும் இலங்கை மத்திய வங்கியிடம் கையளிக்க உடன்படுகின்றேன்.

இ. வடிவமைப்பினை இறுதிப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கி அதன தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமாக எனது வடிவமைப்பினை அல்லது அதன் ஒர பகுதியினை மாற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

ஈ. எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்பட்டாலொழிய எனக்கு எந்தவொரு கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என்பதனை நானறிவேன். ஆகவே, எனது வடிவமைப்பு தெரிவு செய்யப்படாவிடின் செலவுகளாக அல்லது கட்டணமாக எந்தவொரு தொகையினையு கோரமாட்டேன்.

.............................. ..............................

கையொப்பம் திகதி

முக்கியம்: அனைத்து வடிவமைப்புக்களுடனும் வடிவமைப்பாளரின் பிரகடனம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உங்கள் வடிவமைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

விசாரணை:
தொலைபேசி: 2477355, 2477603, 2477014, 2477364
மின்னஞ்சல்: currency@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதியதோர் பயணத்திற்கான புதியதோர் சக்தி

உங்களின் முன்னேற்றப் பாதையில் உங்களுடன் கைகோர்த்து சேவை புரிய
சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில்
இப்போது உங்கள் அருகில்

கனரக வாகனங்களின் இன்ஜினை அதிக வெப்பநிலையில் இருந்து பாதுகாப்பதோடு, எண்ணெய் படிதல் மற்றும் துருப்பிடித்தலையும் தடுக்கும் சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில் வடக்கு, கிழக்கு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பெறறுக்கொள்ளலாம்.

அத்தோடு நாடளாவிய ரீதியில் காணப்படும் IOC பெற்றோல் நிலையங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் விநியோகத்தர்களிடமும் பெறறுக்கொள்ளலாம்.

**அம்பாறை மாவட்டம்**
**எஸ்.எஸ். டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**பிரதான வீதி,**
**அக்கரைப்பற்று-01.**
067 3 672315
067 2 277419
0777 664869

**பொலன்னறுவை & திருகோணமலை மாவட்டம்**
**ஜயபிம ஸ்டோர்ஸ்,**
மட்டக்களப்பு வீதி,
பொலன்னறுவை.
027 2 223032
0772 689061

**வவுனியா மாவட்டம்**
**எஸ்.கே.கே. டிஸ்ரிபியூட்டர்ஸ்**
202, சூசை பிள்ளையார் குளம்,
வவுனியா.
024 2 222 555
0777 488 222

**யாழ்ப்பாண மாவட்டம்**
**அஸ்வினி மல்டி பிளாஸா,**
74, ராஜா பிளாஸா, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021 5 677777
021 2 228 032
0773 169488

SERVO®




# அழகான மலர்கள்



எவ்வளவோ செடிகளைப் பார்க்கிறோம். எத்தனையோ மலர்கள். ஒவ்வொன்றும் ஒரு விதம். அந்த மலர்களின் அமைப்பு, மென்மை, அழகு ஆகியவை நம்மை வியக்கவைக்கின்றன. சில செடிகளின் மலர்கள் என்று நினைப்பது உண்மையில் மலர்களாக இருக்காது. சில செடிகளில் வெண்ணிற உறைகளில் இருந்து எட்டிப் பார்ப்பவை மலர்களே அல்ல. மலர் போலத் தோற்றமளிக்கும் போலிகள்! சில செடிகளின் வண்ண இலைகளே மலர்கள் போல் காட்சியளிக்கும்.

என்னதான் இருந்தாலும் மலர்கள் நமக்கு மகிழ்ச்சி தருவனதான்.



## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அன்னை மடியில்: 22.04.1950
இறைவனடியில்: 14.07.2011

### திருமதி சுப்பிரமணியம் ராஜராஜேஸ்வரி (தங்கம்)

( முன்னாள் வர்த்தகரின் அன்பு மகள் - பண்டத்தரிப்பு )

அன்பு அன்னையே தாயின் மடியில்
பூவாய் உதித்து
புதுமைத் தாயாய் உருவெடுத்து
என்னை பாராட்டிச் சீராட்டி வளர்த்த
என் அன்புத் தெய்வமே
என்னைப் புது ஒளியாய் பிரகாசிக்கச்செய்த
என் அம்மா
என்னை விட்டுப் பிரிய உனக்கு எப்படித்தான்
மனம் வந்ததோ என் அம்மா
கல்லோ உன் மனம் நான் கதறுவது
கேட்கவில்லை
ஆண்டுகள் பல சென்றாலும் என் நெஞ்சை விட்டு
நீ அகலமாட்டாய் அம்மா

கடந்த 14.07.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைத்தொடர்புச் சாதனங்களூடாகத் தொடர்புகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் மற்றும் பல வழியில் எமக்கு ஆதரவு தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் (13.08.2011) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

மகன்: எஸ்.பிரதாப்குமார் (MBA),
அவுஸ்திரேலியா
மருமகள்: கங்கா (MBBS)
அவுஸ்திரேலியா
கொழும்பு - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org